பக்கங்கள் 20
20/=
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
05 - 11 ஜீன் 2019
வாரஇதழ்

## சாட்சிகள் இல்லாத போர்

## மதங்களின் பெயரால்...!



# கட்டிவைக்கவேண்டும் இப்போதே

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

எதிரொலி Ethiroli

05-11 ஜூன் 2019

# வன்னியின் குரல்

● கருணாகரன்

# அகவிழி திறப்பது யார்?



மணற் கொள்ளையைப் பற்றிக் கடந்த வாரம் எழுதியிருந்தேன் அல்லவா. அதைப் படித்த பலரும் "இந்த அளவுக்கு இந்தக் கொள்ளை நடக்கிறதா?" என்று ஆச்சரியப் பட்டார்கள். "இதைத் தடுப்பதற்கு என்ன வழி?" என்று சிலர் (அப்பாவித்தனமாக ஆனால் அக்கறையோடு) கேட்டனர். இன்னொரு சாரார் "இது பெரிய ஆபத்தாச்சே!" என்று துக்கம் தொனிக்க வியந்தனர். இதில் சிலர் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

"உங்கட கண்ணுக்கு முன்னால தினமும் இரவு பகலாக நூற்றுக்கணக்கான டிப்பர்கள் மணலோடும் கிறவலோடும் போய்க்கொண்டிருக்கின்றன எண்டால் அதெல்லாம் என்ன? அந்த மணல் எங்கேயிருந்து வருது? எப்படி எடுக்கப்படுது? இதற்கான அனுமதி உண்டா? அப்படியென்றால் எந்தளவுக்கு அனுமதி? எண்டு யாருமே சிந்தித்திருக்கிறீங்களா?" என்று கேட்டேன். "இப்படித்தான் கிறவலும் கல்லும் கூட".

"யுத்தத்துக்குப் பிறகு பெரிய அளவில் அபிவிருத்தியும் புனரமைப்பும் நடக்க வேண்டியிருக்கு. அதுக்கு மணல் தேவை. கிறவல் வேணும். கல்லுந்தான். இதுக்கெல்லாம் எங்க போறது? இதையும் வெளிநாட்டில இருந்து இறக்குமதி செய்ய வேணுமா?" என்று கேட்கிறார் ஒருத்தர்.

"யுத்தத்தினால் அழிந்து போனதையெல்லாம் மீளக் கட்டுவதற்கு நிச்சயமாக இந்தப் பொருட்களெல்லாம் தேவைதான். அதுக்காக முறையான திட்டமில்லாமல், கண்டபாட்டுக்கு இவற்றை அகழலாமா? இது இயற்கையை, சூழலைக் கடுமையாகப் பாதிக்குமே!" என்றேன்.

"முறையான அனுமதி இல்லாமல் நடந்தால் தப்புத்தான். அரச நிர்வாகத்தின் தவறுகளைச் சரி செய்தால் எண்டு சனங்கள் தடுக்க முற்பட்டால் சனங்களைத் தாக்குவதற்கென்றே அடாவடிக்குழுக்களை மண் கொள்ளையர்கள் வைத்திருக்கிறார்கள். இதில் டிப்பர்கள் மட்டுமில்லை. உள்ளூரில் உள்ள ட்றக்ரர்காரர்களும் அடங்கும்" என்றேன். "இது ஒன்றும் ரகசியமான விசயமும் இல்லை"

"அப்ப என்னதான் செய்யிறது?" நண்பருக்குக் குழப்பம். "இந்தப் பிழையான விசயத்துக்கு ஒரு பக்கத்தில சனங்கள் எதிர்ப்புக் காட்டுகினம். இன்னொரு பக்கத்தில இதை இன்னொருதரப்புச்சனங்கள் ஊக்கப்படுத்துதுகள். தங்களுக்குத் தேவையான மணலோ கிறவலோ கிடைத்தால் போதும் எண்டு இவை நினைக்கினம். இப்பிடியிருக்கும்போது மணல் அகழ்வும் கிறவல் எடுப்பும் சரியாக நடக்குதா? இதனால் பாதிப்புகள் ஏற்படாதா? எண்ட கேள்வி எப்படி எழும். இதால இன்னொரு பக்கத்தில சனங்களும் ஒரு வகையில் பொறுப்பே?" என்றேன்.

நண்பர் பதிலே சொல்லவில்லை. ஆச்சரியத்தில் உறைந்து போயிருந்தார். "ஆகவேதான் இதை வாய்ப்பாக எடுத்துக் கொண்டு பொறுப்பான தரப்புகள் பொறுப்பற்று நடக்கின்றன. உழைக்க வேண்டிய நேரத்தில் உழைப்போம் எண்டு ஆளாளுக்கு ஊழல் செய்யிறார்கள். ஊழலுக்கு சனங்களும் ஒரு காரணம். தங்கட காரியம் நடக்க வேணும் எண்டதுக்காக கீழாலயும் மேலாலயும் எதையாவது குடுத்துச் சரிக்கட்டுவம் எண்டு நினைச்சுச் செய்யிற வேலை சமூகத்தையும் கெடுத்து நாட்டையும் அழிக்குது என்றேன்.

நண்பருக்கும் இதெல்லாம் தெரியும். ஏன் உங்களுக்கும் கூட இதைப்பற்றி நிறையத் தெரியும். ஆனால் இந்த (கள்ள) பூனைகளுக்கு யார் மணி கட்டுவது? இதுதான்

ஒரு மாற்று ஏற்பாடாக, தனியாருக்கு இந்த அகழ்வுகளுக்கான உரிமங்களைக் கொடுப்பதற்குப் பதிலாக பொது அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவற்றுக்கு இதை வழங்கலாம். அல்லது பகிரங்கமாக ஏலம் போடலாம். கண்காணிப்புக்குச் சமூக மட்டத்திலான குழுவினரை நியமிக்கலாம். இதனால் ஓரளவுக்கு இந்தச் சட்ட விரோத அகழ்வுகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஏனெனில் சங்கங்களையும் அமைப்புகளையும் கட்டுப்படுத்தவும் கண்காணிக்கவும் ஏற்பாடுகள் உண்டு. விசாரணை செய்வதற்கான அதிகாரமும் அரசுக்குண்டு. இதனால் ஊழலையும் பெருமளவில் கட்டுப்படுத்தலாம். ஆனால், இதை யாரும் செய்யப்போவதில்லை. சம்மந்தப்பட்ட அதிகாரத்தரப்புகளுக்கு இலாபம் தருகின்ற ஒரு விசயத்தை அவர்கள் இலகுவில்விட்டுவிட மாட்டார்கள்.

பூகவே சனங்கள்தான் இதைக் கையில் எடுக்க வேணும். இதற்கான மாற்றத்தை. ஏனெனில் சனங்கள்தான் இதனால் முதலில் பாதிக்கப்படுவதும். கூடுதலாகப் பாதிக்கப்படுவதுமாகும்.

மணல் அகழப்படும் இடங்களில் சென்று பாருங்கள்.

இதைச் சீர்ப்படுத்தலாம்" என்கிறார் அவர். நான் விழிகளை உயர்த்தினேன். நடக்கிற காரியமா இது? அதுவும் இந்தச் சூழலில்?

"அரச நிர்வாகம் பல வழிகளிலும் சீர்கெட்டிருக்கு. அரசாங்க அதிபர்களுக்கு ஆட்டுக்கறியும் விஸ்கிப்போத்தல்களும் தானமாக வழங்கப்படுதாம். கூடவே கட்டிட ஒப்பந்தங்கள், மணல் அகழ்வு, கிறவல் அகழ்வு எல்லாத்துக்கும் பத்து வீதம் வாங்கப்படுது என்கிறார்கள். இது சனங்களின் தகவல். சனங்களுக்குப் பகிரங்கமாகத் தெரிஞ்ச விசயம், அரசியல் தலைவர்களுக்குத் தெரியேல்ல. பேப்பர் காரருக்குத் தெரியேல்ல எண்டது விசித்திரந்தான். பத்து வீதம் எல்லாற்றை வாயையும் அடைச்சிட்டுது போல. இதாலதான் சட்டவிரோதமாக இந்தக் கொள்ளையெல்லாம் நடந்து கொண்டிருக்கு. பொறுப்பான கனியவளங்கள் திணைக்களம் தொடக்கம் வீதிச் சோதனையிலீடுபடும் பொலிஸ் வரையில் இதைச் சரியாகக் கண்காணித்தால் உடனடியாகவே இதைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், அது சாத்தியப்படக்கூடிய நிலை இல்லை" என்றேன்.

"அப்படியென்றால் இதை ஆர் தடுக்கிறது?" என்று கேட்டார் நண்பர். அவருக்கு ஒன்றுமே புரியவில்லைப் போலும். "நாங்கள்தான் தடுக்க வேணும். அதாவது மக்களாகிய நாங்கள். ஆனால் அது எளிய விசயமில்லை. சட்டவிரோதமாக மணல், கிறவல் அகழ்வு நடக்குது எண்டு பொலிசுக்கோ கனியவளங்கள் திணைக்களத்துக்கோ தகவல் கொடுத்தாலும் அவர்கள் உரிய நடவடிக்கையை, உரிய நேரத்தில் எடுப்பதில்லை. பதிலாகக் கண்டும் காணாமலும் இதை விட்டு விடுகிறார்கள். சில இடங்களில் சனங்கள் வீதிக்குக் குறுக்கே தடைகளைப் போட்டிருக்கினம். ஆனால், அதையும் மீறி டிப்பர்கள் ஓடிக் கொண்டுதானிருக்கு. இடையில் சில நல்ல அதிகாரிகளோ உத்தியோகத்தர்களோ விசுவாசமாகத் தடுத்தால் பெரிய இடங்களில் இருந்தும் மேலிடங்களில இருந்தும் உத்தரவு வரும். தடையை மீறி வேண்டாம் தீராத பிரச்சினை.

மண் பற்று, தேச விடுதலை, சூழல் பாதுகாப்பு பற்றியெல்லாம் வாய் கிழியப் பேசுகிறார்கள் எல்லோரும். ஆனால் இவற்றைக் குறித்து எங்குமே பேசியதாகவோ அக்கறைப் பட்டதாகவோ தெரியவில்லை. குறிப்பாக ஊடகங்களும் அரசியல்வாதிகளும் கட்சிகளும்.

இவர்கள் நினைத்தால் - முன்வந்தால் - நிச்சயமாக இந்த மணற் கொள்ளையைத் தடுக்க முடியும். சட்ட விரோதக் கிறவல் அகழ்வைக் கட்டுப்படுத்தலாம். ஊடகங்கள் ஆதாரங்களோடும் விவரங்களோடும் இந்தக் கொள்ளையை பகிரங்கப்படுத்த முடியும். அதற்காக துணிச்சலோடு களமிறங்க வேண்டும். தகவல் ஆதாரங்களைத் திரட்ட வேண்டும். சனங்கள் அநீதிக்கு எதிராகவே எப்போதுமிருக்கிறார்கள். ஆகவே இதற்கு நிச்சயமாகச் சனங்களின் ஆதரவும் உதவியும் கிடைக்கும்.

ஊடகங்களுக்கு ஆதரவாகவும் அனுசரணையாகவும் சமூகமிருப்பது அவசியம். அரசியல் தலைவர்களும் கட்சிகளும் இதற்கு ஆதரவாகச் செயற்பட வேணும். அது அவர்களுடைய கடமை. சமூகத்தையும் சூழலையும் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு அவர்களுக்கே உண்டு. அதற்கான அதிகாரமும் ஆளணி வசதிகளும் அவர்களிடமிருக்கின்றன.

ஆனால், வேலியே பயிரை மேய்கிறமாதிரி இருப்பவர்களை எப்படி இதற்குப் பொறுப்பாக்க முடியும்? என்பது சனங்களின் கேள்வி. காவலாளியே கள்வனாக மண்கொள்ளையிலும் கிறவல் அகழ்விலும் ஈடுபடுகிறார்கள் என்றால் யாரிடம் முறையிடுவது? யாரிடம் நீதியைக் கேட்பது?

கிடைக்கின்ற தகவல்களின்படி அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகள், காவல்துறைத் தரப்புகளின் டிப்பர்களே கூடுதலாகச் சட்டவிரோத அகழ்வுகளில் ஈடுபடுகின்றன என்பது உண்மையே. வன்னியில் பகிரங்கமாகவே இதைச் செய்வதாகச் சனங்கள் பேசுகின்றனர். இப்படியிருந்தால் எப்படி இதைக் கட்டுப்படுத்துவது? தடுப்பது?

அங்கே யார் இருக்கிறார்கள். எப்படியான நிலையில் அவர்களுடைய வாழ்க்கை இருக்கிறது என்பதை. கிறவல் குழிகளுக்கு அண்மையாகவும் கற்குவாறிகளுக்குப் பக்கத்திலும் இருப்பவர்கள் எல்லாம் ஏழைகள், பின்தங்கியோரே. எனவே முழுப் பாதிப்பும் இவர்களுக்கே ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் துயரமான உண்மை என்னவென்றால், இவர்களை வைத்தே இந்த சட்டவிரோதச் சங்கதிகளைச் செய்கின்றன ஊழற் பூதங்கள். சில்லறைக்கு இவர்களில் சிலரை தங்களுக்கு ஏற்றமாதிரி மாற்றி, இவர்களை வைத்தே வேவு பார்ப்பது, மணல் அகழ்வது, வேட்டையாடுவது என.

வன்னிச் சனங்கள் சூழலைப் பாதுகாத்து வாழ்ந்தவர்கள். சூழலோடு இணைந்து வாழ்ந்தவர்கள். அப்படியான வாழ்க்கையைக் கொண்டிருந்த சனங்கள் இன்று சூழலை அழித்து வாழும் வாழ்க்கைக்குள் சிக்குப்பட்டிருக்கிறார்கள். மண்ணை நம்பி வாழ்ந்த வாழ்க்கை மாறி, மண்ணை விற்று வாழ்கிற ஒரு வாழ்க்கையில் சிக்கியிருக்கிறார்கள். காட்டைப் பாதுகாத்து வாழ்வதை விட காட்டை அழித்து வாழ்வது சுலபமானது என்று ஆகிவிட்டது.

இதை அவர்கள் புரிந்து கொண்டாலும் வேறு வழியில்லை என்ற நிலையிலிருக்கிறார்கள். ஆனால், நிச்சயமாக இவர்களை இதிலிருந்து மீட்டே ஆக வேண்டும். அழிவுப் பாதையிலும் அழிவுப் பண்பாட்டிலும் எவரையும் நாம் விட்டு விடுவது நல்லதல்ல.

இதைக்குறித்து யார் அகவிழி திறப்பது? நிச்சயமாக இந்தப் பேராபத்துக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேணும். இல்லையென்றால் அழிவு நிச்சயம். அது முள்ளிவாய்க்கால் பேரழிவையும் விட மோசமானதாகவே இருக்கப்போகிறது. ஆமாம், இதுவொரு சூழலியற் படுகொலையே! ■

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# கட்டிவைக்க வேண்டும் இப்போதே!

நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். ஆனால் இலங்கையில் பிக்குகளின் கலகம் பெரும் துயரங்களையே பரிசளித்திருக்கிறது.

அமைச்சர் ரிஷாத் பதியுதீன், ஆளுநர்கள் அஸாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோரை உடனடியாகப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று கோரி அத்துரலிய ரத்தின தேரர் கண்டி தலதா மாளிகையில் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டம் ஒட்டுமொத்தமாக முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகும் நிலைக்கு கொண்டு சென்று விட்டது.

ஆரம்பத்தில் மிகச் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டம், பொதுபல சேனாவின் ஞானசார தேரர் களம் இறங்கியவுடன் இன்னொரு பரிணாமத்தைப் பெற்றுவிட்டது. “24 மணித்தியாலங்களுக்குள் முஸ்லிம் அமைச்சரும் ஆளுநர்களும் பதவி விலகாவிட்டால், ஒட்டுமொத்த இலங்கையும் கொந்தளிக்கும்.” என்று ஞானசாரதேரர் கர்ச்சிக்க, அதனை பெரும்பான்மையான சிங்கள மக்கள் வழிமொழிந்தனர். பல்வேறு விகாரைகளில் அத்துரலிய ரத்தின தேரரின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவாக அடையாளப் போராட்டங்கள் பரவலடைந்தன. உண்ணாவிரதப் போராட்டத்தின் மையப் புள்ளியாக அலரிமாளிகையை நோக்கி சிங்கள மக்களும், அரசியல்வாதிகளும், பிக்குகளும் அணி திரண்டு தங்கள் ஆதரவை வெளிப்படுத்த, சனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கண்டியே திணறியது.

ஒட்டுமொத்த இலங்கையும் – சிறுபான்மையினரைத் தவிர – தமக்கு எதிராக திரும்புவதை உணர்ந்து கொண்ட முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஆளுநர்களும் அமைச்சர்களும் இனியும் இருந்தால் பெரும் கலவரம் நேரும் என்பதை உணர்ந்து தாமாகவே பதவியிலிருந்து விலகிக்கொண்டனர்.

இத்தனைக்கும் ஆளுநர்களான அஸாத் சாலி, ஹிஸ்புல்லா, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் என்ன குற்றம் செய்தார்கள் என்று எவருமே சொல்லவில்லை. அவர்கள் மீது எந்தவொரு விசாரணையும் நடத்தப்படாமலேயே, எந்தவொரு குற்றமும் சுமத்தப்படாமலேயே தண்டிக்கப்பட்டுள்ளார்கள். ஒரு வகையில் இந்தத் தண்டனை குறித்த முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அனுதாப அலையை உண்டாக்கி அடுத்த தேர்தலில் இன்னும் அமோக வாக்குகளோடு வெல்ல உதவக் கூடும்.

ஆனால், எந்தக் காரணகாரியமுமின்றி பிக்கு ஒருவர் உண்ணாவிரதம் இருப்பதன் ஊடாக ஆளுநர்களையோ அமைச்சர்களையோ பதவி நீக்கம் செய்வது என்பது ஒரு தவறான முன்னுதாரணமாகவே அமையும்.

இன்றைக்கு முஸ்லிம் ஆளுநர்களையும் அமைச்சர்களையும் பதவி விலகச் செய்த பிக்குகள், நாளை இனப் பிரச்சினைக்கான தீர்வு முன் வைக்கப்படும் போது இதேபோல ஒரு ‘அகிம்சைப் போராட்ட’ நாடகமாடி அதனை நீர்த்துப்போக வைக்கலாம். ஏற்கனவே பண்டா – செல்வா ஒப்பந்தத்தை இதே பிக்குகள்தான் கிழித்தெறிய வைத்தார்கள். அதனால்தான் அன்றைக்கே தீர வேண்டிய இனப்பிரச்சினை இன்றளவும் நீண்டு கொண்டே இருக்கிறது.

“பஞ்சசீலங்களை பேணாத பிக்குகள் நாய்களைப் போல கட்டி வளர்க்கப்பட வேண்டியவர்கள்.நான் கட்டி வைத்த பிக்குகளை பண்டாரநாயக்கா அவிழ்த்து விட்டார். அதனால், அவர் அதே பிக்குகளால் கொல்லப்பட்டார்.” என்று ஒரு முறை சேர்.ஜோன் கொத்தலாவல சொன்னது இன்றளவும் பொருத்தமான தாகவே இருக்கின்றது. தேவையின்றி அரசியலில் மூக்கை நுழைத்து கலவரத் தீயை மூட்டும் பிக்குகளை இனியும் அரசு சட்டத்தால் கட்டி வைக்கா விட்டால், முழு இலங்கையையுமே கடித்து குதறிவிடுவார்கள் என்பதே யதார்த்தம்.

“உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்”



# ‘சாட்சிகள் இல்லாத போர்’



இந்த ஆண்டு, ருவாண்டா இனப் படுகொலையின் 25ஆவது ஆண்டு நிறைவையும், இலங்கையில் இடம்பெற்ற தமிழ் இனப் படுகொலையின்10ஆவது ஆண்டு நிறைவையும் குறிக்கின்றது. 1994ஆம் ஆண்டில் இடம்பெற்ற ருவாண்டா இனப் படுகொலை இப்பொழுது உலகின் கூட்டு நினைவுக் காப்பகத்தின் ஒரு பாகமாகியுள்ளது. ஆனால், 2009ஆம் ஆண்டில் இடம்பெற்ற தமிழ் இனப்படுகொலைச் சம்பவங்கள் இன்னமும் அவ்வாறு உலக மக்களின் கூட்டு நினைவில் ஒரு பாகமாக உள்ளடக்கப்படவில்லை.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் தினம் மே மாதம் 18ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த அஞ்சலி நிகழ்வுக்கு, வரலாறு காணாத மிகக் கொடூரமான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் கிராமத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இலங்கைப் போரின் போது கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் ஒரு நாளாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம் இருந்து வருகின்றது. இத்தகைய நிகழ்வுகள் இந்த மாதம் நெடுகிலும் உலகெங்கிலும் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன.

எவ்வாறிருப்பினும், போர் முடிவடைந்து 10 வருடங்கள் கடந்திருக்கும் நிலையிலும், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இலங்கை தொடர்பாக தொடராக பல அறிக்கைகள் வெளியிடப்பட்டு, பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டிருக்கும் பின்னணியிலும் கூட, இலங்கையில் குற்றச் செயல்களினால் பாதிக்கப்பட்டு, வாழ்ந்து வருபவர்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் விடயத்தில் சிறிதளவு முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. அதாவது, இக்குற்றச் செயல்கள் தொடர்பாக உண்மைகளைக் கண்டறிந்து, அவற்றுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களை பொறுப்புக் கூற வைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் சிறிது முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது. அண்மையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இனக் கலவரங்கள் குறித்த அச்சம் நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

ருவாண்டா இனப் படுகொலை இலங்கைக்கு மிக முக்கியமான சில படிப்பினைகளை வழங்குகின்றது.

### டுட்சி இன மக்களின் படுகொலை

ருவாண்டாவில் 1994ஆம் ஆண்டில் மிகக் குறுகிய ஒரு காலப் பிரிவான 100 நாட்களுக்குள் மிதவாத அரசியல் கருத்துக்களைக் கொண்டிருந்த ஹூட்டு பிரிவைச் சேர்ந்த மக்களையும் உள்ளடக்கிய விதத்தில் சுமார் 800,000 டுட்சி பிரிவைச் சேர்ந்த மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். இனத்துவ பெரும்பான்மையினரான ஹூட்டு பிரிவினரால் திட்டமிடப்பட்ட விதத்தில் முன்னெடுக்கப்பட்ட பாலியல் வன்முறை மற்றும் சித்திரவதை என்பவற்றுக்கு மேலும் பல்லாயிரக் கணக்கானோர் பலியானார்கள்.

பதினைந்து ஆண்டுகளின் பின்னர் இதே மாதிரியான மற்றொரு படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது - இம்முறை இது இலங்கையின் வட பிரதேசத்தில் நிகழ்ந்தது. இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் (எல்ரீரீஈ) இயக்கத்துக்கும் இடையில் நீண்டகாலம் இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தம் அழிவுகரமான விதத்தில் முடிவுக்கு வந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கொடூரம் நிகழ்ந்தது. அதனுடன் இணைந்த விதத்தில், தமிழ் சிறுபான்மையினருக்கான சுதந்திர நாடு ஒன்று குறித்த இலட்சியமும் கைநழுவிப் போனது.

இலங்கையில் இடம்பெற்ற போராட்டம் நெடுகிலும் அதில் சம்பந்தப்பட்டிருந்த இரு தரப்புக்களுமே மனித உரிமைகளுக்கும், சர்வதேச மனிதநேய சட்டத்துக்கும் மதிப்பளிக்கத் தவறியிருந்தன. இலங்கை பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோதமான கொலைகள் மற்றும் வலிந்து ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் என்பன அநேகமாக நாளாந்த நிகழ்வுகளாக இருந்து வந்தன. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் சிறுவர்களைப் போராளிகளாகப் பலவந்தமாக ஆட்சேர்ப்புச் செய்தமை என்பன தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அநேகமாக 2000ஐ அடுத்து வந்த ஆண்டுகள் முழுவதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்கிலும், கிழக்கிலும் இணையான ஒரு அரசை செயற்படுத்தி வந்தது. 2009ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புலிகள் எதிர்கொண்ட இராணுவ ரீதியான தோல்விகளையடுத்து வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அந்த இயக்கம் நடத்தி வந்த சிவில் நிர்வாகம் படிப்படியாக முறியடிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வட கிழக்கு கரையோரப் பிரதேசத்தில் அமைந்திருந்த ஒரு சிறு நிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராளிகளும், சுமார் 330,000 தமிழ் சிவிலியன்களும் சிக்கிக் கொண்டிருந்தனர். சர்வதேச ஊடகங்கள் வெளியேற்றப்பட்ட நிலையில், உள்ளூர் ஊடகவியலாளர்கள் மௌனிக்கச் செய்யப்பட்டிருந்தனர். இந்தப் பின்னணியில், இப்பிராந்தியத்தில் செயற்பட்டு வந்த ஐ.நா. அமைப்பைச் சேர்ந்த ஒரு சில சர்வதேச களப் பணியாளர்களை விலக்கிக் கொள்ளுமாறு அரசாங்கம் ஐ.நாவுக்குக் கட்டளையிட்டது.

### கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரிய படுகொலைகள்

கையடக்கத் தொலைபேசி புகைப்படங்கள் மற்றும் ஒரு சில வீடியோக்கள் என்பன கட்டவிழ்த்து விடப்பட்ட படுகொலைச் சம்பவக் காட்சிகளை எடுத்துக்காட்டும் விதத்தில் சுற்றுக்கு விடப்பட்டிருந்தன. போர் இடம்பெற்ற பிரதேசங்களில் அமைந்திருந்த வைத்தியசாலைகளை இலக்காகக் கொண்டு முறையான அடிப்படையில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதேபோல, உணவு விநியோக வாகன அணிகள் மீதும், காயப்பட்டவர்களை வெளியே எடுத்துச் செல்ல முயற்சித்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பல் களின் மீதும் கூட இத்தகைய தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

உத்தியோகபூர்வமாக “பாதுகாப்பு வலயமாக” பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ஒரு பிரதேசம் ஒரு சில மாதங்களுக்குள் கொடூரமான ஒரு முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், அங்கு ஒன்றுதிரண்டிருந்த தமிழ் சிவிலியன்களின் மீது கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்து போர் முடிவுக்கு வந்தது. இலங்கை அரசாங்கம் அதன் வெற்றிகரமான “மனிதநேய மீட்புச்செயற்பாட்டைக்” கொண்டாடியது. உண்மையிலேயே அது ஒரு இனப்படுகொலையாகும்.

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி சேவை 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அளவில் இலங்கை இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணைகள் எவையுமற்ற மரண தண்டனைகள் மற்றும் பாலியல் வன்முறை என்பன தொடர்பான மிகக் குரூரமான படங்களை ஒளிபரப்புச் செய்தது. புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும், பெருந்தொகையான சாதாரண பொதுமக்களும் பாதுகாப்பு வலயத்திலிருந்து (14 ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
05 -11 ஜுன் 2019

# சஹ்றான் குழும்பலின் பின்னணி



(ஆங்கிலத்தில் :- மீரா ஸ்ரீனிவாசன் - (த ஹிந்து).
தமிழில் :- ஞா.பிரகாஸ் - (ஆறாம் அறிவு).

ஒட்டுமொத்த இலங்கையையும் ஒரே கணத்தில் அதிரச் செய்த, ஈஸ்டர் குண்டுவெடிப்புகளின் சூத்திரதாரிகளான சஹ்றான் உள்ளிட்ட ஒன்பது தற்கொலைக் குண்டுதாரிகளும் பெயர்கள் அறிவிக்கப்படாமல் இருந்தனர். ஒரு வாரத்தில் ஒவ்வொருவரையும் பொலிஸார் அடையாளம் கண்டு கொண்டனர். அதில் இருந்து, அவர்களது கதைகளும் வெளிப்பட ஆரம்பித்தன.

அடிப்படைவாதப் போதகரும், குண்டுத் தாக்குதல்களின் தலைவனாகவும் குற்றம்சாட்டப்படுபவர் மொஹமட் சஹ்றான் (வயது- 33). அவரது சொந்த ஊரான கிழக்கு மாகாணம் - காத்தான்குடியில் அவர் சிறிது அங்கீகாரத்தை பெற்றவராக இருந்தார். முஸ்லிம் நகரங்களில் உள்ள பிரதான மசூதிகள் அவரை நிராகரித்திருந்தன. அவர், 2017 ஆம் ஆண்டில் குழு மோதல் ஒன்றினையடுத்து தப்பிச் சென்றிருந்தார்.

ஆனால், கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஏனைய தாக்குதலாளிகள் சஹ்றானைப்போன்று அடிப்படைவாத முஸ்லிம் பகுதிகளைச் சேர்ந்தவர்களல்லர். அவர்கள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள். இந்த அடிப்படைவாதிகள் பல்வேறு நேரங்களில், பல்வேறு காரணங்களுக்காக சமூக வலைத்தளம் மூலமும், நேரடியாவும் சஹ்றானை தொடர்பு கொண்டுள்ளனர்.

குற்ற விசாரணை பிரிவு (சிஐடி) மற்றும் பயங்கரவாத விசாரணை பிரிவு (ரிஐடி) ஒன்பது தற்கொலை குண்டுதாரிகளையும், இரண்டு தீவிரவாத அமைப்புக்களையும் கண்டு பிடித்தனர். தேசிய தௌஹீத் ஜமாஅத் என்ற அமைப்பு சஹ்றான் தலைமையிலும், ஜமாஅத்தி மில்லாத்தி இப்ரஹிம் என்ற அமைப்பு சமூக வலைத்தளத்தில் ஒன்றிணைந்த இளைஞர்களினாலும் உருவாக்கப்பட்டிருந்தன.

உள்ளக அதிகார மோதல்களால் சீர்குலைந்த இரு அமைப்புக்களும் சஹ்றானால் புத்துணர்ச்சியோடு மீளக்கட்டமைக்கப்பட்டன. அவற்றின் நோக்கங்கள் மட்டுமல்லாது, அவை இயங்கி வந்த இடங்களும் மாற்றப்பட்டன. அவர்கள் அதி தீவிர மத சித்தாந்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டு, தொழில்நுட்பத்துடன் இணைக்கப்பட்டனர். கடைசியில் ஏப்ரல் 21 அன்று தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்தி 250 பேரை கொன்றனர். அவர்கள், அமைதியாகவும், திறமையாகவும் இரகசியமான முறையிலும் பயங்கரவாத வலையமைப்பை கட்டியெழுப்பியுள்ளனர்.

### பணக்காரச் சகோதரர்கள்

இஷானா ஏற்றுமதி நிறுவனம்கிட்டத்தட்ட மூன்று தசாப்தம் பழமைவாய்ந்த ஏற்றுமதி நிறுவனமாகும். அதன் நிறுவுநர் வை.எம்.இப்ரஹிம் இலங்கையின் மிக முக்கியமான பணக்காரராக அறியப்படுகிறார். அவரது நண்பர்கள் அனைவரும் அரசியல் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். இத்தகைய சூழலில் அவரது மகன்கள் வியாபாரத்தையும், செல்வத்தையும், நல்லெண்ணத்தையும் பெற்றவர்களாகவும் இருந்திருக்க வேண்டும். ஆனால், மாறாக அவர்கள் தற்கொலைக்குண்டுத்தாரிகளாக மாறியுள்ளனர். இப்போது அவர்களது தந்தையை சிஐடியினர் தடுத்துவைத்து விசாரித்து வருகின்றனர்.

இன்ஷாப் அஹமட் மொஹமட் இப்ரஹிம் (வயது-33). அவர் இஷானா ஏற்றுமதி நிறுவனத்தின் மூத்த உறுப்பினரான முதலாளியின் மகன். இன்ஷாப், பிரபலமாக அறியப்படும் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் பயின்றவர். அவர் பல்கலைக்கழகம் செல்லவில்லை. ஆனால் மசாலா வர்த்தகத்தின் தந்திரங்களை கற்றுக்கொண்டார். ஒன்பது உடன்பிறப்புக்களில் இன்ஷாப் இரண்டாவது, மற்றும் இல்ஹம் மூன்றாவது மகனுமாவார்கள். அவர்கள் வர்த்தகத்தில் நேரடியாக ஈடுபட்டனர். இருவரும் நிறுவனத்தின் பணிப்பாளர்களாக இருந்தனர். அவற்றில் இன்ஷாப் தீவிரமாக வியாபாரத்தில் செயற்பட்டவர் என்று அவரது நிறுவனத் தகவல் ஒன்று கூறுகிறது. இருவரும் அடிக்கடி இந்தியா சென்று பணியாற்றியுள்ளனர். "இன்ஷாப் எமது முதலாளியாக இருந்தாலும் அவர் எமக்கு கட்டளையிட்டத்தில்லை. உதவி கேட்பது என்றால் "இதை செய்ய முடியுமா என்றுதான் கேட்பார்" என்கிறார்கள் அவரது பணியாளர்கள். ஆனால், மறுப்புறத்தில் "இல்ஹம் ( வயது - 31) குடும்ப நிகழ்வுகளில் அரிதாகவே கலந்து கொள்வார், மக்களுடன் பெரிதாக பேசமாட்டார்" என்று ஒரு குடும்ப உறுப்பினர் கூறுகிறார்.

கடந்த ஓராண்டாக இந்தப் பணக்காரச் சகோதரர்கள் இருவரின் நடத்தையிலும் பணியாளர்களும், குடும்பத்தினரும் மாற்றத்தை கவனித்துள்ளனர். இன்ஷாப், தந்தையின் எதிர்ப்பை மீறி வட்டிக்கு கடன் வாங்கினார். அத்தோடு, இவர்கள் இருவரும், கடந்த ஆண்டு நிறுவனக் குழுவில் இருந்தும் விலகினர்.

இன்ஷாப் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெல்லம்பிட்டியில் அமைத்த செப்பு தொழிற்சாலையை தொடர்ந்தும் வழி நடத்தினார். இல்ஹம் தமது நிறுவனத்தில் ஒரு பகுதியை நிர்வகித்தார். ஏப்ரல் - 18 ஆம் திகதி சென்றுவந்த, சினமன்ட் கிரான்ட் ஹோட்டலுக்கு இன்ஷாப் சென்று தன்னை வெடிக்க வைத்தார். அதேபோல், குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரி சஹ்றான் மற்றும் இல்ஹகம் அருகில் உள்ள சங்கரிலா ஹோட்டலில் வெடித்தனர். அதேநாளில், இல்ஹமின் கர்ப்பிணி மனைவி பாத்திமா தெமட்டகொடயில் தற்கொலைத் தாக்குதலை நிகழ்த்தினார்.

சகோதரர்கள் இருவரும் முகநூல் மற்றும் தனிப்பட்ட தொலைத் தொடர்பாடல் மூலம் சஹ்றானுடன் தொடர்பை பேணி வந்திருக்கலாம் என்று விசாரணையாளர்கள் நம்புகின்றனர். "தாக்குதலின் பிரதான நிதி வழங்குநராக இல்ஹம் இருப்பதாக" உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### வெளிநாடுகளில் தீவிரவாதம்

தொலைக்காட்சி ஒன்று, தாஜ்சமுத்ரா ஹோட்டலில் எடுக்கப்பட்ட, சிசிடிவி காட்சியை வெளியிட்டது.

லதீப் ஜமீல் மொஹமட் (வயது - 36) உணவகக் கதிரையில் அமர்ந்திருக்கிறார் ,சுமையான தனது பின்பக்கப் பையுடன். ஏனைய இடங்களில் தாக்குதல் நடந்த சில நிமிடங்களில் அவர் அங்கிருந்து வெளியேறுகிறார். ஊழியர் ஒருவர் அவரது பையினைக் கொண்டு செல்ல உதவினார். ஐந்து மணி நேரங்களின் பின்னர் அவர் தெஹிவளையில் சிறிய ஹோட்டல் ஒன்றில் வெடித்தார். ஜமீல், லண்டனில் கிங்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் 2005 - 2006 விண்வெளிப் பொறியியல் பயின்றார். பின்னர், முதுகலைப் பட்டத்திற்காக அவுஸ்திரேலியா சென்றார். அங்கிருந்து 2013 ஆம் ஆண்டு வெளியேறியுள்ளார். ஜமீலின் சகோதரி சம்சுல் ஹிதாயா "பிரிட்டனில் பயின்ற போது, அவர் சாதாரணமாக இருந்தார். ஆனால், அவுஸ்திரேலியா சென்று வேறு ஒரு மனிதராக இலங்கைக்குத் திரும்பினார்" என்று சொல்கிறார்.

அவுஸ்திரேலியத் தகவல்களின்படி, அவுஸ்திரேலியாவில் தேடப்படுபவராக இருக்கும் ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி நெயில்ப்ரகனுடன் தொடர்பைப் பேணிய ஜமீல் வெளிப்படையான தீவிரவாதச் சார்பானவராக அடையாளப்படுத்தப்பட்டார். ஜமீல் முன்னதாகவே, அடிப்படைவாதியாகிவிட்டார். அவர் பிரிட்டனில் இருந்த போது பிரிட்டிஷ் இஸ்லாமிய அறிஞரான அன்ஜம் சௌத்தரியை சந்தித்தார். 2003ஆம் ஆண்டில் ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்த போது 20 வயதிலேயே ஜமீல் கடுமையாக மனதளவில் பாதிக்கப்பட்டார் என்று அவரது நண்பர்கள் கூறுகின்றனர். ஜமீல் மற்றும் இப்ரஹிம் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் தெரிந்தவர்களாக இருந்தனர். "இல்ஹமுக்கு இணையம் மூலம் ஜமீலுடன் தொடர்பு ஏற்பட்டது" என்று விசாரணையாளர்கள் கூறுகின்றார்கள்.

ஜமீல் போலவே, அலவுதீன் அஹமட் முபாத் மாணவனாக இருந்தார். அவர் கொழும்பில் உள்ள கல்லூரி ஒன்றில் சட்டத்தில் பட்டம் பெற்றிருந்தார். 3 வருடங்களுக்கு முன்னர் திருமணத்தை தொடர்ந்து மனைவியின் சொந்த ஊரான சாய்ந்தமருதில் வசித்துவந்துள்ளார். (சாய்ந்தமருதில், ஏப்ரல் 27 நடந்த தாக்குதலில் 6 சிறுவர்கள், 3 பெண்கள் உட்பட தற்கொலைக் குண்டுதாரிகளுடன் 15 பேர் பலியாகினர். அவர்களில், சஹ்றானின் தந்தையும், இரு சகோதரர்களும் அடங்குகின்றனர்)

முபாத் ஏப்ரல் - 14ஆம் திகதி இறுதியாக தனது சகோதரியின் வீட்டுக்குக் கர்ப்பிணி மனைவி மற்றும் பிள்ளைகளுடன் புதிதாக பிறந்த குழந்தையை பார்க்க சென்ற பின்னர் சாய்ந்தமருதை விட்டு வெளியேறினார் என்று அவரது தந்தை நீதிமன்றில் தெரிவித்துள்ளார். குண்டுத் தாக்குதல்கள் நடந்த அன்று காலை குடும்பத்தினருக்கு அழைப்பெடுத்த முபாத்தின் மனைவி "முபாத் எங்கே என்று தெரிந்தால் கூறுமாறு கேட்டுள்ளார்". மே 5ஆம் திகதி முபாத்துக்கு குழந்தை பிறந்தது. 15 நாட்களில் அந்தக் குழந்தையின் தந்தை அந்தோனியார் ஆலயத்தில் குண்டு தாக்குதல் மூலம் பலரை தன்னுடன்சேர்த்து கொன்றுகுவித்தார்.

### முன்னோடிகள்

சஹ்றானின் வலையமைப்பு குண்டு தாக்குதல் நடைபெறும் வரை கட்டுப்படுத்தப்படவில்லை. மூன்று ஆண்டுகளில் அவர்கள் பல்வேறு ஆதரவாளர்களை உருவாக்கியிருந்தனர். உதாரணத்துக்கு, அப்துல் ஹக் சகோதரர்கள். மாவனல்லயில், புத்தர் சிலைகளை உடைத்த போது 6 பேர் கைது செய்யப்பட்டனர். ஆனால் மொஹமட் சாதிக் அப்துல் ஹக், மொஹமட் சகீட் அப்துல் ஹக் இருவரும் தலைமறைவாகினர். குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இருவரும் பிடிபட்டனர். "குண்டுத் தாக்குதல்களில் ஹக் சகோதரர்கள் பங்குபற்றிய ஆதாரம் இல்லை" என்று இராணுவப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், "அவர்கள் குண்டுதாரிகளுக்கு பயிற்சி வழங்கியிருக்கலாம்" என்று ஏனைய புலனாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹக் சகோதரர்கள் மாவனல்லயில் உள்ள , இஸ்லாம் மீது பற்றுக்கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் தந்தை இப்ராஹிம் மௌலவி ஒரு சிறந்த போதகராகவும், ஜமாஅத்-இ இஸ்லாமி எனும் செல்வாக்கு மிக்க மதச் சமூக அமைப்பின் உறுப்பினராகவும் இருந்தார். சாதீக் உயர்தரப் பரீட்சையில் சித்தியடையவில்லை. ஆனால் கராத்தேயில் திறமையானவர் என்று சொல்லப்படுகிறது.

இவ்விரு சகோதரர்களும் 2017 ஆம் ஆண்டில், சஹ்றானின் கோட்பாடுகளைக் கொண்ட, காணொளிகளினால்கவரப்பட்டு அவர்கள்திசைதிருப்பப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

(05 ஆம் பக்கம் பார்க்க)

# பூச்சுகளின் நூலகம்



● உமாஜி

அப்போது தெரிந்த எல்லாச் சட்டங்களும் நீலம் சாம்பல், கறுப்பு வர்ணங்களால் நிறைந்திருந்தன. சாம்பலும் கருமையும் அதிகமாக. அது வரையில் பார்த்திராத சோபையிழந்த வீதி. சல்லடை போட்டுக்கொண்ட, பாதி உதிர்ந்த, சிதிலமடைந்த கட்டடங்கள். விமானக் குண்டுகள் சரித்துவிட்ட கொங்கிறீட் தளங்கள், கற்குவியல்கள். தூரத்து ஒலிபெருக்கிகளால் ஒருசேர அமைதி இன்மையும். அப்பாவின் கை பிடித்து நடந்து கொண்டிருந்தபோது பார்த்த அந்த யாழ் நகர் புதிதானது.


முற்றவெளிக்கப்பால் சிறு பற்றைகள் தாண்டித் தெரிந்த மதில் சுவரில் என் கவனமிருந்தது. கதை கதையாகப் பேசப் பட்டுக்கொண்டிருந்த, அதிர வைத்த கோட்டை. முற்றுகைச் சமரில் வென்றெடுக்கப்பட்டு ஒருசில மாதங்களேயாகியிருந்தன. முன்பக்கம் குண்டு துளைக்காமல் கனமான உலோகத்தகடு பொருத்திச் சண்டைக்குப் பயன்படுத்திய இரண்டு பெரிய மஞ்சள் நிற டிப்பர்கள் அநாதரவாகச் சரிந்து நின்றிருந்தன.

இந்தப்பக்கம் கருமையும் சாம்பலும் பூசிக்கொண்டு நின்ற வித்தியாசமான பெரிய கட்டடத்தைக் காட்டி "இதுதான் லைப்ரரி" என்றார் அப்பா. முதன் முதலாக பார்த்த ஒரு நூலகம். யாழ் .நூலகம் எனும்போதே அதுதான் ஒரு சித்திரமாகத் தெரியும்.

பிறகு சிலமுறை சென்ற போதும் அப்படித்தான். இது உண்மையில்லை. எரிந்து போய், சாம்பல் அப்பிக்கொண்டு உள்ளே புதைந்திருக்கும் எலும்புக் கூடு தான் உண்மை. எப்போதும் அமைதியின்மையைக் கொடுக்குமிடமாகவே தோன்றும். காற்றின் வெம்மையை தகிப்பை சற்று அதிகமாக உணர்வது போல. அந்தப் பொழுதுகளின் காலநிலையும், அமைவிடமும் தாண்டியும், வலிந்து ஏற்படுத்திக்கொண்ட பிரமையாகவோ இருக்கலாம். இன்னும் உள்ளே கனன்றுகொண்டேயிருப்பதால்தான் இந்த வெக்கையோ? எனத் தோன்றும்.

கொஞ்சம் அலைக்கழிப்பதாகவோ, பதற்றமாகவோ ஏன் ஒரு நூலகம் இருக்கிறது? இப்போது காண்பதெல்லாம் உண்மையேயில்லை. உண்மை முற்றிலும் வேறானது. இந்தப் பூச்சுக்கள் போலியானவை. எப்போதேனும் எந்தக் கணத்திலேனும் சடுதியாக இந்தப் பூச்சுக்கள் உதிர்ந்துவிடலாம். உள்ளே இன்னும்கனன்றுகொண்டிருக்கும் பாதி எரிந்த எலும்புக்கூடு, கோரமானஉண்மை வெளிவந்துவிடலாம். ஏன் ஒரு நூலகம் "எப்போது இங்கிருந்து வெளியேறுவோம்" எனத் தோன்றச் செய்கிறது எனப் புரியவேயில்லை.

# சஹ்ரான் கும்பலின் பின்னணி




(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எமது விசாரணைகளில் சிலை உடைப்பு திட்டத்துக்கு முன்னர் 2018 ஆம் ஆண்டில் இருந்து அவர்கள் சஹ்ரானுக்கு நெருக்கமாக இருந்தமை புலப்படுகிறது" என்று மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். ஹக் சகோதரர்களின் நண்பர்கள், அவர்களிடம் வளர்ந்து வரும் தீவிரவாதத்தை அறிந்திருந்தனர். ஜமாத்-இ இஸ்லாமி மற்றும் அதன் இளைஞர் பிரிவான இஸ்லாமிய மாணவர் இயக்கத்தில் இருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டனர். சாதிக் புலமைப் பரிசில் ஒன்றுக்காக மூன்று மாதங்களில் திரும்புவதாக உறுதியளித்து துருக்கி சென்றார். அங்கு நான்கு மாதங்கள் தங்கினார். "அங்கிருந்து சிரியாவுக்குச் சென்றதாக நாம் கேள்விப்பட்டோம்" என்று அவரின் நண்பர் ஒருவர் கூறுகிறார்.

"அவர்களது தந்தை அவர்களை முன்னைய பாதையில் கொண்டு வர முயற்சித்தார். ஆனால், அவர்கள் அதற்குப் பதிலாக தந்திரோபாயமாக மௌலவியை தமது தீவிரவாத எல்லைக்குள் அழைத்துச் சென்றனர்" இப்படி உறவினர் ஒருவர் கூறுகிறார். "ஒரு ஆண்டுக்கு முன்னர் அவர்களது தந்தையும் ஜமாத்-இ இஸ்லாமி அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டார். அவர் எமது அரசியலமைப்பை சவாலுக்கு உட்படுத்தினார்" என்று அதனுடைய உறுப்பினர் ஒருவர் கூறுகிறார். மாவனல்லையில் 2001ஆம் ஆண்டு முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல் இடம்பெற்றது. ஏராளமான முஸ்லிம்கள் தமது சொத்துக்களை இழந்தனர். ஆனால் பதிலடி கொடுக்கவில்லை. அப்போது, ஹக் சகோதரர்கள் இளம் வயதினராக இருந்தனர்.

சஹ்ரான் மற்றும் அடிப்படைவாத இளைஞர்களின் தொடர்பு 2016ஆம் ஆண்டு திருமணம் ஒன்றில் முறைசாரா கூட்டணியாக மாற்றப்பட்டுள்ளது. விசாரணையாளர்கள் தெரிவிக்கையில், "இந்தத் திருமணம் காத்தான்குடியில் நடந்தது. ஜமாத்தி மில்லாத்தி இப்ரஹிம் உறுப்பினர்கள் பலர் சென்றிருந் தனர். அங்கு, இல்ஹாம் மற்றும் ஜமீலும் இருந்தனர் என்று நினைக்கிறோம்". 2017ஆம் ஆண்டு சஹ்ரான் தலைமறைவாகிய பின்னர் அவர்கள் வட்சப் மற்றும் வைபர் மூலம் தொடர்புகளைப் பேணிக்கொண்டனர். ஆனால், விசாரணையாளர்களின் கூற்றுப் படி "2018ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் தாக்குதலுக்கு திட்டமிருக்கவில்லை. ஆனால், எதிர்கால தாக்குதலுக்காக தயாராகினர். வண்ணாத்துவில்லுவில் பெருந்தொகை வெடிமருந்து கைப்பற்றப்பட்டமை முக்கிய விடயம்".

"சந்தேகநபர்களை விசாரணை செய்ததில் இருந்து சஹ்ரான் தேவாலயங்களை தாக்குவது தொடர்பில் பேசினார் என்பது தெளிவாகிறது" என்று மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். அவர், நியூசிலாந்து தாக்குதலினால் இந்த சதி திட்டமிடப் பட்டிருக்கும் என்று எண்ணுகிறார். ஆயினும், "நியூசிலாந்து தாக்குதல் மார்ச்சில் நடந்தது. இயல்பாக ஒரு அதிநவீன தாக்குதலுக்கு திட்டமிடும்போது நீண்ட காலம் ஒன்று தேவைப்படும். எனவே நியூசிலாந்து தாக்குதலுக்குப் பதிலடியே ஈஸ்டர் தாக்குதல் என்பதை ஏற்க முடியாது" என்கிறது புலனாய்வுப் பிரிவு.

உண்மையில், சந்தேகத்துக்குரிய நபர்கள் இஸ்லாமிய அரசின் தலைமையுடன் நேரடி முகவர்களாக இருக்கின்றார்களா என்பதே முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கின்றது என்று அவர் கூறுகிறார். ஜமீல் மற்றும் சஹ்ரானின் சகோதரன் ரில்வான் உள்ளிட்ட சில சந்தேகநபர்கள் சில ஆண்டுகளுக்கு முன் சிரியா சென்று திரும்பிய இஸ்லாமிய அரச உறுப்பினர்கள் ஐவரில் இருவருடன் தொடர்பு இருப்பதாக ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால், குண்டுதாரிகளுக்கு இஸ்லாமிய அரசுத் தலைமையுடன் நேரடித் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை என்கிறார்.

ஐ. எஸ் அமைப்பின் தலைமையுடன் சஹ்ரான் சுதந்திரமாக தொடர்பில் இருந்தாரா என்பது தெளிவற்றதாக இருக்கின்றது. விசாரணையாளர்களிடம் மற்றுமொரு சந்தேகம் காணப்படுகிறது. "இஸ்லாமிய அடிப்படைவாதிகள் ஏன்? சக சிறுபான்மை சமூகத்தை இலக்கு வைத்தனர். அவர்களுடன் எந்த விரோதமும் இல்லையே" என்பதே அது. சாய்ந்தமருது தாக்குதலின் போது அங்கு வெள்ளை ஆடைகள் மீட்கப்பட்டன. அது பௌத்த பெண்கள் தமது மதத்தலத்துக்கு அல்லது பிரார்த்தனைக்குச் செல்லும்போது அணிவதாகும். மே 18-19 அல்லது ஜூலை கண்டிப் பெரஹராவின் போது தாக்குதல் நடத்த திட்டமிட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

ஜமாத்தி மில்லாத்தி இப்ரஹிம் உறுப்பினர்கள் ஆரம்பத்தில் சிரியாவில் ஐ.எஸ் அமைப்பில் இணைய நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், சிரியா, ஈராக்கில் அவர்கள் வீழ்ச்சியடைந்த போது திட்டத்தைக் கைவிட்டனர் என்று அதிகாரபூர்வத் தகவல் ஒன்று கூறுகிறது. அதில் இருந்து இலங்கையில் தாக்குதல் ஒன்றை செயற்படுத்த இல்ஹாம் ஆர்வம் கொண்டிருந்தார். உயிர்த்த ஞாயிறு சதியின் மூலம் அவருக்கு பதில் கிடைத்தது. அவரது சகோரர் இன்ஷாப் இறுதி நேரத்தில் வளைக்கப் பட்டார் போல் தெரிகிறது. அவர் மே மாதம் மக்காவுக்கு குடும்பத்தாருடன் செல்வதற்கு விமான முற்பதிவு செய்திருந்தார். உயிர்த்த ஞாயிறுக்கு சில வாரங்கள் முன்னர் அவர்கள் ஒரு அணியாக உருவானார்கள். "இறுதி வாரத்தில் அவர்கள் த்ரீமா (threema) எனும் அதி உயர் பாதுகாப்பைக் கொண்ட மெசெஞ்சர்சேவையை பயன்படுத்தியுள்ளனர்" என்று ஒரு அதிகாரி கூறுகிறார்.

மேலும், எதிர்கால ஆய்வுகளின் மூலம் "இந்த சதித்திட்டம் நியூசிலாந்து தாக்குதலுக்கு பின்னர் அல்லது இலக்கு மாற்றப்பட்டு நடத்தப்பட்டதா? என்பது வெளிப்படுத்தப்படும். ஆனால் தற்கொலைக் குண்டுதாரிகள் பயங்கரவாதத்தைத் தழுவி இரக்கமற்ற செயலை செயற்படுத்த சமீபத்திய ஆண்டுகளில் போதுமான ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதற்கு பிறகு திகதி, இடம், இலக்கு என்பது வெறும் தகவல் மட்டுமே!. ■

# புலிக்கு கிலி

## சுட்டிகளுக்கு குட்டிக்கதை

புலியார் அன்று மகா கோபமாக இருந்தார். காலையில் அவர் கேட்ட செய்தி அவரை அவ்வளவு கோபப்பட வைத்து விட்டது. அதற்குக் காரணம் நரியார் சொன்ன செய்திதான். புலியார் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கண்ணை மூடி குட்டித் தூக்கம் போட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது மெதுவான காலடி ஓசை கேட்டது. என்னதான் தூக்கக் கலக்கத்தில் இருந்தாலும் புலியாரின் காதுகள் காலடி சத்தத்தை உன்னிப்பாகக் கேட்டன. பதுங்கிப் பதுங்கி நடப்பது போலப் பட்டது. பட்டென கண்ணை விழித்துச் சற்றுத் தொலைவில் நரியார் பதுங்கிப் பதுங்கி நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தது. "என்ன நரியாரே சத்தமில்லாமல் போகிறாய்? இங்கே வா." என்றது புலி. நரிக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போக புலியின் அருகில் வந்தது. "ஒன்றுமில்லை ஐயா" என்று மென்று முழுங்கியது. "எங்கே போகிறாய்?" என மீண்டும் கேட்டது புலி. "நம்முடைய காட்டுக்குப் புதுசா புலி ஒருத்தர் வந்திருக்கிறார். அவர் என்னைப் பார்க்க வரச் சொல்லியிருக்கிறார். அதுதான் போகின்றேன்." என்றது நரி.

"இந்தக் காட்டுக்கு புதுசா புலி வந்திருக்கா? அது வந்து உன்னை வரச் சொன்னால் நீ போய்விடுவாயா?" என உறுமியது புலி. "ஐயோ, அப்படி எல்லாம் இல்லை நான் போகாவிட்டால் அந்தப் புலி என்னைக் கொன்று விடும்." என்றது நரி. "நீ திரும்பிப் போ. அது உன்னை வந்து கேட்டால் நான் தான் போக வேண்டாம் என்று சொன்னதாகச் சொல்." என அதட்டியது புலி. "சரி" என்றவாறு சட்டென ஓடி மறைந்து விட்டது நரி. அன்று முழுவதும் யார் அந்தப் புதிய புலி என யோசித்து, யோசித்து மண்டையை உடைத்துக் கொண்டதுதான் மிச்சம். ஒரு வேளை இந்த நரியார் நம்மை ஏமாற்ற இப்படிப் பொய் சொல்லுகிறதோ? ஒரு முறை முயலார் சிங்கத்தை ஏமாற்றிக் குழியில் தள்ளி விட்டதைப் போல, நம்மையும் ஏதாவது சிக்கலில் மாட்டி விடுகிறதோ என்று சிந்தனை செய்தது புலி. இப்படி யோசித்து யோசித்து அது களைத்துப் போய் விட்டது. அதன்பின் நரியாரும் கண்களில் தென்படவே இல்லை. புலியும் காடு முழுவதும் சல்லடை போட்டுத் தேடி விட்டது. புதிதாகப் புலி ஒன்று வந்ததற்கான அறிகுறியே இல்லை.

நாண்கைந்து நாட்கள் ஓடி விட்டன. வேட்டையாடி சாப்பிட்ட களைப்புடன் நடந்து போய்க் கொண்டிருந்த புலியார் திடீரென அங்கு நரியைப் பார்த்தது. "ஏய் நரியே நீ பொய்தானே சொன்னாய்" என அதட்டியது. நரி பயத்துடன் "இல்லை ஐயா. உண்மையிலேயே புலிதான் வரச் சொன்னதாக என் பக்கத்துக் குகை நரி சொன்னான். அந்தப் புலி காட்டு எல்லையில்தான் இருக்கிறதாம்" என்றது நடுங்கியபடியே. "இந்தக் காட்டு எல்லையில் இருக்கிறதாமா! பார்க்கிறேன் ஒரு கை" என்று சொல்லிவிட்டு விறு விறுவென காட்டின் எல்லை நோக்கி நடக்க ஆரம்பித்தது.

நடந்து வரும்போதே சற்றுத் தொலைவில் அந்தப் புலியை பார்த்து விட்டது. இதனை விட பிரமாண்டமாயும், கம்பீரமாயும் நின்று கொண்டிருந்தது அது. "நம்மை விடப் பெரியதாய் இருக்கிறது. ஒரே அடியில் என்னை அடித்து விடும் போல் இருக்கிறதே. ஆச்சர்யத்துடன் சற்றுத் தள்ளி நின்றே பார்த்துக் கொண்டிருந்தது. இனி இந்தக் காட்டில் என்னை யாரும் மதிக்க மாட்டார்கள். இனிமேல் இதுதான் ராஜா." என எண்ணியபடியே திரும்பவும் காட்டுக்குள் நடந்து சென்றது.


இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் நல்ல மழை பிடித்துக் கொண்டது. இடைவிடாத மழை. எல்லா மிருகங்களும், மழைக்குப் பயந்து குகைகளில் பதுங்கிக் கொண்டன, புலியார் அந்த மழையிலும் பசி தாங்காமல் வேட்டையாட வெளியே வந்தது. அப்படியே நடந்து நடந்து காட்டு எல்லை வரை வந்து விட்டது. வந்த பிறகு தான் அதற்கு ஞாபகம் வந்தது, நம்முடைய விரோதி இங்கொருவன் இருக்கிறானே என்று. சற்று பயத்துடன் அன்று அந்தப் புலி நின்று கொண்டிருந்த இடத்தைப் பார்த்தது. என்ன ஆச்சரியம், அங்கு புலி இல்லை. சுற்றிலும் மண்தான் சகதியாய்க் கிடந்தது. அந்தப் புலி எங்கே? என்று சுற்று முற்றும் பார்த்தது. புலி அங்கு இருப்பதற்கான அறிகுறிகள் தென்படவே இல்லை. அந்த மழையிலும் புலிக்கு ஒரே ஆனந்தம். "அப்படியானால் நம்முடைய விரோதி இந்த மழைக்குப் பயந்து ஓடி விட்டான்." என்று நினைத்துக் கொண்டது. மகிழ்ச்சியில் அதற்குப் பசியே மறந்து போயிற்று. அதே நேரத்தில் நகரத்தில் வனவளத் திணைக்கள அறையில் ஒரு அதிகாரி உயரதிகாரியிடம், "நாம் இது புலிகள் இருக்குமிடம் என மக்களுக்கு அடையாளப்படுத்த வைத்திருந்த புலி பொம்மை, இந்த மழையில் கரைந்து விட்டது. புதுசா ஒரு மண் பொம்மையைக் கொண்டு போய் வைக்க வேண்டும்" என்றார். பாவம் புலிக்கு இனி எப்போதுமே கிலி தான்.



# அறியலாம் வாங்கோ...

## இலங்கை பற்றி...

- இலங்கை இந்து சமுத்திரத்தின் மையக் கோட்டுக்கு வடக்காக 6 பாகை 54 கலையிலும் (6°54' – 6°9'N), நெட்டாங்குக்கு கிழக்காக 79°54' – 79°9'E இலும் அமைந்துள்ளது.
- இலங்கையின் தேசிய சின்னங்கள்
  - ▲ இலங்கையின் தேசிய மரம் - நாகமரம்
  - ▲ இலங்கையின் தேசியப் பறவை - காட்டுக்கோழி
  - ▲ இலங்கையின் தேசிய மிருகம் - யானை
  - ▲ இலங்கையின் தேசிய மலர் - நீலஅல்லி
- இலங்கையின் உயர்ந்த நீர்வீழ்ச்சி - பம்பரகந்த
- இலங்கையின் நீளமான ஆறு - மகாவலி கங்கை (335 கி.மீ)



- இலங்கையின் உயர்ந்த மலை - பேதுருதாலகால மலை (Pidurutalagala) கடல் மட்டத்திலிருந்து 2524 மீட்டர் (8200 அடி)
- இலங்கையில் பாவனையில் உள்ள நாணயம் - இலங்கை ரூபாய் (LKR)
- இலங்கையின் நேர வலயம் - (ஒ.ச.நே + 5.30 மணி (கிறீன்வீச் நேரத்துடன் 5.30 மணி கூட்ட வேண்டும்)
- இலங்கையின் இணையக் குறி - lk
- இலங்கையின் தொலைபேசி எண் - +94
- இலங்கையில் பாவனையில் உள்ள மின்னழுத்தம் - 230V
- இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் - தேயிலை, இறப்பர், கறுவா

## அம்மாடி! இவ்வளவா...!




ஜூன்

01 ❄உலக குழந்தைகள் தினம்
❄உலக பெற்றோர்கள் தினம்
04 யுத்தம் மற்றும் வன்முறைகளால் அகதிகளான பிள்ளைகளுக்கான சர்வதேச தினம்
05 உலக சுற்றுச் சூழல் தினம்
07 உலக தொல்பொருளியலாளர்தினம்
08 உலக சமுத்திர தினம்
09 உலக அங்கீகார தினம்
10 குமிழ்முனை பேனா தினம்
12 ❄உலகசிறுவர்தொழிலாளருக்கு எதிரான தினம் .
❄சோவியத் ஒன்றியத்தின் தேசிய தினம்
14 உலக இரத்ததான தினம்
16 ❄ உலக தந்தையர்தினம்(ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்தில் வரும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை, தந்தையர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாட்டுக்கு நாடு, இத்தினம் வேறு வேறு நாட்களில் கொண்டாடப்படுகிறது. இலங்கையில் மூன்றாவது ஞாயிறு கொண்டாடப்படுகின்றது. இம்மாதம் 16 ஆம் திகதி தந்தையர் தினமாகும்.)
❄ தென் ஆபிரிக்க மக்கள் புரட்சியுடன் உருவான சர்வதேச ஒத்துழைப்புத் தினம்
17 ஐக்கிய நாடுகளின் பாலைவன மாதல் தடுப்பு மற்றும் வரட்சியை இல்லாதொழிக்கும் தினம்
18 உலக நெல்சன் மண்டேலா தினம் (ஐ.நா அறிவிப்பு)
20 உலக அகதிகள் தினம்
21 உலக இசை தினம்
23 ❄ ஐக்கிய நாடுகள் சேவையாளர்கள் தினம்
❄ உலக இறைவணக்க தினம்
26 சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்புத் தினம்
26 ❄கொடூரமான சித்திரைவதைகளுக்கு உட்பட்டோருக்கு உதவி வழங்கும் தினம்
27 ❄உலக நீரிழிவாளர் தினம்
28 ❄உலக ஏழைகள் தினம்

# உலகம் சுற்றுவோம் வாங்கோ

## தென்னாபிரிக்கா (South Africa)

- தென்னாபிரிக்கா நாடு ஆபிரிக்காவின் தென்முனையில் அத்திலாந்திக் மற்றும் இந்தியப் பெருங்கடலின் அருகே அமைந்துள்ளது.
- வடக்கில் நமீபியா, போட்சுவானா மற்றும் சிம்பாவே போன்ற நாடுகள் உள்ளன. கிழக்கில் மொசாம்பிக் மற்றும் சுவிஸ்லாந்து நாடுகள் அமைந்துள்ளன.
- இந்த நாட்டின் மொத்தப் பரப்பளவு 1,219,912 சதுர கிலோ மீற்றர் (470, 000 சதுர மைல்).
- தென்னாபிரிக்காவுக்கு மூன்று தலைநகரங்கள் உள்ளன. அவை கேப் டவுன், பிரிட்டோரியா, புளோயம் ஃபாண்டைன்.
- இங்கு 80.2% கறுப்பினத்தவர், 8.8% வெள்ளை இனத்தவர், 8.4% வேறு நிறம், 2.6% ஆசியர்கள் வாழ்கின்றனர்.
- இங்கு ஆட்சி மொழிகள் மொத்தம் 11.
- கூடுதலாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் 8. அதில் தமிழும் ஒன்று.
- உலக மக்கள் தொகை வரிசையில் 25 ஆவது இடத்தில் இந்த நாடு உள்ளது.
- உலகின் பழமையான தொல்பொருள் ஆய்வுத் தளங்கள் அதிகம் உள்ள நாடு.
- பன்மைத்துவம் கொண்ட நாடு.




- 'ஒற்றைப் பண்பாடு' என மக்களை வலியுறுத்துவதில்லை.
- தென்னாபிரிக்க மக்கள் இசையில் பெரும் ஆர்வம் கொண்டவர்கள்.
- பெரிதும் அசைவ உணவை விரும்பி உண்ணுவார்கள்.
- இங்கு சூலு, சுவாசி, சோசா பழங்குடிமக்கள் சேர்ந்து வாழ்கின்றனர்.

# நீயா? நானா?





வெள்ளிக்கிழமை புகழ் அரசியல் தலைவருக்கும், யானைக் கட்சித் தலைவருக்குமிடையிலான மோதல் மீண்டும் உக்கிரமடைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

நமோ....நமோவின் பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்ப தற்காக பாரதம் பறப்பதற்கு முன்னர், தனது விசுவாசிகளை அழைத்துபேசிய விதானையார், "நாடு திரும்பியதும் அதிரடி காட்டுவேன். ஆயத்தமாக இருங்கள்" என்ற கூறிவிட்டே புறப்பட்டாராம்.

அதுமட்டுமல்ல இரவோடிரவாக யானைக்கட்சி தலைவருக்கு அழைப்பை ஏற்படுத்திய அவர், சேரிப்புறத்துக்கே உரிய மொழிநடையில் 'செம டோஸ்' கொடுத்தாராம்.

"அரசியலிலிருந்து விரட்டப்பட்டு, வீடு திரும்பினாலும் பரவாயில்லை, வெளிப்படுத்த வேண்டிய அனைத்தையும் நானும் அம்பலப்படுத்துவேன்." என கடுந் தொனியில் கூறிவிட்டு அழைப்பை துண்டித்தாராம் மிஸ்டர் 'ப்ரைடே புல்லட்'.

இதனால் ஆடிப்போன மிஸ்டர் க்ளீன், அவசர அவசரமாக சில ஆலோசனைகளைப் பெற்றதாகவும் அரசல் புரசலாக கதை அடிபடுகின்றது.

சரி, சண்டைக்கு என்ன காரணம்? யாரின் மண்டை உடையும் என்பதை அறியத்தானே ஆசைப்படுகின்றீர்கள்?

21/4 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கன்னி அமர்விலேயே , உங்களை குறிவைத்துவிட்டனர். இதனால்தான் திறந்த விசாரணைக்கு ஏற்பாடு நடந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்ட கருத்தே வெள்ளிக்கிழமை புகழ் அரசியல்வாதிக்கு 'பிரசரை' எகிறவைத்துள்ளதாம்.

அதுமட்டுமல்ல முக்கிய வழக்கொன்றில் சிக்கவைக்கும் வகையில் சட்ட ஏற்பாடுகள் இடம் பெற்றுவருவதும் சினத்துக்கு மற்றுமொரு காரணமென பொலன்னறுவைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சரி, அப்படியானால், அடுத்து என்ன? மீண்டும் மாற்றமா? என்றெல்லாம் எழுப் படும் கேள்விகளுக்கு, 'வெயிட் என்ட் சீ' என்ற பதில் மட்டுமே தற்போது கைவசம் உள்ளது.

# எதிர்ப்பும் மவுசும்



மன்னாரில் தோகை விரித்து குத்தாட்டம் போட்ட மயில் கட்சித் தலைவருக்கு எதிராக தென்னிலங்கையில் தொடுக்கப்பட்டுள்ள அரசியல் போர் உக்கிரமடைந்துள்ளது.

இதனால் பரபரப்புக்கும், விறுவிறுப்புக்கும் துளியளவேனும் பஞ்சமில்லாத வகையில் தரமான, சிறப்பான சம்பவங்கள் நாள்தோறும் அரங்கேறிவருகின்றன.

தற்போது அவர் தும்மினால்கூட, அடிப்படைவாதிகளின் சமிக்ஞையே அதுவென கண், காது, மூக்கு எல்லாம் வைத்து கதைகள் கட்ட விழ்த்துவிடப்படுவதால் உச்சக்கட்ட கடுப்பில் இருக்கிறாராம் 'மன்னார் மைந்தன்' என தொண்டர்களால் விளிக்கப்படும் அந்த அரசியல்வாதி.

வெள்ளாடைச் சமராக இருந்தால் வேங்கை மகன் ஒத்த ஆளாக வெற்றிநடை போட்டிருப்பார். ஆனால், காவியுடையும் களமிறங்கியிருப்பதால் பின்புலம் என்னவென அலசி ஆராய வேண்டியுள்ளது என தலைவருக்கு நெருக்கமான ஒருவர் சேதி சொன்னார்.

பதவியைத் துறந்துவிட்டு , பாலை வனத்தை நோக்கி மயில்கட்சித் தலைவர் நடையைக்கட்ட வேண்டும் என்பதே யானைக்கட்சியிலுள்ள சிலரின் நிலைப்பாடாக இருக்கின்றது.

எனவே, பதவி துறப்புக் கடிதம் தயாராக இருப்பதாக ஒரு தகவலும், இல்லை, இல்லை, இறுதிவரை களத்தில் நின்று அவர் போராடுவார் என மற்றுமொரு தகவலும் தெரிவிக்கின்றன.

எதுஎப்படியோ தென்னிலங்கையில் தொடுக்கப்படும் அரசியல் போரால், தான் சார்ந்த சமூகத்தின் மத்தியில் மயில்கட்சி தலைவருக்கான மசுவு உச்சம் தொட்டுள்ளதாம்.

எனவே, மரத்திலிருந்து தாவுவதற்கு சில 'மங்கி'கள் தயாராகின்றன எனவும் அரசியல் புரசலாக கதை அடிபடுகின்றது.

இதனால், "கட்சியின் சின்னம் களவு போகுமோ, கொத்தித் தின்ன மயில் வருமோ...." என புலம்புகிறாராம் மிஸ்டர் 'கண்டி'

# கோத்தாவுக்கு ஆபத்தா?



முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாயவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவர் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதையும் குறைக்குமாறு அவரது பாதுகாப்பு அதிகாரிகள் கேட்டுள்ளனர். அவரது உயிருக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகள் குறிவைத்துள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே இந்தப் பாதுகாப்பு அதிகரிப்பு எனச் சொல்லப்படுகின்றது.

இதனால் எதிர்வரும் நாட்களில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அவரது அமைப்பின் பல நிகழ்வுகளைரத்துச் செய்துள்ளார் கோத்தா .

## காதோடு காதாக



# ஐயரைக் காணோம்?

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த வாரம் நடந்த தேசிய பாதுகாப்பு சபை ஆலோசனை கூட்டத்தில் மதத் தலைவர்கள் சிலரும் வந்திருந்தனர்.

ஆனால் இந்து மத குருவை காணாதபடியால் ஜனாதிபதியிடம் அதுபற்றி கேட்டாராம் டக்ளஸ் எம். பி. உடனே பதறிய ஜனாதிபதி அருகில் இருந்த செயலரை அழைத்து விளக்கம் கேட்டு உடனே பதில் வழங்கினாராம்.. "வருந்துகிறேன் டக்ளஸ் எம்பி. நாங்கள் ஒருவரை ஒழுங்குபண்ணியிருந்தோம். ஆனால் கடைசி நேரத்தில் அவரால் வர இயலாமல் போயுள்ளது. அடுத்தமுறை இப்படி நடக்காது"என்று சொன்னாராம் மைத்திரி. இந்தக் கூட்டத்தை எதிர்க்கட்சி எம் பிக்கள் அனைவரும் பகிஷ்கரித்திருந்தமை ஒரு கொசுறுத் தகவல் !

# அதிரடி இனித்தான்


தனது தந்தை வழியைப் பின்பற்றி மலையக அரசியல் களத்தில் அதிரடி காட்ட தயாராகும் அந்த இளம் பெண் அரசியல்வாதி, ஜூன் 7 ஆம் திகதிக்கு பிறகு விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இதற்கான ஏற்பாடுகள் திரைமறைவில் இடம் பெற்றுவருவதாகவும், முன்னணியின் ஆரம்ப கால செயற்பாட்டாளர்களும் இதற்கு நேசக்கரம் நீட்டியுள்ளனர் என்றும் அரசல், புரசலாக கதை அடிபடுகின்றது.

'மண்வெட்டி'க் கட்சி தலைமைமீது கடும் அதிருப்தியில் இருக்கும் அம்மணி, அண்மையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தையும் புறக்கணித்து ஒரு சிலருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளதாகத் தகவல்.

உட்கட்சி மோதல் சந்திக்கு வரக்கூடாது என்பதால், கடும்பிலுள்ள சின்னம்மாவை குளிர்விப்பதற்கு ஒரு சிலர் முயற்சித்து வருவதாகவும் கதை அடிபடுகின்றது.

# கோழி மேய்க்கிற வேலையாயினும்...






வேதநாயகம் தபேந்திரன்

“பத்துப்பேர் சேர்ந்து செய்யும் வேலையை ஒருவர் தனியாக இருந்து செய்து முடித்தால் அது தனியார்துறை”

“ஒரு வேலையை பத்துப் பேர் சேர்ந்து செய்து முடிக்காவிட்டால் அது தான் அரசதுறை”

விடலைப் பெடியள் முகநூலில் போட்ட ஒரு பதிவு. அரசதுறை குறித்து இது போன்ற மனோநிலைதான் பெரும்பாலான பொதுமக்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாவது கூற்றுக்கு வருவோம். பத்துப்பேர் சேர்ந்து செய்யும் வேலையை ஒருவர் தனியாக இருந்து செய்து முடித்தால் அது தனியார்துறை என்றால் 9 பேரின் உழைப்பைத் தனியார் முதலாளி ஒருவர் சுரண்டுவது குறித்த கவலை இங்கு வெளியிடப்படவில்லையே?

அரச துறையில் ஒரு உத்தியோகத்தர் 40,000 ரூபா சம்பளம் பெறுகின்றார் என வைத்துக் கொள்வோம். இங்கு 10 பேரினது வேலையை தனி ஒருவராகச் செய்யும் தனியார் துறை உத்தியோகத்தருக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் 70,000 ரூபாய் சம்பளம் ஆக மிஞ்சினால் 100,000 ரூபா சம்பளம் கொடுப்பார்கள். ஆகவே 8 ஆட்களுக்குப் போக வேண்டிய பணத்தை ஒருவர் சுரண்டி மேலும் மேலும் பணக்காரராகின்றார். அதேவேளை ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்றவற்றுக்கான பங்களிப்புகள் இருந்தாலும் சம்பளப் பட்டியலைக் குறைத்துக் காட்டி ஏமாற்றும் தனியார் முதலாளிகளும் சிலர் இருக்கின்றனர். ஆனாலும் திறமைசாலிகள் நிறையப் பேர் கோலோச்சும் துறை தனியார் துறை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அரச துறைப்பக்கம் வருவோம். ‘ஒரு வேலையை பத்துப் பேர் சேர்ந்து செய்து முடிக்காவிட்டால் அது தான் அரசதுறை.’ இந்தக் கூற்று அரச துறையை கேவலப்படுத்துவதற்கான ஒரு கூற்றேயாகும். பத்துப்பேர் சேர்ந்து செய்து முடிக்காமல் விட்ட ஒரு வேலையை உதாரணமாகக் காட்டியிருக்க வேண்டும். அரசாங்கத்தின் அமைச்சு ஒன்று பொதுமக்களுக்கு நடமாடும் சேவை மூலமாக உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அது தொடர்பான ஆயத்த வேலைகளுக்கு பல நாள்கள் ஈடுபடல் வேண்டும். அதற்கென மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு சில உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்கும். வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குக் கிடைக்காது. அத்தகைய ஆயத்த வேலைகளில் அத்துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் இரவு பகலாக ஈடுபடும் போது அவர்களது குடும்பங்களின் வேலைகள் போட்டது போட்டபடி கிடக்கும்.

கடும்மழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. குடிமனைகள் வெள்ளத்தினுள் மூழ்குகின்றன. மக்கள் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்குகின்றனர். அவர்களுக்குரிய அத்தியாவசிய சேவைகள் வழங்கும் பணிகளில் அரச துறை இரவு பகலாக உழைக்க வேண்டும். குறிப்பாக கிராம சேவகர்கள், அனர்த்தமுகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், ஏனைய தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பல நாள்கள் இரவுபகலாக கடமையாற்றுவார்கள். சில தேவைகளுக்கு தமது சொந்தப் பணத்தைக் கூட செலவு செய்வார்கள்.

போர்க் காலத்தில் இடப்பெயர்வு வந்த போது மக்களது நிவாரணப் பணிகளை அன்றாடப் பணிகளை ஆற்றுவதற்கு மிகவும் அர்ப்பணிப்புடன் இராப்பகலாக பணியாற்றினார்கள். 2009 ஒக்ரோபரில் வவுனியா செட்டிகுளம் முகாமில் இருந்து யாழ்ப்பாணப் பிரதேச மக்களை மீளக்குடியேற்றிய போது மக்களைக் கையேற்பதற்கு மாலை 6 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை உத்தியோகத்தர்கள் பணியாற்றினார்கள். ஆனாலும் அடுத்த நாள் காலை 9 மணிக்கு முதல் அலுவலகக் கடமைக்குச் சமூகமளிக்க வேண்டும். விசேட விடுமுறை எதுவுமே வழங்கப்படவில்லை. அதற்காக மேலதிகக் கொடுப்பனவுகள் எதுவுமே வழங்கப்படவில்லை. எவ்வளவோ உடல் உளநெருக்கடிகளுடன் கடமையாற்ற வேண்டும்.

ஓர் இடப்பெயர்வு வந்தால் பாடசாலைகள் காலவரையறையின்றி மூடப்பட்டு விடும். ஆனால் மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் வசதி உள்ளதோ இல்லையோ ஒரு இடமெடுத்து தற்காலிகமாக அலுவலகத்தை அங்கு இயக்கத்தான் வேண்டும். முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் 7 வருடங்கள் வரை புதுக்குடியிருப்பில் கிடுகுக் கொட்டிலில் இயங்கியது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும் நீண்ட பல வருடங்களாகக் கிடுகுக் கொட்டிலில் இயங்கியது. இது போன்ற பல வசதிக் குறைவுகளைத் தாங்கித்தான் அரச உத்தியோகத்தர்கள் கடந்து போன போர்க்காலத்தில் மக்களுக்காகப் பணியாற்றினார்கள்.

ஒரு வெளிக்கள உத்தியோகத்தரை எடுத்துக் கொண்டால் அவரது பாடுபடுகஸ்டம்தான். மழை, வெயில் எல்லாம் தாங்க வேண்டும். வன்னிப் பிரதேசங்களில் கடமையாற்றுவோர் ஒரு இடத்திலிருந்து மற்றைய இடத்துக்கு மோட்டார் சைக்கிளில் போய் வரும் போது மோட்டார் சைக்கிளுக்குக் காற்றுப் போனால் அவர்பாடு அதோ பாடுதான். ஒரு சமூக சேவைகள் உத்தியோகத்தரை எடுத்துக் கொண்டால் அவருக்கு சென்ற வருடம் வரையில் வெளிக்கள வேலைக்கான பிரயாணக் கொடுப்பனவு 1750 ரூபாய் தான் வழங்கப்பட்டது. ஆனால் அவர் கைத்தொலைபேசி மூலமாக தொடர்பாடல் செய்தல், மோட்டார் சைக்கிள் ஓடுதல், இடைச் செலவுகள் போன்றவற்றுக்கு மாதாந்தம் 5000 ரூபாவுக்கு மேலே செலவழிக்க வேண்டும். இப்படியாக அரசாங்க உத்தியோகத்தர்களின் சுமைகள் நிறையவே உண்டு.

அதே வேளை அரசாங்க உத்தியோகத்தர்களின் பொறுப்பற்ற தன்மைகள் காரணமாகப் பொதுமக்கள் பாதிக்கப்படும் நிகழ்வுகளும் உண்டு. அரசாங்க வங்கி ஒன்றுக்குச் சேவை பெறச் செல்கின்றோம். அங்கு யாரோ ஒருவர் உரிய கவுண்டரில் இருந்து உரிய சேவைகளை வழங்குவார். ஆனால் சில அரச திணைக்களங்களில் நாம் ஒரு சேவையைப் பெறச் சென்றால் உரிய உத்தியோகத்தர் அன்றையதினம் விடுமுறையென்றால், ஒரு கருமத்தை ஆற்ற முடியாது. விடுமுறை பெற்றவருக்குப் பதிலாளாக ஒரு உத்தியோகத்தர் இருப்பார். அவரது விடுமுறைக்குப் பதிலாளாகக் கையெழுத்து வைத்தவர், ‘அவர் தான் வர வேண்டும். போய் நாளைக்கு வாருங்கள்’ என்பார். திணைக்களத் தலைவர்கள் அது குறித்து கவனம் செலுத்துவது இல்லை.

சில அலுவலகங்களில் உத்தியோகத்தரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்கு ஒரு மணித்தியாலம் வரை செலவிடுவார்கள். அதிலும் மேலதிகாரியாக இருந்தால் பொதுமக்கள் சேவை பெற வரும் பிஸியான நேரம் என்றெல்லாம் பார்க்க மாட்டார்கள். அந்த நேரத்தில் சேவை பெற வரும் பொதுமக்கள் மிகவும் கஸ்டப்படுவார்கள். அது போல பொங்கல், வாணி விழா, கைவிசேடம் போன்ற நிகழ்வுகளை அரை நாள் கொண்டாட்டமாகக் கொண்டாடும் சில அரச அலுவலகங்களும் உண்டு. அந்த நேரம் அவசர அவசிய தேவை கருதி சேவை நாடி வரும் ஒரு பொதுமகன் சேவைகளைப் பெற முடியாமல் மிகுந்த அவதிப்படுவான்.

சில அரச அதிகாரிகள் பொதுமக்கள் எது கேட்டாலும் சீறிப்பாய்ந்து பதில் சொல்வார்கள். அன்பு, கனிவு, பண்பு எதுவுமே தெரியாதவர்கள் அவர்கள். ஆங்கிலத்தில் Public Servant அதாவது பொதுமக்கள் சேவகர்கள். ஆனால் அவர்கள் நடக்கும் விதம் பொதுமக்களது எஜமானர்கள் போலத்தான் உள்ளது. அரசாங்கத்தில் ஒருவர் வேலைக்குச் சேர்வது இலகுவாக இருக்கலாம். அல்லது கடினமாக இருக்கலாம் அவரை வேலையை விட்டு நீக்குவது மகா மகா கஸ்டம். அதற்குரிய ஏற்பாடுகள் மிக நீள்மானவை.

சில அரச அலுவலகங்கள் உற்பத்தித் திறன் போட்டிக்காக அலுவலகத்தைத் தயார்படுத்தும் போது அலுவலகத்தை அழகுபடுத்துவதில்தான் அக்கறை செலுத்துகின்றனர். அப்போது பொதுமக்கள் சேவைகள் பாதிக்கப்படுகின்றன. ஒரு பெரிய வெள்ளைச் சுவரில் ஒரு சிறிய கறுப்பு புள்ளியிருக்கிறதென வைத்துக் கொள்வோம். இதில் என்ன இருக்கிறது எனக் கேட்டால் கறுப்புப் புள்ளியிருக்கிறது எனக் கூறுவோர் தான் பலர். அது போல அரசதுறையில் ஒரு சில உத்தியோகத்தர்கள் விடும் தவறை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்த உத்தியோகத்தர்களையும் பிழை கூறுவது தவறானது.

தனியார் துறையில் வேலைப் பாதுகாப்பு இல்லை. ஆனால் திறமைசாலிகளுக்கு உச்சமான சம்பளம் வழங்குவார்கள். திறமைசாலிகளுக்கு பதவி உயர்வுகள் வேகமாக வழங்கப்படும். அதேவேளை அரச துறைகளில் அகில இலங்கைச் சேவைகள் (உதாரணம்- இலங்கை நிர்வாக சேவை) போன்ற ஒரு சில சேவைகள் தவிர ஏனையவை யாவும் சேவை மூப்பு என்பதை மட்டுமே அடிப்படையாக வழங்கப்படுகின்றன.

நடந்து முடிந்த போர்க்காலத்தில் தனியார் துறை பெருமளவில் செயலிழந்தே இருந்தது. ஆனால் அரச துறையில் கடமையாற்றியோர் மாதாந்த வேதனத்தை ஒழுங்காகவோ, ஒழுங்கின்றியோ எடுத்து அரைவயிறோ முழு வயிறோ உணவு உண்டு வாழ்ந்தார்கள். ‘கோழி மேய்க்கிற வேலையா யினும் கொர்ணமேந்து (Government அரசாங்கம்) வேலை வேணும்’ என்ற சொல்லின் அருமை அப்போது தான் தெரிந்தது.

தனியார்துறையில் நிதிச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள் பல போலியான வாக்குறுதிகளை வழங்கிப் பொதுமக்களை ஏமாற்றுகின்றனர். ஆனால் அரச துறையினர் அப்படி பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதில்லை. தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக இன்று அரசதுறையினரை யாரும் கேள்விக்கு உட்படுத்த முடியும். இச் சட்டத்தின் ஊடாக அரச துறை குறித்த கேள்விகளை உரிய படிவங்கள் ஊடாகக் கேட்டு அரச துறையை வலுப்படுத்துங்கள். வெறுமனே முகநூலில் மொக்கையான ஸ்டேட்டஸைப் போட்டு கேலி செய்வது உங்களுக்கு அழகல்ல. எமது நாட்டில் அரசதுறை பொதுமக்கள் சேவைகள் வழங்குவதில் வலுவான துறையாக இருக்கின்றது. மாறி வரும் நவீன உலகுக்கு ஏற்ப வலுவுள்ள துறையாக மாற்றுவதற்குரிய வழிகாட்டல்களே காலத்தின் தேவை. ■

# ஈ.ர நிலம்

நிலம் 20

● ஆத்மீ

உடலளவிலும் மனதளவிலும் சோர்ந்து துவண்டிருந்த, இப்பொழுதுதான் கொஞ்சமாய் தேறியிருக்கிறான். அதையும் பொருட்படுத்தாமல் அவனைத் திரும்பவும் கஷ்டப்பட வைத்துவிட்டேனே என்று தீரனுக்கு வலித்தது. "சே.. என்ன வேலை செய்திட்டன்..." தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

யாருக்குத்தான் வழியில்லை வன்னியில் வசித்த எல்லாக் குடும்பங்களுக்கும் இதே நிலைமை தான். எல்லோருமே பலரைப் பிரிந்து இடம்பெயர்ந்து, வாழ்விடங்களை இழந்து, திக்குத் திசை மாறி அங்குமிங்குமாய் இருந்தார்கள். தேடல்களும் போராட்டங்களும் குறையவில்லை. அங்குமிங்கும் அலைந்து தொலைந்த தம் உறவுகளைத் தேடிக்கொண்டிருந்தார்.

தீரனுக்கும் நட்சத்திரனுக்கும், ஏன் இன்னும் அங்கிருந்த எல்லாப் போராளிகளுக்கும் இதே நிலைமைதான். அவர்கள் போர்க்களங்களிலும், மருத்துவத் தளங்களிலும் இடைவிடாது சுழன்று கொண்டிருந்தார்கள். இடைவெளி கிடைக்கவில்லை. நேரமும் இருக்கவில்லை. ஆனாலும், உள்ளார தவிப்பும், உறவுகளை என்றாவது பார்த்துவிடுவோமா என்ற அங்கலாய்ப்பு மட்டும் ஒட்டியிருந்தது.

இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த உணர்வுகளின் போராட்டமும் நீளப்போகிறது என்று தெரியவில்லை.

........

"தீரா.. எனக்கு கொஞ்சம் வெளிய போகனும்டா.. கொஞ்சம் வாறியா..? மெதுவாய் எழுந்து கொள்ள எத்தனித்தவனை, "பொறு பொறு.. நீ இரு.. நான் வாறன்.." அவசரமாய் ஓடிப்போய் அவனை தாங்கிக்கொண்டே, தோளைப் பிடித்து நிமிர்த்தி தன்னோடு சேர்த்து நடத்தினான். நாலைந்து நாட்களுக்குப் பிறகு இப்பொழுது தான் எழுந்து நடக்கத் தொடங்கியிருக்கிறான். கொஞ்சமேனும் நடந்தால் தான் உடல் இயங்க ஆரம்பிக்கும் கொஞ்சம் உத்வேகமும் உள்ளூர ஏற்படும். இனி அடிக்கடி நடக்க வைத்து விட வேண்டுமென்று எண்ணிக்கொண்டவன், வெளியே செல்லவில்லை.

காயமடைந்து படுக்கையிலிருந்து மருத்துவம் எடுத்துக் கொள்ளும் போராளிகளில் பலருக்கு இந்தப் படுக்கைப் புண் வந்து விடும். பட்ட காயம் மாறினாலும் இந்தப் படுக்கைப் புண் போட்டால் அதனைக் குணப்படுத்த நாளெடுக்கும். தீரனும் ஒரு தடவை அனுபவப்பட்டிருக்கிறான்.

மெதுவாய் வெளியே நகர்த்தி கூட்டி வந்தான். நிறைய நாட்களுப்பின் வெளி உலகம் தனில், தானும் ஒட்டிக்கொண்டதாய் நட்சத்திரனுக்குத் தோன்றிற்று.

நீளப் பரந்திருந்த காற்று இதமாய் தழுவிப்போவதால் ஒரு குளுமையை கொடுத்துக்கொண்டிருந்தது. ஆசுவாசமாக மூச்சிழுத்து வெளிவிட்டவனின் உள்ளத்தில் ஏனோ அந்தப் பூரிப்பு இருக்கவில்லை. இந்தக் காற்றில்எம்மவர்களின் எத்தனை பேரின் இறுதி மூச்சு கலந்திருக்குமென்று எண்ண எண்ண, இன்னுமின்னும் உள்ளூர வலி சேர்ந்துகொண்டது.

அமைதியாய் தூரத்தே வெறித்தான். ஆங்காங்கே எரிந்து கொண்டிருந்த தீப்பிழம்புகளில் பார்வை தட்டி நின்றது. வெறித்தவன், மறுபுறமாகத் திரும்பினான். நாலைந்து குடும்பங்கள் தமது பொதிகளோடு இவர்களது கூடாரத்தைக் கடந்து எங்கோ ஓடிக் கொண்டிருந்தார்கள். பெண்கள், குழந்தைகள் இன்னும் சில ஆண்களுமாக அந்த வேக நடைப் பயணம் நீள்வது தெரிந்தது. கொஞ்சம் உற்று அவதானித்தான் இன்னும் பார்வையை கூர்மைப் படுத்தி யாரையோ தேடுவதற்கு நோக்கினான்.

ஹூம்.. அவன் தேடலுக்கு அர்த்தம் தெரிந்து விட்டது.

"வசந்தன்..." அவனையறியாமல் வார்த்தையொன்று வந்து விழுந்தது. வசந்தன் என்று உச்சரித்துக்கொண்டவன், "தீரா அதில போறவங்களை கூப்பிடு.. டேய், கூப்பிடு.. போகப் போறாங்கள்.." என்று இவனை அவசரப்படுத்தினான். அந்த அவசரத்தில் ஏதோ ஒன்று ஒளிந்திருப்பதாகத் தீரனுக்குத் தோன்றியது.

யார் அவர்கள்? அதிலும் வசந்தன்யார்? யோசனைகளை செலுத்தியபடி, அவர்களை சைகையால் நிற்குமாறு சொல்லிக்கொண்டே, நட்சத்திரனை கிடந்த கதிரையில் அமர வைத்துவிட்டு அவசரமாய் ஓடினான் தீரன்.

அங்கே..

(நனையும்...)



# என்ன வில்லங்கத்தில அதைச் செய்தனியள்? அவங்கள் ஏதேனும் உங்களைக் கேட்டவங்களே?

"மதனச் சந்திர விம்பமோ! மதனச் சந்திர விம்பமோ!! மதனெனச் சந்திர விம்பமோ!!! – ஹி...ஹி விநாசி அண்ணைக்கு அங்கால பாடத் தெரியாது. அதுகும் பாடினதிலையும் எழுத்துப் பிழை எண்டு முதலி நக்கலடிச்சதுதான் தாமதம் விநாசி அண்ணைக்குக் கோபம் கொப்பிலை ஏறீட்டுது. "டேய் நான் பாடின அவ்வளவைத் தன்னும் சரியாத் திருப்பிப் பாடுபாப்பம். ஆனால் ஒரு கெண்டிசன் பாகவதர் பாடின மாதிரி பிசகாமல் பாட வேணும். பாடாட்டி இந்தப் படலையைத் தாண்டிப் போக மாட்டாய் என்ன?" எண்டு விநாசி அண்ணை சொல்லிப் போட்டு நிமிந்து பாத்தால் முதலியையும் அங்க காணேல்லை. சைக்கிளையும் காணேல்லை. முதலி வைச்ச தேத்தணிரியையுங் குடிக்காமல் பறந்திட்டான்.

வந்த உடன முதலி சொன்னவன் அண்ணை ஜனாதிபதி எலச்சனுக்கு நாள் வைச்சிட்டினமாம் எண்டு. இத்தினை தலை இடியுக்கையும் அந்தாள் திகதியை அறிவிச்சுப் போட்டார். ஆனால் என்ன கூத்து நடக்கப்போகுதோ! பரமனுக்குத் தான் வெளிச்சம். கோத்தாவும் கொடுக்கைக் கட்டிக் கொண்டு நிக்கிறார், தான் தான் ஜனாதிபதி வேட்பாளராக் களமிறங்கிறனெண்டு. பசிலின்ர சத்தப் பொறுதியைக் காணேல்லை. மஹிந்தான்ர பெடி பெட்டையளின்ரையும், பெண்சாதியின்ர கதையளும் இன்னும் வரேல்லை. ஆனால் குடும்பத்துக்கையும் இது தொடர்பா இட்டிடஞ்சல் இருக்கிறதாக் கேள்வி. கோத்தா வந்தால் மஹிந்தான்ர குடும்பம் கிளீன் போல்ட் எண்டும் ஒரு கதை இருக்கு. இதுக்க கோத்தாக்கு அமெரிக்காவிலையும் வழக்கிருக்கு. போன மாசமும் இஞ்சையும் சீஐடி கூப்பிட்டு விசாரிச்சதாப் பேப்பரில பாத்தனான்.

அப்ப உதுக்கை ஒரு பெருந் திருவிழாவுக்கான அறிகுறி கனக்க இருக்கெண்டு தான் நான் நினைக்கிறன். அதில சீனடி, சிலம்படி, கரகாட்டம், குதிரை ஆட்டம், பொய்க்கால் குதிரை, நெருப்புப் பந்தம் கொளுத்திச் சுழட்டுற விளையாட்டு எண்டு எலக்சன் களை கட்டும் எண்டுதான் நினைக்கிறன். கோத்தாவும் சும்மா விடான். அந்தாளுக்கு சீனாக்காறன் நாலு இஞ்சிப் பைப்பாலதான் இறைப்பான். மைத்திரியும் விடார். இப்ப இரண்டு நாளைக்கு முன்னம்தான் மோடீட்டையும் போய் வந்தவர். ஹக்கீம், மனோ, தொண்டா எண்டு ஒரு கூட்டுப் போய் வந்தபடியாலை அங்கையும் ஏதோ கூட்டுப் பிராத்தனை நடந்திருக்கும் எண்டது என்ர சமசியம். ஆனால் சீனன் செயற்படுகிற மாதிரி மோடி களத்திலை இறங்கான் பாவி. சுவிங்கத்தைச் சப்பி இழுக்கிற மாதிரி இழுவலாத்தான் இந்தியான்ர நடவடிக்கை இருக்கும். றோக்காரர் அண்ணாந்து வெள்ளி பாக்க முன்னம் சீனன் கதையைக் கொண்டு போயிடுவான் எண்டது என்ர கணக்கு. ஆனால் மோடியும் ஏதோ நல்ல பாதுகாப்புத்தான் ஒண்டுக்கும் பயப்பிடாதயுங்கோ எண்டு மைத்திரியின்ர கையைப் பிடிச்சுக் குலுக்கிக் குலுக்கிச் சொன்னதாக் கேள்வி. பிடியும் முந்தினமாதிரி இல்லை. வலு இறுக்கமாவும், கணச்சூடாவும் இருந்ததாம்.

பாப்பம் என்ன நடக்கப் போகுதெண்டு.

விநாசியின்ர கணக்கு ஒரு நாளும் பொய்க்காது. தெரியுந்தானே? அதை விடுங்கோ. இப்ப நாட்டில என்ன நடக்கப் போகுது எண்டு தெரியேல்லை. எம்பி அத்துரலிய தேரர் உண்ணாவிரதமிருக்கிறார். றிசாட், ஹிஸ்புல்லா, அசாத் சாலி எண்டு எல்லாரையும் பதவி நீக்கச் சொல்லி அவர் ஒரே அடம்பிடிச்சுக் கொண்டிருக்கிறார்.

அப்ப றிசாட் கொம்பனியளுக்கு ஏழரை துவக்கம்போல கிடக்கு. இல்லாட்டி அட்டமத்துச் சனியோ தெரியேல்லை. ஏனெண்டால் மோடியைப் பாக்கப் போன மைத்திரி அங்க நிண்டு ரணிலோட அவசர அவசரமாக் கதைச்சவராம்.

றிசாட்டும், ஹிஸ்புல்லாவும் வெக்கங்கெட்டவங்கள்தான் போல கிடக்கு. சனம் கத்துதெல்லே. சரி ஒருக்கா பதவியை விட்டிட்டுப் போய் நிண்டு கொண்டு அரசாங்கத்திட்ட விசாரணை வைக்கச் சொல்லுங்கோ. அதிலை உங்கள நல்லவர், வல்லவர் எண்டு நிரூபிச்சுக் கொண்டு திரும்பவும் சீனுக்கு வாங்கோ. ஆர் மறிச்சது? இது அதில்லை கதிரையை விட மாட்டம் எண்டு பிடியாப் பிடிச்சுக் கொண்டு இருக்கிறதால எல்லே சனத்துக்கு ஐமிச்சம் வலுக்குது.

நீங்கள் பிழை விடேல்லை எண்டால் உடன வீட்ட போங்கோ. விசாரிச்சுப் போட்டு மைத்திரி கோஷ்டி கதிரையளைக் கூப்பிட்டுத் தருவினம். அதில சந்தேகப்பட வேண்டாம். ஏன் விட்டிட்டுப் போமாட்டம் எண்டு அடம்பிடிக்கிறியள்? இல்லை தெரியாமல்தான் கேக்கிறன்!

இதை நீங்கள் வாசிச்சுக் கொண்டிருக்கேக்க என்ன நடந்திருக்குமெண்டு எனக்குத் தெரியாது. ஆனால் சகோதரங்களுக்கு ஏதாவது பிரச்சினை வரலாம் எண்டது என்ர கணிப்பு. ஏனெண்டால் சகோதரங்கள் செய்த விளையாட்டு ஒண்டு இரண்டே? தொட்டு அதாட்டுக் கனக்க... ஒண்டடி மண்டடியா... கன பேரைப் பேய்க்காட்டிப் போட்டினம். வவுணதீவில சும்மா நிண்ட பொலிஸ்காரரை சுட்டு, வெட்டி, கயித்தால கட்டி, எரிச்சு செய்த கொடுமையை ஆரேன் மறப்பினமே. என்ன வில்லங்கத்தில அதைச் செய்தனியள்?



– வில்லங்கம் விநாசி



# மதங்க
# பெயரா

**கா**ணமாற்போன தனது கணவன் ஊடகவியலாளர் பிரகீத் எகனெலிகொட விடயமாக நீதிமன்றை நாடிய பெண்ணொருத்திக்கு நீதிமன்றிலேயே பயமுறுத்தல் விடுத்த ஞானசார தேரரின் விடுதலை குறித்த விடயத்தில், கிழக்கு ஆளுநர் ஹிஸ்புல்லா, தமிழரை மும்பையிலிருந்து விரட்டியடித்த சிவசேனா அமைப்பைச் சேர்ந்த மறவன்புலவு சச்சிதானந்தன் ஆகியோர் மிகுந்த அக்கறை கொண்டிருந்தனர். இரு அம்சங்களில் இவ் விவகாரம் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவது ஞானசாரர் ஒரு மதகுரு. இரண்டாவது நீதிமன்ற அவமதிப்பு. ஹிஸ்புல்லா விடுத்த கோரிக்கையில் இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தேரர் விடுவிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார். ஏன் 200 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ரகுபதி சர்மாவை விடுவித்தால் நல்லெண்ணம் வராதா? உயிர்த்த ஞாயிறு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர். ஆனால், தமிழர் எதிர்வினை ஆற்றவில்லை. வடமேல் மாகாணம் உட்பட பல்வேறு இடங்களில் சிங்களவரே முஸ்லிம்கள் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அப்படி இருந்தும் பௌத்த மத குருவின் விடுதலையை வலியுறுத்தும் ஹிஸ்புல்லா ரகுபதிசர்மாவின் விடுதலையை அவசியமில்லை எனக் கருதுகின்றாரா? இந்து மதத்தை ஒரு சரியான வாழ்வு நெறியாக ஏற்றுக்கொள்ள மறுப்பதன் மூலம் தானும் சஹ்ரானின் சகாதான் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

ஏற்கனவே ஓட்டமாவடியில் இருந்த இந்துக் கோயிலை அகற்றிய ஹிஸ்புல்லாவின் சாதனை குறித்து முஸ்லிம் இளைஞர்களை உசுப்பேற்றும் காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி இருந்தது. இந்து மதத்தின் மீது தனக்கு வெறுப்பு உள்ளது என்பதை முஸ்லிம்களிடத்தில் நிறுவவே அவர் இவ்வாறு பகிரங்கமாக உரையாற்றி இருந்தார். ஆனால், உண்மை என்ன? இது சம்பந்தப்பட்ட தமிழர் (கோயிலுக்குச் சொந்தக்காரர்) எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் தீவிர பங்காளிகள். அவர்கள் ஓட்டமாவடிப் பகுதிக்கு தினமும் சென்று இக்கோயிலை பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். அதனால், ஏதோவொரு உடன்படிக்கையின் அடிப்படையில் முஸ்லிம் ஒருவருக்கு கைமாறியிருந்தது இக்கோயில் அமைந்திருந்த காணி.

இதுபோல மறவன்புலவு சச்சிதானந்தம் இலங்கையில் ஆதிமதம் என்ற வகையில் பௌத்தத்தின் மதகுரு விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்திருந்தார். அவருக்கும் இந்துமத குருவான ரகுபதி சர்மாவின் விடுதலை ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல திருமலை கன்னியாவிலுள்ள பிள்ளையார் ஆலயம் இருந்த பகுதியில் பௌத்த விகாரை அமைக்கப்படுவது, செம்மலை, நீராவியடி பிள்ளையார் ஆலயப் பகுதிக்குப் பிக்கு உரிமை கோருவது, கனகராயன் குளத்தில் தனியார் காணியில் படையினர் விகாரை அமைத்திருப்பது போன்ற விடயங்கள் தெரியாதது போல் நடந்து கொள்கிறார். அதன் மூலம் இந்தக் காவியுடைக்குள்ளும் ஒரு எதிர்பார்ப்பு உள்ளது என்று வெளிப்படையாகத் தெரிகிறது. நிச்சயம் அது தமிழர்களுக்கு சார்பானதல்ல.

**இந்தியாவில் உள்ளது போல இந்த நாட்டில் பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது இல்லை. இதுநாள்வரை ஜே.வி.பி. இரு வழக்குகளை தாக்கல் செய்தது. இவற்றை பொதுநல வழக்குகள் என்பதைவிட, சிங்கள நலன் அல்லது திமிர் என்றோ தமிழர் எதிர்ப்போ என்றுதான் குறிப்பிட முடியும். முதலாவது வடக்கு – கிழக்கு இணைப்புக்கு எதிரானது. மற்றையது சுனாமி கட்டமைப்பை தகர்க்கும் நோக்கிலானது. இரண்டிலுமே தமிழருக்கு எதிரான தீர்ப்புக்களே கிடைத்தன.**

கடந்த இரு வருடங்களாக திருவாதிரை உற்சவத்துக்கு சிதம்பரத்துக்குச் செல்வதற்காக பயணிகள் கப்பல் விடப்போகிறேன் என்றார். ஆனால், இவரால் மழைக்கு ஒரு காகிதக் கப்பல்கூட விடமுடியவில்லை. பயணிகள் போக்குவரத்து என்பது இரு நாடுகளுக்கு இடையிலான விவகாரம். இரு அரச தலைமைகள் இதில் உடன்பாடு காணவேண்டும். வடக்கு மாகாண சபை மக்களால் தெரிவு செய்யப்பட்டது. அதில் உள்ள 38 உறுப்பினர்களும் வடக்கிலிருந்து தமிழகத்துக்கு கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றி இருந்தனர். அந்த வேண்டுகோளை அரசு குப்பைக் கூடைக்குள் கடாசி இருந்தது. இந்த நிலையில் தனிமனிதனான இவரது கூற்றுக்கு அரசு சம்மதம் அளிக்குமா?


அடுத்தது நீதிமன்ற விவகாரம், நீதிபதிக்கு முன்னாலேயே பயமுறுத்தல் இருந்தமை ஒரு நாட்டின் நீதிக் கட்டமைப்பையே கேள்விக்குறியாக்கும் விடயம். இதற்கு எந்தச் சமாதானமும் சொல்ல முடியாது. எனினும் நீதித்துறையை சவாலுக்கு உட்படுத்தி உள்ளார் ஜனாதிபதி மைத்திரி, ஜனாதிபதியாக மகிந்த இருந்தபோது தனக்கு உடன்பாடு இல்லாத தீர்ப்பை வழங்கிய பிரதம நீதியரசரை பதவியிலிருந்து நீக்கினார். கிட்டத்தட்ட அந்த வகையிலேயே சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டது. ஞானசாரதேரரும் நீதிக்கு முரணாகவே ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

3 குற்றங்களுக்கான தண்டனையும் ஏக காலத்தில்ஞானசாரர் அனுபவிக்க வேண்டும்என குறிப்பிட்டிருந்தது. அந்த வகையில் இவர் 6 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும். எனினும் 6 மாதம் கூட நிறைவடையாமலேயே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். இதுவும் ஒரு வகையில் நீதிமன்ற அவமதிப்பாகவே கருத வேண்டியுள்ளது. ஜே. ஆரின் ஆட்சிக் காலத்தில் பிரதம நீதியரசரின் இல்லத்தின் மீது கல் வீச்சு நடத்தப்பட்டது. இப்போது தீர்ப்பையே தூக்கி எறிந்து விட்டார் ஜனாதிபதி. தேரரின் விடுவிப்பு சட்டப்படி செல்லபடியாகாது எனத்தீர்ப்பளிக்கும்படி நீதிமன்றில் மனு சமர்ப்பித்துள்ளனர் சிரேஷ்ட சட்டத் தரணிகள்.

இந்தியாவில் உள்ளது போல இந்த நாட்டில் பொதுநல வழக்குகள் தாக்கல் செய்யப்படுவது இல்லை. இதுநாள்வரை ஜே.வி.பி. இரு வழக்குகளை தாக்கல் செய்தது. இவற்றை பொதுநல வழக்குகள் என்பதைவிட, சிங்கள நலன் அல்லது திமிர் என்றோ தமிழர் எதிர்ப்போ என்றுதான் குறிப்பிட முடியும். முதலாவது வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிரானது. மற்றையது சுனாமி கட்டமைப்பை தகர்க்கும் நோக்கிலானது. இரண்டிலுமே தமிழருக்கு எதிரான தீர்ப்புக்களே கிடைத்தன.

இதேவேளை, நீதிமன்றை அவமதித்தமை தொடர்பான வழக்கினை தமிழ் இளைஞர்களுக்கும் எதிர்நோக்க உள்ளனர். ஞானசாரதேரர் வேண்டுமென்றே நீதிமன்றில் ஏறி தப்புச் செய்தார். தமிழ் இளைஞர்கள் உணர்ச்சி வேகத்தில் தவறிழைத்தனர். அந்தச் சம்பவம் இதுதான்.

உயித்த ஞாயிறு சம்பவ
பாதிக்கப்பட்டவர்கள் த
ஆனால், தமிழர் எதிர்வி
ஆற்றவில்லை. வட
மாகாணம் உட்பட பல்
இடங்களில் சிங்கள
முஸ்லிம்கள் மீது தாக்கு
மேற்கொண்டுள்ளனர் அ
இருந்தும் பௌத்த மத
வின் விடுதலையை வலி
தும் ஹிஸ்புல்லா ரகுபதி
வின் விடுதலையை அ
மிக்கவை எனக் கருத
றாரா? இந்து மதத்தை
சரியான வாழ்வு நெற
ஏற்றுக்கொள்ள மறுப்
மூலம் தானும் சஹ்ரா
சகாதான் என்பதை
நிரூபித்துள்ளார்.





# ...களின்
# ...ால்...!

பு சம்பவத்தில்
ர்கள் தமிழர்.
ர் எதிர்வினை
வடமேல்
பட பல்வேறு
சிங்களவரே
து தாக்குதலை
ளனர் அப்படி
த்த மத குரு
யை வலியுறுத்
ா ரகுபதிசர்மா
யை அவசிய
க் கருதுகின்
மதத்தை ஒரு
வு நெறியாக
மறுப்பதன்
சஹ்ரானின்
பதை அவர்
.



மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டதையடுத்து குற்றவாளிகளை பிடித்து ஒப்படைத்தபோதும் பொலிஸார் தன்னிச்சையாக அவர்களை தப்பிப் போக வைத்தனர். தப்பிச் சென்றவர்கள் நீதிமன்றுக்கு கொண்டுவரப்பட உள்ளனர் என்ற வதந்தியையடுத்து நீதிமன்றச் சூழலில் ஆர்ப்பாட்டம் செய்தபோது உணர்ச்சிவசப்பட்ட நிலையில் நீதிமன்றுக்கும் கல்லெறிந்து தவறிழைத்தனர் இளைஞர்கள். அவர்கள் அனைவரும் நீண்ட காலமாக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

"தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பாக்கனும்
தப்பு செய்தவன் தருந்தியாகனும்"

என்ற வரிகள் உள்ள பாடல் 'நம்நாடு' திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளது. அந்த வகையில் தமிழ் இளைஞர்கள் செய்தது தவறு. ஞானசாரர் செய்ததோ தப்பு. தப்புச் செய்த ஞானசாரதேரர் திருந்தியதாகத் தெரியவில்லை. ஆனால், தவறு செய்த இளைஞர்கள் இன்னமும் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்கொண்டுள்ளனர்.

ஞானசார தேரருக்குச் சட்டப்படி திருமணம் ஆகாது. தமிழ் இளைஞர்களோ திருமணம் செய்து வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியவர்கள். எந்தவொரு தமிழ் அரசியல் வாதிகளும் ஞானசாரதேரரின் விடுதலையை சுட்டிக்காட்டி இவர்களை வழக்கிலிருந்து விடுவிக்குமாற ஏன் கேட்காமல் இருக்கிக்கின்றனர் என்பது புதிர்தான். இலங்கையின் பாரம்பரிய மதத்தைக் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்டு ஞானசாரதேரரின் விடுதலையை வரவேற்ற மறவன்புலவு சச்சிதானந்தன் கூட இந்த இளைஞர்களை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு ஏன் கேட்கவில்லை என்பது ஒரு புதிர்தான். அரைக்காற்சட்டையுடன் இராணுவத்தினரின் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அவர், அந்தச் செல்வாக்கு மூலமாவது இந்த இளைஞர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதியைக் கேட்கலாமே.

இந்தியாவில் தனக்கு மிகப்பெரிய செல்வாக்கு உண்டு என நிரூபிக்க பகீரதப்பிரயத்தனம் செய்கிறார் மறவன்புலவார். இவர் ஆதரிக்கும் இந்துத்துவக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி தனது இரண்டாம் ஆட்சிக் காலத்தில் அடியெடுத்து வைத்துள்ளது. ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டோரை மாநில அரசு விடுவிக்கலாம் என தெரிவிக்கப்பட்டாது. தமிழக அரசு இவர்களின் விடுதலை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளது. மறவன்புலவாரின் உணர்வும் உயிருமாகவுள்ள உறவுகளின் ஒருவரே தமிழக ஆளுநர். ஆனால், அவரோ இவ்விடயத்தை கிடப்பில் போட்டுள்ளார். மௌன விரதம் அனுஷ்டிக்கிறார்.

சங்கிலியனின் விழாவைக்கொண்டாட இந்தியத் தூதரகம் அனுசரணை வழங்குகிறது. புனித கங்கைகளின் நீரைக் கொண்டு வருகிறோம்; இந்துக் கட்சியினர் வருகின்றனர் என்றெல்லாம் பிரமாண்ட அறிவிப்புக்கள் வந்தன. இதே செல்வாக்கைப் பயன்படுத்தி 7 தமிழர் விடயத்தில் தமிழக ஆளுநர் மனமிரங்க வேண்டுமென மறவன்புலவார் வேண்டுகோள் வகுக்கலாம் அல்லது யாகம் செய்யலாம். அப்படியொரு யாகம் செய்ய முனைந்தால் அதற்குத் தேவையான நிதியை உண்டியல் குலுக்கியேனும் வழங்க தமிழினம் தயாராக உள்ளது. யாகம் மூலமோயோகம்வழியாகவோ இந்தியச்செல்வாக்கினை வெளிப்படுத்த மறவன்புலவார் முன்வர" வேண்டும். அப்படியே புலிகள் மீதான தடையை நீக்கவும் அவர் முயற்சித்தால் நல்லது.



# அதிசயச் சுற்றறிக்கை

■ றியாஸ் குரானா

அரச பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அரச உத்தியோகத்தர்கள் எந்தவகையான ஆடைகளை அணிய வேண்டும் என்ற கட்டளையைச் சுற்றிக்கையாக வெளியிட்டுள்ளது.

அதன் முதலாவது சரத்தில் ஆண்களுக்கான உடையாக, மேலாடையும் காற்சட்டையும் அணிய வேண்டும் அல்லது தேசிய ஆடை அணிய வேண்டும் என அறிவித்திருக்கிறது.

இதில் காற்சட்டை என்று மட்டுமேகூறப்பட்டிருக்கிறது. எந்தவகையான காற்சட்டை என்ற தெளிவான பதங்களோ, விபரிப்புக்களோ இல்லை. அரைக் காற்சட்டைகளுக்கும் இதனூடாக அனுமதி வழங்குகிறது என்றே நினைக்கிறேன். "மேற்சட்டை" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் சொல்லுக்கும் தெளிவான விபரிப்புகள் ஏதுமில்லை. எந்தவகையான மேற்சட்டைகளையும் அணிய முடியும் என்பதற்கு இந்த அறிக்கை அனுமதியளிக்கிறது.

இப்படியான தெளிவற்ற அறிவித்தல் என்பது உண்மையில் ஆண்களின் ஆடைபற்றிய கவனயீனமாக இருப்பதுடன், இந்தச் சுற்றறிக்கை உண்மையில் ஆண்களைமையப்படுத்தி அல்லது ஆண்களை கவனத்திற்கொண்டு வெளியிடப்படவில்லை என்பதை தெளிவாக்குகிறது.

அப்படி எனில், உண்மையில் இந்தச் சுற்றறிக்கை பெண்களை கவனத்திற்கொண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது என ஊகித்துக்கொள்ளலாம்.

அதிலும் குறிப்பாக எந்தச் சமூகத்தைச் சேர்ந்த பெண்களை இலக்கு வைத்து வெளியிடப்பட்டிருக்கிறது என்ற கேள்வி எழலாம். அதையும் சிந்தித்துப் பார்க்கலாம்.

பெண்களின் ஆடை தொடர்பில்தான் அதிகமான சரத்துகள் இந்த அறிக்கையில் இருக்கிறது.

முதலாவது சரத்திலேயே பெண்கள் "சேலை" அல்லது "கண்டியச் சேலை" அணிவது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இதனூடாக முஸ்லிம் பெண்களின் ஆடையை இலக்கு வைத்துதான் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

இந்த அறிக்கையின் மூன்றாவது சரத்து, பெண்கள் கர்ப்ப காலத்தில் அவர்களுக்கு சௌகரியமான ஆடைகளை அணிந்து வரலாம் என்று கூறுகிறது. ஆக, கர்ப்ப காலத்தில் விரும்பிய ஆடைகளை அணியலாம்.

கட்டாயம்ஹபாயா அணிந்தே ஆக வேண்டும் என்று கருதுகிற முஸ்லிம் பெண்கள், அனேகமாக அனைத்து காலங்களிலும் கர்ப்பவதியாக இருக்கப்போகிறார்கள். எனவே, அவர்களின் சனத்தொகை வீதம்கூடப்போகிறது. இதை அறிந்தால் அரசு சிலவேளை அதிலும் மாற்றங்களைக் கொண்டுவருமோ தெரியாது...!

எனினும், சரத்து 4 ஒரு விசித்திரமான கட்டளையைக் கொண்டிருக்கிறது..

"ஏதேனும் சமய மரபுக்கு இணங்க தங்கள் ஆடைகளை அணிய விரும்பும் உத்தியோகத்தர்கள், சரத்து ஒன்றில் கூறப்பட்டிருக்கும் ஆடையையும் அணிந்து, அதன்பின்னர், ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகத்தை மறைக்காத ஆடை அணிகலன்களை அணிய முடியும்" எனச் சொல்கிறது.

இதை இப்படி எளிமையாக சொல்ல முடியும், சேலையை அணிந்து, அதற்கு மேலாக சமய மரபை அடையாளமிடும் ஆடையை அணியலாம் என இந்தச் சரத்து கூறுகிறது.

அதாவது, சேலைக்கு மேலால் ஹபாயாவை அணிய வேண்டும். அல்லது அணியலாம். சரி, கேள்வி என்னவென்றால், ஹபாயாவுக்குள் என்ன வகையான உடையை அணிந்திருக்கிறார் என எப்படித் தெரிந்து கொள்வது என்பதுதான்?

ஹபாயாவை அணிந்திருந்தால் உள்ளே என்னவகை ஆடை உள்ளது என்பதை உறுதிப்படுத்த, ஹபாயாவை "கிளப்பிக்" காட்ட வேண்டுமா? அல்லது உள்ளே சேலை அணிந்திருக்கிறேன் என கூறினால் போதுமானதா? வாயால் கூறினால் போதுமானதெனில்ஏன் உள்ளே சேலை அணிய வேண்டும்?

**இந்தச் சுற்றறிக்கை, உலகிலேயே ஒரு அதிசயமான அறிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இதுதான் முதன் முதலாக ஒரு பெண் எந்த வகையான "உள்ளாடையை" அணிய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறது. இதற்காகவேனும் நோபல் பரிசொன்றை வழங்க வேண்டும்.சமய மரபு சார்ந்த ஆடையை அணிய இருக்கும் அனுமதியை வைத்துக்கொண்டு ஒரு முஸ்லிம் பெண் ஹபாயாவை அணிந்தால், உள்ளே சேலை கட்டயாம் அணிந்திருக்க வேண்டும் என்ற சரத்தையும் கடைப்பிடித்தால் உண்மையில் இந்தச் சுற்ற றிக்கையின் பொருள் என்ன?**

இந்தச் சுற்றறிக்கை, உலகிலேயே ஒரு அதிசயமான அறிக்கையாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், இதுதான் முதன் முதலாக ஒரு பெண் எந்த வகையான "உள்ளாடையை" அணிய வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறது. இதற்காகவேனும் நோபல் பரிசொன்றை வழங்க வேண்டும்.

சமய மரபு சார்ந்த ஆடையை அணிய இருக்கும் அனுமதியை வைத்துக்கொண்டு ஒரு முஸ்லிம் பெண் ஹபாயாவை அணிந்தால், உள்ளே சேலை கட்டயாம் அணிந்திருக்க வேண்டும் என்ற சரத்தையும் கடைப்பிடித்தால் உண்மையில் இந்தச் சுற்றறிக்கையின் பொருள் என்ன?

அரச உத்தியோகத்தராக இருக்கும் ஒரு முஸ்லிம் பெண் எந்த வகையான"உள்ளாடையை" அணிய வேண்டும் என்பதை பற்றிய சுற்றறிக்கைதானே இல்லையா..? ■

# நல்லதொரு முடிவு

■ வினோபன்


ஈழத்தமிழனின் ஆதிமதம் எது என்றால் அது சைவசமயமே. ஆனால் காலப்போக்கில் தமிழர்களில் சிலர் கிறிஸ்தவ மதத்தை பின்பற்றத் தொடங்கினர். அது மதச்சுதந்திரம். தான் விரும்பும் எந்த மதத்தை பின்பற்ற எந்த இனத்தவருக்கும் உரிமை உண்டு.

ஆனாலும் தமிழனின் கலாசாரம் எனும்விடயத்தில் பெரிய மாறுதல்களை கிறிஸ்தவம் ஏற்படுத்தவில்லை.. துப்பாக்கி விஜய் மற்றும் அவரது நண்பர்கள் போல தினசரி கோட்டும் சூட்டுமாக அலையவில்லை..சில சில மாறுதல்கள். அவ்வளவே.

அது போலவே தமிழைப் பேசிய இன்னொரு சாரார் இஸ்லாமிய சமயத்தை சுவீகரித்து தமது நம்பிக்கைப்படி இறைவனை தமது வணக்கஸ்தலத்தில் தொழுதனர். அவர்களும் தமது தமிழ்க் கலாசாரத்தை மாற்றவில்லை. இஸ்லாமிய அன்னையர் முக்காடு இட்டு சேலை அணிந்தனர். இஸ்லாமிய யுவதிகள் பொதுவாக சேலை அல்லது சல்வார் தான் அணிந்து வந்தனர்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவ அஷ்ரஃபின் பாரியார் கூட தலைமுடி தெரியுமாறு சேலை தான் அணிந்தார்.ஆக மதமாற்றம் ஏற்பட்டாலும் கலாசார அடிநாதம் ஒன்றுதான்.

ஆனால் அரேபிய வஹாபிச அடிப்படைவாத தவிரவாத சிந்தனை இலங்கைக்குள் ஊடுருவத் தொடங்கிய பின்னரே ஹபாயா / நிகாப் எனும் பெண்களை அடிமைப்படுத்தும் உடைகளும், தமிழரின் கலாசாரத்தில் இருந்து விடுபட்ட பாலைவன காட்டுமிராண்டி அரேபிய கலாசாரமும் பலாத்காரமாக திணிக்கப்பட்டு இஸ்லாமிய சொந்தங்கள் எம்மை விட்டு கலாசார ரீதியில் அந்நியப் படுத்தபட்டனர். அராபியக் கலாசாரமே இஸ்லாத்தை பின்பற்றுபவர்களின் கலாசாரம் எனும் ஒரு மாயை எல்லோர் மத்தியிலும் புற்றுநோய் போல பரப்பப்பட்டு விட்டது.



முஸ்லிம் மக்களின் தேசியத் தலைவர் அஷ்ரப், அவரது மனைவி பேரியல் அஷ்ரப்

இப்பொழுது அரசநிறுவனங்களில்அபாயாவுக்குத் தடை. சேலை அல்லது ஓஸரி(கண்டியச் சேலை) மாத்திரமே அணிய வேண்டும். இது குறித்து பொதுநிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சுற்றுநிருபம் வெளியாகியுள்ளது. ஒரு அருமையான முடிவு.

இது உண்மையில் இலங்கையர்எம்எல்லோருக்கும் கிடைத்தபெற்றி. அதைவிட இஸ்லாத்தை பின்பற்றும் தமிழர்களுக்கான பெருவெற்றி. தமிழ்க் கலாசாரத்துக்கான வெற்றி. அராபிய அடிப்படைவாதத்துக்கு நடு மண்டையில் விழுந்த மோசமான அடி.

எனது கண்களுக்கு மௌலவி சஹ்ரான் அவர்கள் இலங்கையை நேசித்த ஒரு தேவதூதுவனை போல தோற்றம் தருகின்றார். ஏனெனில் சஹ்ரான் செய்த வேலையால் தானே இத்தனை மாற்றமும். ■

இலங்கையில் சமூக வலைத்தளங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டதற்கே ஒற்றைக் கையை இழந்தது போல் பலர் பரிதவித்துப்போய்விட்டனர். திடீரென ஓர்நாள் கூகுள் போன்ற தளங்களின் கணினி சேவையகங்கள் முற்றிலும் இயங்காமல் போனால் என்னவாகும்?

இது ஏற்கனவே, 2013இல் ஒருமுறை நடந்ததுதான். கோடிக்கணக் கான எண்ணிலடங்கா தகவல்கள் ஒரே நொடியில் பறிபோகும் அபாயத் திலிருக்கும் நிரந்தரமற்ற டிஜிற்ரல் யுகத்தில் தான் நாம் வாழ்ந்து கொண் டிருக்கிறோம். தகவல்களை பத்திரப்படுத்த காகிதம் தற்காலி கக் கருவியாக பயன்படுத்தப்பட்டு, அதிலும் பாதுகாப்பற்ற பயன்முறையைக் கொண்டிருக்கும் கணினிகளும் கைத்தொலைபேசிகளும் தகவற் பதிவு மற்றும் சேமிப்புக்கான முக்கிய சாதனங்களாகவே மாறிவிட்டன.

ஆனால் நம் வரலாற்று இலக்கியங்களை நமக்குத் தந்த 'ஓலைச் சுவடிகள்', முற்றிலும் இயற்கையான மற்றும் இயற்கைக்கு ஒருபோதும் தீங்கிழைக்காத ஒன்றென்பதை நினைத்து வியக்கின்றேன். அதன் ஆயுளும் மேற்கூறிய அனைத்தை விடவும் அதிகம் மற்றும் நம்பகத்தன்மை வாய்ந்ததும் கூட.

சற்று சிந்தித்துப்பார்த்தால் புரியும் தமிழர் நாம் நமது வரலாற்று சான்றுகள் பலவற்றை தொலைத்துவிட்டோம். பிறர் தம் அடையாளங்களை எங்கு சென்றாலும் பதித்து விடுகின்றனர். ஆனால் நம் அடையாளங்களோ அழிக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வருகின்றன. இந் நிலையில் மீதமிருப்பவற்றையாவது முறையாகப் பேணாவிட்டால் நாம் நம் சந்ததியினருக்கு கையளிப்பது மண்ணோடு மண்ணாக மக்கிப்போகும் கருவிகளையே. நம் வரலாற்றை ஓலைச்சுவடிகள் மூலம் தெரியப்படுத்திவிட்டு சென்றுள்ளனர் நம் முன்னோர். அவற்றைக்கூட நம்மால் பாதுகாக்க முடியவில்லை என்றால் தமிழ் இனம் இருந்ததற்கான அடையாளமே இல்லாது போய் விடும்.

இந்த ஆதங்கமே என்னை கோயிலார் சிவசாமியிடம் அழைத்துச் சென்றது. தமிழ் மொழியின் பெருமையை பலர் அறியாமல் வாழ்ந்து வந்த காலத்தில் பல புராணக் கதைகளின் வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் நோக்கில், ஏட்டின் வழியாக எழுதிப் பாதுகாத்து வருபவர் தான் முல்லைதீவு புதுக்குடியிருப்பை சேர்ந்த கோயிலார் சிவசாமி.

நம் எதிர்கால சந்ததியினருக்காக தன் இளமைப்பருவத்திலிருந்து புராணக்கதை மற்றும் பழங்கதைகளை ஏட்டு சுவடிளில் பொறித்து பாதுகாத்து வருகின்ற சிவசாமியிடம் கருத்தாழம் மிக்க ஓர் நேர்காணலை மேற்கொள்வதற்காகச் சென்றிருந்தேன். கைகளில் ஏட்டுச் சுவடியுடன் எதையோ எழுதிக் கொண்டிருந்தார் சிவசாமி.

# "நான் இருக்கும் வரை ஏட்டுச்சுவடி உயிர் வாழும்"

## -ஒரு தமிழனின் ஆதங்கம்-

1. உங்களுக்கு ஏட்டில் எழுத வேண்டும் என்ற ஆவல் எப்போழுது வந்தது? ஏன் வந்தது?

ஏட்டில் எழுதும் ஆர்வம் எனக்கு இளம் வயதிலிருந்து இருக்கிறது. நம் வரலாற்றுக் கதைகளை நம் சந்ததியினருக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்ற ஆவலே என்னை ஏட்டுச் சுவடிகளைத் தொடவைத்தது. நூல்களில் எழுவதை விட ஏட்டில் எழுதினால் அதிக காலத்துக்கு இருக்கும். இதனால் அடுத்தடுத்து வரும் சந்ததியினர் நம் பழைமைகளை, வரலாற்றுக் கதைகளை அறிய முடியும்.

ஆரம்பத்தில் உள்ள அ, ஆ, இ என்ற எழுத்துக்கள் தான் இன்றும் பழக்கத்தில் உள்ளது. முற்காலத்தில் உள்ள வானம், பூமி தான் இன்றும் உள்ளது. இதெல்லாம் நமக்கு எவ்வாறு தெரியும் நம் முன்னோர் நமக்கு ஓலைச் சுவடிகள், கல்வெட்டுக்கள் மூலம் தெரியப்படுத்தியதனால்த்தான். ஆதி காலங்களில் நிகழ்ந்த விடயங்களை எதிர்கால சந்ததியினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமே என்னை இந்த எண்பத்து ஐந்தாவது வயதிலும் ஏட்டுச் சுவடியை எழுதத் தூண்டுகின்றது. தொடர்ந்தும் எழுதிக்கொண்டிருக்கின்றேன். என்னால் முடியும் வரை எழுதிக்கொண்டிருப்பேன்.

2.ஏடுகளில் நீங்கள் எவ்வாறான விடயங்களை எழுதுகின்றீர்கள்?

நம் பாரம்பரிய புராண இதிகாசக் கதைகள் பலவற்றை எழுதி வருகின்றேன். வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வராலாற்றினை ஏட்டில் எழுதி கோயிலுக்கு அன்பளிப்பு செய்திருக்கின்றேன். அதற்குப் பிறகு போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஏடுகள் எழுதவில்லை தற்போது அம்மனின் காவியம் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றேன்.

3. போருக்கு முன்னர் நீங்கள் எழுதிய ஏடுகள் தற்போது பாதுகாப்பாக இருகின்றனவா?

போருக்கு முன்னரான காலப்பகுதியில் வற்றாப்பளை கண்ணகி அம்மனின் வரலாற்றை எழுதி வைத்திருந்தேன். அது ஆலயத்தில் இருந்ததால் போர்க்காலத்தில் பாதுகாப்பாக இருந்தது. எனது வீட்டில் இருந்த சில சுவடிகள் அழிவடைந்து விட்டன. அவற்றை என்னால் பாதுகாக்க முடியவில்லை.

4. உங்களுக்குப் பின்னர் உங்களது இந்தப் பணி தொடருமா? உங்களால் எழுதப்பட்ட ஏடுகள் பாதுகாக்கப்படுமா?

நான் எழுதிய ஏட்டு சுவடிகள் எனக்குப் பிறகு பாதுகாக்கப்படுமா என்று



எனக்குத் தெரியாது. ஏனெனில் எனக்குப் பிறகு என் சந்ததியினர் யாரும் ஏட்டு சுவடியை எழுதுவதுவதற்கு ஆர்வமாக இல்லை. ஆனால் நான் இருக்கும் வரை ஏட்டுச்சுவடி உயிர் வாழும்.

5. ஏட்டுச்சுவடி எழுதுவதற்கு நீங்கள் ஏன் பனை ஓலையைத் தேர்ந்தெடுத்தீர்கள்?

இலை, மரப்பட்டை, களிமண், பலகை போன்றவை விரைவில் அழியக் கூடியவை. பெரிய நூல்களில் எழுதிக் கையாள்வதும் கடினம். உலோகத் தகடுகளில் எழுதுவது பொருட் செலவை ஏற்படுத்தும். ஆனால் ஓலைச் சுவடியோ இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு அழியாதது. செலவு குறைந்தது இலகுவாகவும் எழுதக்கூடியது. இதனாலேயே நான் பனை ஓலையைத் தேர்ந்தெடுத்தேன். அதிலும் பெண் பனை ஓலையைத்தான் தேர்ந்தெடுத்தேன்.

6.ஏட்டு சுவடியினை எவ்வாறு தாயாரித்து எழுதுவது என்று சொல்லுங்கள்?

பனை மரத்தின் வகைக்கேற்ப ஓலைகளிலும் ஆண் ஓலை, பெண் ஓலை அலி ஓலை என மூன்று வகையிருக்கும். அதிலும் பனைமரத்திலிருக்கும் ஓலைகளில் நடுநிலையில் உள்ள ஓலையைத் தான் தேர்ந்தெடுப்போம். அவற்றை தனியாக நரம்பு நீக்கி பிரித்தெடுத்து அதன் பின்னர் தேவையான அளவில் வெட்டி எடுத்து, நீண்டகாலம் அழியாமல் இருப்பதற்காக அவற்றை நிழலில் உலரவிடுதல், பனியில் பதப்படுத்தல், என பல முறைகளைக் கையாண்டு பதப்படுத்துவோம். அதற்குப் பிறகு அந்தப் பனை ஓலைகளை தேவையான அளவு சுத்தரித்து ஏடுகளை நன்றாக உலரவிடுவோம். பின்னர் ஓலைகளை வெந்நீரில் போட்டு வேக வைப்போம். இவ்வாறு கொதிக்க வைக்கும்போது ஏடுகளில் ஒரு பதமான நிலை ஏற்படும். பின்பு ஓலைகளை மறுபடியும் காய வைத்து கனமான சங்கினைக் கொண்டு ஏட்டின் பளபளப்புக்காகத் தேய்ப்போம் பின்னர் எழுத்தாணி கொண்டு தேவையான விடயங்களை உரிய முறையில் எழுதுவோம்.

7. ஏடுகளை தயாரித்த பின்னர் எவ்வாறு அதைப் பாதுகாப்பீர்கள்?

ஏட்டில் எழுத மை இல்லை அதனால் அச்சாணி கொண்டு எழுதிய ஏட்டின் எழுத்துக்களை தெளிவாக்கவும், கறையான் அரிக்காமல் பாதுகாக்கவும் கொவ்வமிலை, முள்முருங்கையிலையை அரைத்து சாறு எடுத்து சூடாக்கி வேப்பெண்ணெய் சேர்த்து பூசி உரசி காய விட்டால் ஏட்டில் உள்ள எழுத்துக்கள் பளபளப்பாகவும், கறையானுக்கு இரையாகாமல் பாதுகாப்பாகவும் இருக்கும்.

*அவர் காண்பித்த ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட நம் தாய் மொழியின் சிறப்பை வியந்து விடை பெற்றுவிட்டு வரும் போது மனதில் பல கேள்விகள். நம் வரலாற்றை ஓலைச்சுவடிகளில் ஆவணப்படுத்துபவர்கள் இவரைப் போல எத்தனை பேர் இருக்கின்றனர். இது இவ்வாறே சிவசாமியுடன் போய் விடுமா? அடுத்து வரும் தலைமுறையினர் இதைத் தம் சந்ததியினருக்குக் கொண்டு செல்வார்களா? தமிழனின் அளப்பரிய வரலாற்றுக்கு நீண்ட ஆயுள் உண்டா? இவற்றுக்கெல்லாம் பதில் தரவேண்டியவர்கள் இன்றைய தலைமுறையினரே! சிந்தித்து செயற்படுவோம்.*

ந.சர்மியா
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்



# ‘சாட்சிகள் இல்லாத போர்’

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து வெள்ளைக் கொடிகளை ஏந்திய வண்ணம் சரணடைவதற்கென நடந்து வந்த பொழுது இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

இலங்கைப் போரின் இறுதி ஐந்து மாத காலப் பிரிவின் போது 40,000 சிவிலியன்கள் கொல்லப்பட்டிருக்க முடியும் என 2012ஆம் ஆண்டில் ஐ.நா. செயலாளர் நாயகம் மதிப்பிட்டிருந்தார். பல போர் நிலைமைகளைப் போலவே இங்கும் கொல்லப்பட்டவர்களின் சரியான எண்ணிக்கை சர்ச்சைக்குரியதாக இருந்து வருவதுடன், இது மேலே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க உயர்வானதாக இருந்து வர முடியும்.

போர் முடிவடைந்ததனை அடுத்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வட புலத்தில் வன்னிப் பிராந்தியத்தில் அமைந்திருந்த வசதி வாய்ப்புக்கள் எவையுமற்ற, அசுத்தமான முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டார்கள். இன்றும் கூட ஆயிரக்கணக்கான தமிழர்கள் தமது சொந்த நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

**‘சாட்சிகள் இல்லாத போர்’**

ருவாண்டாவில் ஓர் இனப் படுகொலை கட்டவிழ்த்து விடப்பட முடியும் என்ற விடயம் முன்னரே தெரிந்திருந்தாலும் கூட, அது தொடர்பாக சர்வதேச சமூகத்தினால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறானால்தமிழ் இனப்படுகொலை வேண்டுமென்றே மூடி மறைக்கப்பட்டதாகவும், “சாட்சிகள் இல்லாத போராகவும்” கருதப்படுகின்றது.

இந்த இரு நிகழ்வுகளிலும் ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பவற்றுக்கு நேரடி எச்சரிக்கைகள் கிடைத்திருந்தன. ஆனால், அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதிலிருந்தும் அவை தவிர்த்துக் கொண்டன. ருவாண்டா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் செயல்முடக்கம் “மிகவும் பாரதூரமான தோல்விகளாக” ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ருவாண்டாவின்கடந்த கால நிகழ்வுகளை கவனத்தில் எடுப்பதற்கான ஒரு வெளிப்படையான முயற்சியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளில் “வன்முறைக் கும்பல்களின்” 61 தலைவர்களுக்கு குற்றத் தீர்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. பாலியல் வன்முறையை ஒரு இனப்படுகொலைச் செயலாகக் கருதும் மிக முக்கியமான தீர்மானமும் அந்த நீதிமன்றத்தின் முடிவுகளில் ஒன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது. சுமார் இருபது இலட்சம் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் உள்ளூர் “ககாக்கா நீதிமன்றங்களில்” முன்னெடுக்கப்பட்டன. ருவாண்டாவில் ஹூட்டு மற்றும் டுட்சி பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அந்நாட்டின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

ருவாண்டாவின் இந்த நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகள் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியிலும் கூட, உண்மையில் அந்த நாட்டில் என்ன நடந்தது, அது ஏன் நடந்தது போன்ற விடயங்களை பதிவு செய்துள்ளன.

அதற்கு மாறான விதத்தில், இலங்கையில் போர் காலத்தின் போது இடம் பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக புலன் விசாரணைகளை நடத்தி, அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்படும் என வழங்கியிருந்த அதன் வாக்குறுதிகளை இலங்கை மீண்டும் மீண்டும் மீறி வந்துள்ளது. இந்த வாக்குறுதி மீறலின் வரலாற்றுக்கு மத்தியில் ஆள் கடத்தல்கள், தடுப்புக் காவல் கைதிகளின் சித்திரவதைச் சம்பவங்கள் மற்றும் பாலியல் வன்முறை என்பன, பரவலாக இடம்பெற்று வருகின்றன.

**விடுவிக்கப்படாத ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள்**

தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு எதிரான துன்புறுத்தல்களும், அதேபோல முஸ்லிம் சமூகத்தின் மீது இலக்கு வைக்கப்பட்ட வன்முறைச்சம்பவங்களும்தொடர்ந்து நாட்டில் நிகழ்ந்து வருகின்றன. இராணுவக் களைவு மற்றும்ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீண்டும் மக்களிடம் கையளித்தல் என்பன தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இலங்கையின் பலவீனமான அரச கட்டமைப்புக்கள், சுயாதீனமான ஒரு நீதித்துறை இல்லாதிருக்கும் நிலை மற்றும் தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் கலாசாரம் என்பன, இது தொடர்பாக நாடு எதிர்கொண்டு வரும் மிக முக்கியமான இடையூறுகளாக இருந்து வருகின்றன.

ஹார்வார்ட் பல்கலைக்கழக அறிஞர் மார்த்தா மினோ கூறுவதைப் போல மீண்டும் மீண்டும் இடையறாது கொடூரச் செயல்கள் இடம்பெறுவதற்கு பழிவாங்கல் மற்றும் மன்னித்தல் என்பவற்றுக்கிடையிலான “அதீத மறதி” மற்றும் “அதீத நினைவுகூரல்” என்பவற்றுக்கான ஒரு பாதை தேவைப்படுகின்றது. இன்றைய இலங்கையில் நினைவு மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் என்பன, கடந்த கால நிகழ்வுகளுக்கு பொறுப்புக்கூறுவதற்கு தடையாக இருந்து வரும் அரசின் உத்தியோகபூர்வ கதையாடல்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் தீவிர நிலைப்பாடுகளாக உள்ளன.

யூத இனப்படுகொலைகளின் போது உயிர் தப்பிய பிரிவோ லேவி ஒரு முறை இப்படிக் கூறியிருந்தார்: “அது நிகழ்ந்துள்ளது. எனவே அது மீண்டும் நிகழ முடியும். அது எல்லா இடங்களிலும் நிகழ முடியும்.”

தண்டனைக்கு அச்சமின்றி குற்றம் புரியும் நிலையும், மிகக் கொடூரமான குற்றச் செயல்களுக்கான மூலகாரணங்களை களையத் தவறும் நிலையும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் வரையில் இலங்கையைப் பொறுத்தவரையில் நிலையான ஒரு சமாதானம் என்பது ஒரு மாயையாகவே இருந்து வரும். கடந்த கால நிகழ்வுகளை ஏற்றுக்கொள்வது பொருள்மிக்க நல்லிணக்கத்துக்கான ஒரு முன்நிபந்தனையாக இருந்து வருதல் வேண்டும்.

சேரனின் கவிதைத் தொகுதியில் இருக்கும் கவிதை வரிகள் பாரிய வன்முறைகள் நிகழும் சந்தர்ப்பங்களில், அத்துடன் எல்லாவற்றையுமே முடித்துக் கொள்ள வேண்டியிருக்கும்சவாலைஎடுத்துக்காட்டுகின்றது:

முற்றிற்று என்று சொல்லி
காற்றிலும் கடலிலும் கரைத்து விட்டு
கண்மூட
காற்றும் கிடையாது
கடலும் கிடையாது
காடாற்று எப்போதோ?

**கவிஞரும் வின்ட்சர் பல்கலையின் இணைப் பேராசிரியருமான சேரன் மற்றும் குயீன்ஸ்பல்கலையின் சட்டத்துறை இணைப் பேராசிரியரான ஷெரீன் எய்க்கென் ஆகியோர் எழுதி Theconversation தளத்தில் Rwanda and Sri Lanka: A tale of two genocides என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்**

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

குடும்ப உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உருவாகக் கூடும். எல்லோரையும் திருப்திப்படுத்த நினைத்துக் கடும் மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். அநாவசியச் செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்புக் கரையும். உடன்பிறந்தோருடன் மனஸ்தாபம் தோன்றும். உறவினர்களின் இல்ல விசேஷங்களில் பொறுப்புகளைச் சுமக்க நேரும். வாகனங்களை இயக்கும்போது அதிக எச்சரிக்கை தேவை. மாணவர்கள் பரீட்சை நேரத்தில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது நன்மை தரும். பிள்ளைகளின் செயல்கள் மனமகிழ்ச்சி தரும் வகையில் அமையும். பெற்றோரின் உடல்நிலையில் கண்டிப்பாக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## இடபம்

தனிப்பட்ட முறையில் உங்களது கௌரவம் உயரும். சுற்றி நடக்கும் பிரச்சினைகளில் தலையிட்டு சுமுகத் தீர்வு காண முற்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கலாம். கேளிக்கை, கொண்டாட்டங்கள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காக அதிகம் செலவழிப்பீர்கள். பணத்தேவை குறித்த கவலை ஒருபுறம் இருந்தாலும் செலவழிக்கத் தயங்கமாட்டீர்கள். குடும்பத்தில் கலகலப்பும் சலசலப்பும் கலந்திருக்கும். மாணவர்கள் கல்வி நிலையில் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள்.

## மிதுனம்

ஆடம்பரப் பொருட்கள் சேரும். கூடுதலாக செலவு ஆனாலும் சுகமான சூழலை அனுபவிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழல் நிலவும். குடும்பத்தோடு உல்லாசப் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள். முக்கியமான பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் சிறப்பான நற்பெயரை அடைவீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். உடன்பிறந்தோர் உங்கள் உதவியை நாடி வரக்கூடும். வாழ்க்கைத் துணை பக்க பலமாக இருப்பார்.

## கடகம்

நீங்கள் பேசும் வார்த்தைகள் காரிய வெற்றிக்குத் துணைபுரியும். பொருளாதார நிலை கணிசமாக உயரும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வரும் கடன் தொகை வந்து சேரும். உடன்பிறப்புகளுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். மாணவர்களின் கல்வி நிலை உயர்வடைவதோடு விளையாட்டுக்களின் மீதான ஆர்வம் அதிகரிக்கும். குடும்பத்தினரோடு உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. மருத்துவ செலவுகள் உண்டாவதற்கான வாய்ப்பு உண்டென்பதால் உடல்நிலையில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

## சிம்மம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடன் பிறந்தோருக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டியிருக்கும்.

வாகனப் பராமரிப்புச் செலவு கூடும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது உடல் நலத்துக்கு நல்லது. மாணவர்கள் தங்கள் திறமையின் மூலம் வகுப்பில் முன்னிலை பெறுவார்கள். உறவினர்களின் வழியில் ஒரு சில சங்கடங்களை சந்திப்பீர்கள். வாழ்க்கைத்துணையின் பணிகளுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும்.

## கன்னி

பொருளாதார வரவு நிலை அதிகரித்தாலும் அதற்கேற்ற வகையில் செலவுகளும் வரிசையில் காத்து நிற்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். விவாதம் செய்வதால் தீர்வு கிடைக்காது. அதிகம் பேசாது அமைதியாக இருங்கள். உடன்பிறந்தோர் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவார்கள். மாணவர்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் காணக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சொத்துக்கள் சார்ந்த வழக்கு விவகாரம் முடிவுக்கு வரும். கடன் பிரச்சினைகள் முற்றிலுமாகக் குறைந்திருக்கும். கடுமையான அலைச்சல் உடல்நிலையில் அசதியைத் தோற்றுவிக்கக் கூடும்.

## துலாம்

ஆடம்பரப் பொருட்களின் மேல் நாட்டம் செல்வதைத் தவிர்க்க இயலாது. செலவுகள் வரிசையாகக் காத்து நிற்கும். எனினும் மன மகிழ்ச்சியைத் தரும் சுபசெலவுகளாக அமையும்.

குடும்பத்தில் சலசலப்பும், கலகலப்பும் தடைப்பட்டுவந்த காரியங்கள் விரைவாக நடைபெறும். பிள்ளைகளின் வழியில் சுபசெலவுகளைச் சந்திப்பீர்கள். மாணவர்கள் கல்வி நிலையில் சிறிது சுணக்கத்தைக் காண நேரிடலாம். உறவினர்களால் ஒரு சில கலகங்களை சந்திக்க வேண்டியிருக்கும். வாழ்க்கைத் துணையின் பணிகளுக்குத் துணை நிற்பீர்கள். தொழில்முறையில் அடிக்கடி பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

## விருச்சிகம்

மனதில் இருக்கும் கோபதாபங்கள் பேசும் வார்த்தைகளில் வெளிப்பட்டு உங்களுக்கு அவப்பெயரைத் தோற்றுவிக்கக் கூடும். குடும்பத்தில் சிறு சலசலப்புகள் தொடர்ந்து இருந்து வரும். பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கங்கள் இருந்து வரும். பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.

சொத்துப்பிரச்சினைகளில் உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு உண்டாகக் கூடும். பிள்ளைகளோடு கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. சிந்தனையில் குழப்பம் இருக்கும். நண்பர்களுக்கு உதவப் போய் வீண் சங்கடத்துக்கு ஆளாவீர்கள்.

## தனுசு

புதிய சொத்து வாங்குவதற்கான முயற்சி தடைபடும். குடும்பத்தில் அமைதி நிலவும். முன்பின் தெரியாத நபர்களிடம் அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. வெளிநாட்டுப் பயணம் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். மனதில் இருந்து வந்த குழப்பமான நிலை மாறி தெளிவான சிந்தனையோடு செயற்படுவீர்கள். நண்பர்களின் துணை தக்க சமயத்தில் கைகொடுக்கும். கடன்பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பீர்கள். தொழில் முறையில் வளைந்து கொடுக்க வேண்டி ஏற்படும்.

## மகரம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் இழுபறி காண்பீர்கள். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இடம் பிடிக்கும். உடன் பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். கடன் பிரச்சினைகள் தலையெடுக்கும். முன்பின் தெரியாத மனிதர்களை நம்பி புதிய முயற்சிகளில் இறங்குவதைத் தவிர்க்கவும். வாகனங்களால் ஆதாயம் உண்டாகும்.

## கும்பம்

நினைத்த காரியத்தைச் செய்து முடித்து நற்பெயர் காண்பீர்கள். பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை. சொல்ல நினைக்கும் கருத்துக்களை ஆணித்தரமாக வெளிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும்.

பொருளாதார நிலை ஏற்ற இறக்கத்தோடு இருந்து வரும். உடன்பிறந்தோரால் ஒரு சில சங்கடங்களை சந்திக்கநேரிடும். குறைந்த விலையுள்ள பொருளை அதிக விலைக்கு வாங்கி ஏமாறும் வாய்ப்பு உண்டு. வாகனங்களின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.

## மீனம்

அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவெடுக்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். பொருள் வரவு சீராக இருக்கும். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இருக்கும். செலவு அதிகரிக்கும். கடன்பிரச்சினைகள் தலைதூக்கும். மாணவர்கள் தங்கள் கல்வி நிலையில் சற்று சிரமத்தைக் காண்பார்கள். பிள்ளைகளால் ஒரு சில விவகாரங்களில் கூடுதல் செலவைச் சந்திக்க நேரலாம். உடல் நிலையில் சிரமம் உண்டாகும். கௌரவம் கருதி செய்ய வேண்டிய செலவுகள் உயரும்.

கட்டார் நாட்டின் டோகாவில் 23ஆவது தடகளப் போட்டிகள் கடந்த மாதம் ஆரம்பமானது. அதில் 800 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்பந்தயத்தின் இறுதிச் சுற்றில் கலந்துகொண்டிருந்தாள் தமிழ் நாட்டின் கருப்புத் தமிழச்சி கோமதி. 800 மீற்றர் ஓட்டம் என்பது 100 மீற்றர் ஓட்டத்தைப் போன்றதல்ல. எடுத்த எடுப்பிலேயே வேகத்தோடு ஆரம்பித்து வெற்றிக்கோட்டைத் தொடுவதென்பது சற்றுக் கடினம். அளவான ஓட்டத்தோடு தொடங்கி பின்னர் முன்னேறும் வேகத்தைக் கூட்டி இறுதியில் அதிவேகப் பாய்ச்சலோடு முடிக்கும் போதுதான் வெற்றிக்கனியை ருசிக்கலாம்.

'டுமீல்' என்ற வெடியோசையோடு ஓடத்தொடங்கிய வீராங்கனைகள் 400




# ஏழையின் தங்கம்

மீற்றரைத் தாண்டியபோது, கோமதி கொஞ்சம் அதிகரித்து அடுத்த 200 மீற்றரைக் கடந்த போது சீன வீராங்கனை வாங் சூங்யூ 150 என்ற இலக்கத்தை மார்பில் அணிந்தபடி சிவப்பு நிற டூ பீஸ் உடையுடன் கோமதியை முன்னேறியிருந்தாள். இன்னும் மிச்சமிருப்பது 200 மீற்றர் மட்டுமே.

இந்தக் கடைசி 200 மீற்றர்தான் சவால் மிக்கது. இந்தச் சீனப் பெண்ணை வெல்வது கொஞ்சம் கடினமானதுதான் என்று ஒரு நொடி தோன்றியது 30 வயதான கோமதிக்கு. 'எனக்கு இரண்டாவது இடம்தான் கிடைக்குமா?' என்ற கேள்வி உடன் மின்னலாய்த் தோன்றி மறைந்தது. 'இத்தனை காலம் காத்திருந்தது இப்படிக் கோட்டை விடவா? இல்லை நான் வெல்வேன். வென்றால்தான் என் ஏழை அப்பாவின் கனவு நிறைவேறும். உயிரைக் கொடுத்தாவது ஓடுவேன்' என்று நினைத்த போது கோமதிக்காகவே தன்னைச் சிதைத்து மண்ணில் புதைந்துபோன அவளது தந்தையின் முகம் அவள் கண்களில் தெரிந்தது. 'நீ தோற்கமாட்டாய் ஓடு மகளே' என்ற அவரது குரல் காதில் ஒலிக்க எப்படித்தான் அவள் கால்களுக்கு அப்படியொரு வேகம் வந்ததோ தெரியாது. புலியெனப் பாய்ந்தாள். இது மனிதக் கால்களா என்று சந்தேகம் கொள்ளும் பாய்ச்சல். வெறும் 26 நொடிகளில் சீன மங்கையை பின் தள்ளி கோமதி எல்லைக் கோட்டைத் தொட்ட போது போட்டியைக் காண மைதானத்தில் குழுமியிருந்த இந்தியர்களும் தமிழர்களும் எழுப்பிய கரகோசம் வானத்து மேகங்களையும் அதிரப் பண்ணியது. டி.வியில் பார்த்துக்கொண்டிருந்த முழு இந்திய நாட்டு மக்களும் மகிழ்ச்சியின் உச்சத்தில் வானுக்கும் பூமிக்குமாய்க் குதித்தார்கள்.

அவள் ஓடியதைத் தொலைக்காட்சியில், சமூக வலைத்தளங்களில் பார்த்தவர்களுக்குத் தெரியும் அவளது இரண்டு கால்களிலும் இரண்டு வெவ்வேறு நிற ஷூக்கள். ஒன்று பச்சை. ஒன்று இள நீலம். அவற்றின் ஜோடிகள் பிய்ந்துவிட்டன. இரண்டும் மூன்று வருடங்களுக்கு முன் வாங்கிய பழைய ஷூக்கள். இந்த வெற்றியைத் தொட அவள் தாண்டியது பள்ளங்கள் அல்ல. பாதாளங்கள். நெருஞ்சி முட்கள் அல்ல. இரும்புக் கூர் ஆணிகள். வெற்றியின் பின் அ.தி.மு.க. சார்பில் தமிழக முதல்வர் பழனிச்சாமி ஊக்கத்தொகையாக 15 இலட்சம் ரூபாவும், தி.மு.க. சார்பில் அதன் தலைவர் ஸ்டாலின் தேனாம் பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் வைத்து 10 இலட்சம் ரூபாவும் வழங்கியிருந்தாலும், ஒரு காலத்தில் உண்பதற்கு சத்தான உணவில்லாமல், வீட்டில் நிற்கிற பசு மாட்டில் பால் கறந்து குடிச்சிட்டு, சில சமயம் பட்டினியாகக் கூடப் போய் மைதானத்தில் பயிற்சிகளைப் பெற்றவள்தான் இந்த வறுமையில் வாழ்ந்த கோமதி.

இந்தியாவின் தமிழ்நாடு மாகாணத்தின் திருச்சி மாவட்டத்தில் உள்ள மணிகண்டத்தை அடுத்துள்ள முடிகண்டம் என்ற சிற்றூரில் 1989ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி பிறந்தாள் கோமதி. தந்தை மாரிமுத்து தாயார் ராசாத்தி இருவரும் வயலில் வேலை செய்தவர்கள். மாட்டுக்கொட்டகை போன்ற ஒரு சின்ன ஓட்டு வீடு. நான்கு பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் கோமதிக்கு ஒரு அண்ணன். இரண்டு அக்கா. கோமதி கடைக்குட்டி. விவசாயக் கூலியில் தான் குடும்பம் அரை வயிறு, கால் வயிறு உண்டது.

சின்ன வயதில் இருந்தே களத்து மேட்டிலும், வரப்புகளிலும் எப்ப பார்த்தாலும் குடு குடுவென ஓடிக்கொண்டிருப்பாள் கோமதி. 'நான் ரேஸ் ஓடப்போறன்' என்று சதா சொல்லிக்கொண்டிருப்பாள். வறுமை காரணமாக தன் மகள்களான லதாவை அரியலூரிலும் திலகவதியை விராலிமலையிலும் சின்ன வயதிலேயே கட்டிக்கொடுத்துவிட்டார் மாரிமுத்து. கோமதியை பன்னிரெண்டாம் வகுப்புடன் நிறுத்திவிடலாம் என அவர் நினைத்த போது, 'நான் படிக்கவேண்டும்' எனத் தந்தையுடன் மல்லுக்கட்டினாள் கோமதி. கல்விக்காக தன்னுடன் சண்டையிடும் மகளின் பிடிவாதத்தைச் சமாளிக்க முடியாமல், 'கடைக்குட்டிதானே கஷ்டப்பட்டாவது படிக்க வைப்போம்' என்று சரி என்றார் தந்தை.

ஊரில் இருக்கும் பள்ளியில் 12, 13 வகுப்புவரை படித்தவளை கல்லூரியில் சேர்க்க வேண்டுமென்றால் திருச்சிக்கு வரவேண்டும். அதற்கு பஸ் பிடித்தாக வேண்டும். பஸ் போக்குவரத்துக்கூட இல்லாத குக்கிராமம் முடிகண்டம். திருச்சி போகும் பஸ்ஸைப் பிடிப்பதற்கு தரிப்பிடத்துக்கு ஊரில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரம் நடந்து வரவேண்டும். திருச்சி வர பஸ்ஸில் 25 கிலோ மீற்றர் பயணம் செய்ய வேண்டும்.

(அடுத்த வாரமும் ஓடுவாள்)

**கவிஞர் பிரேம்ராஜ், கொழும்பு**

# மார்பகப் புற்றுநோயை தோற்கடித்த சீமா!





உலக அளவில் பெண்களைப் பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் முதல் இடத்தில் உள்ளது. வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றம், உணவுப் பழக்கம், உடல் பருமன் அதிகரிப்பு, மரபணு மாற்றங்கள், குழந்தைப் பேறு இல்லாமை, 12 வயதுக்கு முன் மாதவிடாய் தொடங்குதல், 54 வயதுக்குப் பிறகும் மாதவிடாய் நீடிப்பது, கதிர்வீச்சுக்கு உட்படுதல் போன்றவற்றால் மார்பகப் புற்றுநோய் வருகிறது. இந்நிலையில், மார்பகப் புற்றுநோயைத் தொடக்கத்திலேயே கண்டறியும் உள்ளாடையை வடிவமைத்துப் பெண்களின் ஒட்டுமொத்தப் பாராட்டையும் பெற்றிருக்கிறார் முனைவர் சீமா.

முனைவர் சீமா தலைமையிலான குழுவினர் வடிவமைத்த அந்த உள்ளாடையை 250 பெண்களை அணியவைத்து பரிசோதித்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவரான கேரளாவைச் சேர்ந்த இந்திரா என்ற பெண்ணுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது, இந்த உள்ளாடை மூலம் தொடக்க நிலையிலே கண்டுபிடிக்கப்பட்டு, அவருக்கு சிகிச்சையளித்துக் குணப்படுத்திவிட்டார்கள்.

ஆரம்பத்திலேயே புற்றுநோயை இனங்காண முடியாமையால் தான் பல உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. எனவே, இலத்திரனியல் துறையில் புதிய கண்டுபிடிப்பை உருவாக்கி, அதன் மூலம் மார்பகப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே எப்படி கண்டறியலாம்? என்று சிந்தித்திருக்கிறார் சீமா. 2018 ஆம் ஆண்டு அதற்கான தீர்வைக் கண்டுபிடித்துவிட்டார். மார்பகப் புற்றுநோயைக் கண்டறியும் உள்ளாடையை உருவாக்கினார். இதை முனைவர் சீமா பணிபுரியும் சீமெட் என்ற நிறுவனத்தின் ஆராய்ச்சிப்பிரிவு உருவாக்கியுள்ளது.

"புற்றுநோய் பாதித்த திசுக்கள் பரவும்போது உடல் சீதோஷ்ண நிலையில் மாற்றங்கள் தோன்றும். அதனை கண்டறிவதற்காக ஒரு மில்லி மீற்றர் நீளமும், ஒரு மில்லி மீற்றர் அகலமும், ஒன்றரை மில்லி மீற்றர் கனமும் கொண்ட சென்சர்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனை வடிவமைத்து துணியால் உருவான உள்ளாடைக்குள் வைத்துத் தைத்திருக்கிறோம். அவைகள் மூலமான தகவல்கள் கணினி வழியாகப் படங்களாக சேகரிக்கப்படுகின்றன. இதன் மூலம் மார்பகப் புற்றுநோயை தொடக்க நிலையிலே மிக எளிதாகக் கண்டுபிடித்துவிடலாம். இதில் கதிர்வீச்சு பற்றிய எந்தப் பயமும் இல்லை." என்கிறார் முனைவர் சீமா. இதற்காக இவருக்கு விருதுகளும், பாராட்டுக்களும் குவிந்துகொண்டிருக்கின்றன.

# கூந்தல் அழகியாக மாற வேண்டுமா?



உங்களின் கூந்தலுக்கான ஊட்டச்சத்தை சத்தான காய்கறிகளின் மூலமாக மட்டுமே கொடுக்க முடியும். ஊட்டச்சத்தை இயற்கையான பொருட்களைக் கொண்டு எப்படிப் பெறலாம் என்பது குறித்துப் பார்க்கலாம்.

**சின்ன வெங்காயம்**

சின்ன வெங்காயத்தை அரைத்து சாறு எடுத்துக் கொள்ளவும். இரண்டு தேக்கரண்டி தேன் சேர்க்கவும். வெங்காய வாசனையைப் போக்க சிறிதளவு ரோஸ் தண்ணீரைக் கலந்து கொள்ளலாம். இந்தக் கலவையை தலை முடியில் தடவி 40 முதல் 50 நிமிடம் வரை வைத்திருந்து கழுவவும்.

**உருளைக் கிழங்கு**

இரண்டு மூன்று உருளைக் கிழங்குகளைத் துருவி சாறு எடுக்கவும். அதனுடன் ஒரு தேக்கரண்டி தேன், முட்டையின் மஞ்சள் கரு மற்றும் சிறிதளவு தண்ணீர் சேர்த்து நன்றாகக் கலக்கவும். 30 நிமிடங்கள் தலையில் தேய்த்து ஊறவைத்துப் பின் முடியை அலசவும்.

**பூண்டு**

முடி வளர்ச்சிக்கு பூண்டுச்சாறினை முடியின் வேர்க்கால்களில் படும்விதமாகத் தேய்த்துக் குளித்தால் முடி வளர்ச்சி அதிகரிக்கும்.

**கொத்தமல்லி**

புதிதாக நறுக்கப்பட்ட கொத்தமல்லி இலைகளை அரைத்து சாறு எடுத்துக் கொள்ளவும். அதை தலையில் தேய்த்து ஒரு மணி நேரம் ஊறவைத்துப் பின் முடியை அலசவும்.

**கரட்**

கரட் சிலவற்றை வேக வைத்து, அரைத்து, அதில் வேக வைத்த தண்ணீரைக் கலந்து தலை முடியில் தேய்க்கவும் 30 நிமிடத்துக்குப் பின் முடியை அலசவும்.

# சுபாஸ் சந்திரபோஸை விஞ்சிய சுந்தரலிங்கம்

## அடங்கா தமிழன்

அடிமைத் தமிழன்

**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். சுந்தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகிறார் அடிமைத்தமிழன்.**





உலகம் அறிந்த பெயர் சுந்தரலிங்கம். யாழ்ப்பாண மக்கள் கூட அறியாத ஒரு பெயர் சுபாஸ் சந்திரபோஸ். பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இராணுவப் போராட்டம் நடத்திய இந்திய சுதந்திரப் போராட்ட வீரர். யாழ்ப்பாணத்தில் இப்போதும் சில வீடுகளில் சுபாஸ் சந்திரபோஸின் பிரேம் போட்ட படம் காணப் படுகின்றது.


சுபாஸ் சந்திரபோஸும் சுந்தரலிங்கமும் இந்திய நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றினர். சுபாஸ் சந்திர போஸ் தோல்வியடைந்தார் சுந்தரலிங்கம் சித்தியடைந்தார். சுபாஸ் சந்திரபோ்ஸ் அடுத்த வருடமே இரண்டாவது தடவையாகத் தோற்றி சித்தியடைந்தார். இந்த விடயத்தை ஈழ விடுதலைப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈழவேந்தன் சுந்தரலிங்கத்தின் 101ஆவது பிறந்த தினத்தன்று கொழும்புப் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ளார். பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இந்திய நிர்வாக சேவைப் (ICS - Indian Civil Service)

அந்தப் பரீட்சையில் சித்தியடைந்தால் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் பணி புரியலாம். பின்னாளில் இலங்கைக்குத் தனியாகத் பரீட்சை நடாத்தப்பட்டது. இந்தப் பரீட்சை சி.சி.எஸ். (CCS - Ceylon Civil Service) vன அழைக்கப்பட்டது. பின்னர் சி.ஏ.எஸ். (CAS - Ceylon Administrative Service) எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தற்போது இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை (SLAS - Srilanka Administrative Service) என அழைக்கப்படுகின்றது.

---

# தமிழீழம் இன்னொரு எரித்திரியா

■ கலையரசன்



**"2017ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், எரித்திரிய அதிபரின் வலதுகரமாக பதவியில் இருக்கும் ஒருவர் நெதர்லாந்துக்கு வருகை தந்திருந்தார். நமக்கு அன்டன் பாலசிங்கம் மாதிரி ஒருவர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர் அங்கு ஒரு மகாநாட்டில் பேசுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் மகாநாடு நடத்த அனுமதி மறுக்கப் பட்டது. அந்த இடத்தில் ஒரு சிறிய கலவரம் நடந்து ஓய்ந்துள்ளது. உண்மையில் என்ன நடந்தது?"**

ஒரு வேளை, புலிகளின் தலைமையில் தமிழீழம் என்ற தேசம் உருவாகி இரு தசாப்த காலமாகி விட்டது என்று வைத்துக் கொள்வோம். தற்போது புலி ஆதரவாளர்கள் அரச ஒத்தோடிகள் என்று அழைக்கப்படுவார்கள். புலி எதிர்ப்பாளர்கள் அரச எதிர்ப்பாளராக கருதப்படுவார்கள். ஏனென்றால், இறுதியில் புலிகளின் நோக்கமும் தமிழீழ "அரசு" அமைப்பது தான் இல்லையா?. அந்தத் தமிழீழ அரசின் ஆதரவாளர்கள், அரச ஒத்தோடிகள் தானே.

இப்போது கண் முன்னால் காணக்கூடிய ஆதாரத்துக்கு வருவோம். இரு தசாப்த காலத்துக்கு முன்னர், எதியோப்பியாவில் இருந்து எரித்திரியாவை விடுதலை செய்வதற்காக EPLF இயக்கம் போராடியது. EPLF என்பது நமக்குப் புலிகள் மாதிரி. அதன் தலைவர் இசையாஸ் அபெவெர்கி நமக்கு பிரபாகரன் மாதிரி.

எரித்திரியா சுதந்திரமான தனி நாடான பின்னர், முன்பு விடுதலை இயக்கமாக இருந்த EPLF ஆட்சி அமைத்தது. அதன் தலைவர் ஜனாதிபதி ஆனார். எதியோப்பியாவில் இருந்து பிரிந்த பின்னர் சில வருடங்கள் எல்லைப் போர் நடந்தது. எரித்திரிய அரசு அதைக் காரணமாகக் காட்டி, ஜனநாயகத்தை மறுத்து வருகின்றது. தேர்தல்கள் நடத்துவதில்லை.

இப்போது புலம்பெயர்ந்த நாடுகளுக்கு வருவோம். இரு தசாப்த காலத்துக்கு முன்னர், அதாவது எரித்திரிய விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில் பெருந்தொகை அகதிகள் ஐரோப்பா சென்று குடியேறி விட்டனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களில் பெரும்பகுதியினர் புலிகளை ஆதரிப்பது மாதிரி, அன்று வந்த எரித்திரியர்களில் பெரும்பகுதியினர் EPLF ஆதரவாளர்கள். அதாவது இன்றைய நிலையில் எரித்திரிய அரச ஆதரவாளர்கள்.

2017ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், எரித்திரிய அதிபரின் வலதுகரமாக பதவியில் இருக்கும் ஒருவர் நெதர்லாந்துக்கு வருகை தந்திருந்தார். நமக்கு அன்டன் பாலசிங்கம் மாதிரி ஒருவர் என்று நினைத்துக் கொள்ளுங்கள். அவர் அங்கு ஒரு மகாநாட்டில் பேசுவதற்கு ஏற்பாடாகி இருந்தது. ஆனால், கடைசி நேரத்தில் மகாநாடு நடத்த அனுமதி மறுக்கப் பட்டது. அந்த இடத்தில் ஒரு சிறிய கலவரம் நடந்து ஓய்ந்துள்ளது. உண்மையில் என்ன நடந்தது?

மகாநாட்டை ஒழுங்குபடுத்தியவர்கள், நெதர்லாந்தில் வாழும் இரண்டாந்தலைமுறை எரித்திரிய இளைஞர்கள். அவர்களது பெற்றோர் இருபது வருடங்களுக்கு முன்னர் வந்து குடியேறியவர்கள். தமது பெற்றோர் மாதிரியே, இந்த இளையோரும் EPLF ஆதரவாளர்கள். ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்த இரண்டாந் தலைமுறையை சேர்ந்த புலி ஆதரவு தமிழ் இளையோருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இலகுவாகப் புரியும்.

அதே நேரம், எரித்திரியா தனி நாடாக சுதந்திரம் அடைந்த பின்னர், பெருமளவு அகதிகள் ஐரோப்பா வந்துள்ளனர். அண்மைக் கால அகதிகள், ஒன்றில் எல்லைப் போரை எதிர்த்து வெளியேறி இருப்பார்கள். இல்லாவிட்டால் அபெவெர்கி அரசை எதிர்ப்பவர்களாக இருப்பார்கள்.

நெதர்லாந்தில் மகாநாடு நடக்கவிருந்த இடத்தில், அபெவெர்கி அரச எதிர்ப்பாளர்கள் (நமக்கு புலி எதிர்ப்பாளர்கள் மாதிரி) ஒன்று கூடி விட்டனர். மகாநாட்டை நடத்த விடுவதில்லை என்று கலகம் செய்தனர். நிலைமை எல்லை மீறிச் செல்வதைக் கண்ட உள்ளூராட்சி சபை மகாநாட்டை தடை செய்து விட்டது.

அங்கு நடந்த சம்பவங்கள், எவ்வாறு புலம்பெயர்ந்த நாடுகளிலும் எரித்திரிய மக்கள் பிளவு பட்டுள்ளனர் என்ற உண்மையை உணர்த்தியது.

அண்மைக் காலத்தில் வந்த அகதிகள், தமக்கு தாயகத்தின் உண்மை நிலைமை தெரியும் என்று கூறுகின்றனர். அதற்கு மாறாக புலம்பெயர் சூழலில் வளர்ந்த இரண்டாந் தலைமுறையினருக்கு அங்குள்ள உண்மை நிலவரம் தெரியாது என்று வாதிடுகின்றனர். இதே நிலைதான் புலம்பெயர் தமிழர்களுக்கும்.






கேள்வி: ஆண்கள் செய்யும் தப்புகளுக்கு பெண்கள் எப்படி பழிவாங்குகிறார்கள்?

**கே.பரமேஸ்வரன், சங்கானை**

**பதில்** - அம்மாவுக்குப் பழிவாங்கத் தெரியவில்லை. மனைவி அப்படியல்ல. ஏதாவது சமைத்து வைத்து விடுகிறார்.

கேள்வி: மனைவி ஊரில் இருந்து வருகிறாள். ரயில்வே ஸ்டேசனில் அவளை எப்படி வரவேற்பது? உனக்கு அந்த அனுபவம் இருக்கும்தானே?

**எம்.சந்திரமோகன், திருநெல்வேலி**

**பதில்** - ஒரு ரயில்வே ஸ்டேஷனில்,

மனைவி: ஏங்க இப்பிடி கடுகடுன்னு முகத்தை வச்சிருக்கிறீங்கள்? பக்கத்துல இருக்கிறவரைப் பாருங்கோ. பொண்டாட்டியோட எவ்வளவு சந்தோஷமா இருக்கிறார்.

கணவன்: விபரம் கெட்டவளே, அந்தாளு வழியனுப்ப வந்திருக்கிறாண்டி... நான் உன்னை அழைச்சுக்கொண்டுபோக வந்திருக்கிறன்.

கேள்வி: அப்பிள், ஒரேஞ் என்று வகை வகையா நித்தம் பழங்களாச் சாப்பிட்டு என் மனைவி என் பேர்ஸைக் காலி பண்ணுகிறாள். கேட்டா, "பழம் சாப்பிட்டா முகம் பளிச்சென்று அழகாயிருக்கும்" என்கிறாள். அது உண்மையா?

**சி.கிரிதரன், அராலி**

**பதில்** - மருந்து அடிச்ச பழங்களைச் சாப்பிடுற உங்களுக்கே அப்பிடின்னா, ப்ரெஸ்ஸா மரத்தில இருக்கிற பழங்களைப் பிடுங்கிச் சாப்பிடுற குரங்குகளோட முகம் அழகாகவா இருக்கு!

கேள்வி: திராட்சையோடு த்ரிஷா, ஒறேஞ்சோடு கீர்த்தி சுரேஷ், வோட்டமெலனோடு நயன்தாரா உன்னை நெருங்கினால் கோடையைச் சமாளிக்க உன் சொய்ஸ் எது?

**ஆர்.பாலச்சந்திரன், புன்னாலைக்கட்டுவன்**

**பதில்** - ஹி...ஹி... மனைவிக்குத் தெரியாமல் எப்போதும் மிக்ஸ் புருட் ஜூஸ் குடிப்பதுதான் எனக்குப் பிடிக்கும்.

கேள்வி: அட்சய திருதியைக்கு என்ன வாங்கினாய் கைப்புள்ள?

**ஈ.ரோஹினி, நீர்வேலி**

**பதில்** - "ஏன் எதுவும் வாங்கவில்லை" என்று வீட்டில பாட்டுத்தான் வாங்கினன்.

கேள்வி: மனிதர்கள் பிறந்ததும் பெயர் வைக்கிறார்கள். அது போல மிருகங்களும் தங்கள் பிள்ளைகளுக்கு பெயர் சூட்டினால் எப்படியிருக்கும்?

**சி.விஜிதா, இடைக்காடு**

**பதில்** - ஒரு கோழிக்குஞ்சு தன் தாயிடம் கேட்டது, "மனிதர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கிறார்கள். நமக்கு ஏன் பெயர் வைப்பதில்லை.", அதற்கு தாய்க்கோழி சொன்னதாம், "நாம் இறந்த பின் அவர்கள் எமக்குப் பெயர் வைப்பார்கள். சிக்கன் 65, சிக்கன் ப்ரை, சில்லி சிக்கன், சிக்கன் குருமா, டெவல் சிக்கன், சிக்கன் கறி என்று."

கேள்வி: ஆசை, பேராசை இரண்டுக்கும் என்ன வித்தியாசம் கைப்புள்ள?

**கே.சொரூபன், மீசாலை**

**பதில்** - நீ கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைக்கிறது ஆசை. ஆனா, அதுக்குப் பிற சந்தோஷமா இருக்கணும்னு நினைச்சா அது பேராசை.

கேள்வி: வானிலை அறிக்கை வாசிக்கச் சொன்னால் இந்தக் கோடையை எப்படிச் சொல்வாய்?

**எம்.சந்திரவதனி, கெருடாவில்**

**பதில்** - தோசைப் போட்ட சட்டை 5 நிமிசத்தில காயும். குளிச்சிட்டுப் போட்ட சட்டை 2 நிமிடத்தில நனையும்.




## சொல்லுங்கோ டொக்டர்

# உடல் சூட்டை தணிப்பது எப்படி?

**கேள்வி:-** எனக்கு 25 வயது. என் உடல் காய்ச்சல் வந்தது போல் எப்போதும் சூடாகவே இருக்கிறது. உடல் எப்போதும் சூடாக இருக்க என்ன காரணம்? இதைத் தவிர்க்க நான் என்ன செய்யவேண்டும்?

**ஆ. மயூரன், அச்சுவேலி**

**பதில்:-**

சூட்டு உடம்பு என்பது எமது சமூகத்தில் அடிக்கடி பாவிக்கப்படும் ஒரு சொற்றொடர். இதனால் உடல் சூட்டைத் தணிக்க அதைச் சாப்பிடு இதைச் சாப்பிடு என இலவச ஆலோசனை தரும் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் குறைவே இருக்காது. ஆனால் அந்த ஆலோசனைகள் பெரும்பாலும் அறிவியல் ரீதியாக இருக்காது. அர்த்தமற்ற வெறும் செவிவழி ஆலோசனைகளாகவே இருக்கும்.


காய்ச்சல் என்று உணரும் நீங்கள், உங்கள் உடல் வெப்பத்தை வெப்பமானி கொண்டு அளந்து பார்த்திருக்கிறீர்களா? பொதுவாக சரியான உடல் வெப்பமானது 37°C அல்லது 98.4F பரன்ஹைட் எனக் கொள்வார்கள். ஆனால் இது ஆளுக்காள் மாறுபடலாம். 98.4 ஐ விட 0.9 பரன்ஹைட் கூடுதலாகவோ குறைவாகவோ இருந்தாலும் அது இயற்கையானதே.

ஒரே நபருக்கு 24 மணிநேரமும் உடல் வெப்பமானது ஒரே அளவில் இருக்கும் என்பதில்லை. 0.25°C முதல் 0.5°C மாற்றங்கள் தினசரி ஏற்படும். பொதுவாக அதிகாலை 4 மணிக்கு மிகக் குறைவாகவும், மாலை 6 மணியளவில் அதிகமாகவும் இருக்கும். இத்தகைய மாற்றங்கள் தினசரி ஏற்படுவதால் உடல் வெப்பமானது 99.5 F அல்லது 37.5°C க்கு மேல் இருந்தால் மட்டுமே காய்ச்சல் என்று எடுத்துக் கொள்வோம்.

எனவே மேற்கூறிய அளவுகளுக்குள் உங்கள் உடல் வெப்பம் இருந்தால் அது இயற்கையானதே. அதையிட்டு நீங்கள் அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

இருந்தபோதும் நீங்கள் உங்கள் உடல் சூடாக இருப்பதாக உணர்வதால் அதற்கு மருத்துவ ரீதியான காரணங்கள் ஏதாவது இருக்கிறதா என்பதை ஆராய வேண்டும். அப்படி இருந்தால் அதற்கான தீர்வை அறிய முனைய வேண்டும். நீங்கள் அதைச் செய்ய முனைந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

பொதுவாக மிகவும் எடை குறைவாக மெலிந்து உள்ளவர்கள் சிறிய குளிரையும் தாங்க மாட்டார்கள். காய்ச்சல் காய்வது போல உணர்வார்கள். இதற்குக் காரணம் அவர்களது சருமத்தில் உள்ள கொழுப்பின் அளவு குறைவு. இதனால் குளிர் வேகமாக உடலைத் தாக்கும் அதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. காய்ச்சல் அடிக்கிறது, உடல் சூடாக இருக்கிறது என்றே எண்ணுவார்கள்.



மாறாக அதீத எடை உடையவர்கள் உடல் வெக்கையாக இருப்பது போல உணர்வார்கள். சூழல் வெப்பம் சற்று அதிகமாக இருந்தாலும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். வெக்கையாக இருக்கிறது எனக் கஸ்டப்படுவார்கள். வியர்வையும் அதிகமாகக் கொட்டும்.

உங்கள் எடையானது உயரத்துக்கு ஏற்றவாறு அளவாக இருக்கிறதா என அளந்து பார்த்திருக்கிறீர்களா? உடற்திணிவுக் குறியீடானது (BMI) 18.5 முதல் 23க்குள் இருந்தால் சரியான எடையாகும்.

தைரொயிட் சுரப்பி நோய்கள் மற்றொரு முக்கிய காரணம். உங்கள் தைரொயிட் சுரப்பி வழமைக்கு அதிகமாக வேலை செய்தால் உங்கள் உடலில் தைரொயிட் ஹோர்மோனின் அளவானது அதிகமாக இருக்கும். இது உடலில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வரலாம். உடல் மெலியலாம். பசி அதிகமாகலாம். நெஞ்சுப் படபடப்பு ஏற்படலாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக உடல் சூடாக இருப்பதான உணர்வு ஏற்படும். மருத்துவ ஆலோசனையுடன் TSH என்ற குருதிப் பிரிசோதனை செய்வதன் மூலம் இந்த நோய் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இவற்றைத் தவிர உடல் வெப்பமாக இருப்பதற்கு வேறு சில காரணங்களையும் சொல்லலாம். அவை உங்களுக்கு பொருந்தாது என்றபோதும் அறிந்திருப்பது நல்லதல்லவா?

கோப்பி அதிகமாக அருந்துவதும், காரமான உணவுகளை அதிகமாக உட்கொள்வதும் கூட உடல் வெப்பமாக இருப்பதற்குக் காரணமாகலாம். நீரிழிவு நோயுள்ளவர்களின் குருதிக் குழாய்கள் காலம் செல்லச் செல்ல இயற்கையான செயற்திறனை இழக்கின்றன. முக்கியமாக விரிவடையும் திறன் குறைகிறது. இதனால் மேலதிக வெப்பம் வெளியேறுவது தடைப்பட்டு உடல் வெப்பமாக இருக்கும் உணர்வைக் கொடுக்கும்

நீங்கள் ஆண். ஆனால் பெண்களில் மாதவிடாய் முற்றாக நிற்கும் காலங்களில் உடல் வெப்பமாக உணர்வது சகசமானது. உங்கள் உடல் வெப்பம் இயற்கையானதா, வேறு காரணங்களால் எற்பட்டதா என கண்டறிந்து கொள்வீர்கள் என நம்புகின்றேன்.

**மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.**



# இருட்டு அரசியல்

■ புவி

ஒரு இடைத்தேர்தலில் கிடைத்த வெற்றி, தினகரனின் மீது திடீரென்று ஒரு எதிர்பார்ப்பையும்தொடர்வெளிச்சத்தையும் உருவாக்கியிருந்தது. அதை, இந்த மக்களவைத் தேர்தல் இல்லாமலாக்கிவிட்டது. அதிமுகவின் வாக்குவங்கியைச் சிதறடித்து சரிபாதி தொகுதிகளிலாவது அதன் தோல்விக்குக் காரணமாக இருப்பார் என்று கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் பேசினார்கள். 'சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றிரண்டில் வெற்றி பெறுவார், தேனி மக்களவைத் தொகுதியில் தங்க.தமிழ்ச்செல்வனுக்கு வாய்ப்பு உண்டு, இல்லையென்றால் அதிமுகவாக்குகள்பிரிந்து, காங்கிரஸ்வெல்லவாய்ப்பிருக்கிறது' என்றெல்லாம் கணிக்கப்பட்டது. கடைசியில், எந்தத் தொகுதியிலும் வெல்லவில்லை என்பதோடு அதிமுகவின் வாக்குகளையும் தினகரனால் பிரிக்க முடியவில்லை.

கட்சியில் பழனிசாமியின் பிடி வலுவாக இருக்கிறது என்பது உறுதியாகிவிட்டது. ஒன்பது சட்டமன்றத் தொகுதிகளில் வெற்றிபெற்றிருப்பதன் மூலம், தனது ஆட்சியைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. அதிமுகவுக்கு சட்டமன்றத்தில் பெரும்பான்மை இழுபறியாக இருந்தபோதே, தினகரனின் பக்கம் வருவதற்கு அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள்தயங்கினார்கள். இப்போது சட்டமன்ற இடைத்தேர்தலில் பெரும்பான்மையைத் தக்கவைத்துக்கொண்டதோடுமத்தியில் ஆளும் பாஜகவோடும் நெருக்கம் காட்டிவருகிறது அதிமுக. இப்படியொரு நிலையில்,'ஸ்லீப்பர் செல்கள்' என்று தினகரன் சொல்லிக்கொண்டிருக்கலாமே ஒழிய யாரும் அவர் பக்கம் திரும்பிப்பார்க்க மாட்டார்கள். அவரது சிபாரிசில், சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிடவாய்ப்பு கிடைத்தவர்கள், அவரை ஆதரிப்பார்கள் என்பதுதான் தினகரனின் ஒரே நம்பிக்கை. அதுவும்பொய்த்துப்போய்விட்டது.


> அதிமுகவுக்குள்ளேயே ஒரு எதிர்ப்பு அணியாக இயங்குவதற்குத் தான் ஆரம்பம் முதலே தினகரன் விரும்பினார். அதிமுக ஆட்சி முடிந்த பிறகு, தலைமைப் பதவியின் நெருக்கடிகளைச் சுமக்க யாரும் தயாராக இருக்க மாட்டார்கள். எதிர்ப்பே இல்லாமல் கட்சியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில் அவர் இருந்திருக்கலாம். ஆனால், அதற்கு பழனிசாமி - பன்னீர்செல்வம் வாய்ப்பளிக்கவில்லை. தினகரனைக் கட்சியைவிட்டு வெற்றிகரமாக நகர்த்திவிட்டார்கள்.

தொண்டர்களில் பெரும்பான்மையினர் என்னோடுதான் இருக்கிறார்கள் என்று பேசினார் தினகரன். அவர் கூறியது உண்மையென்றால் அதிமுகவின் வாக்குவங்கியில் சரிபாதியாவது அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், அவரால் மக்களவைத் தேர்தலில் சுமார் ஐந்து சதவீதம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்திருக்கிறது. தென்சென்னை உள்பட பல தொகுதிகளில் அமமுகவை முந்திக்கொண்டு மக்கள் நீதி மய்யம் அதிக வாக்குகளைப் பெற்றிருக்கிறது. பெரும்பாலானதொகுதிகளில் மூன்றாமிடத்தில் இருக்கிறோம் என்பதோடு தினகரன் சந்தோஷப்பட்டுக்கொள்ளவேண்டியதுதான்.

அதிமுகவுக்குள்ளேயே ஒரு எதிர்ப்பு அணியாக இயங்குவதற்குத்தான் ஆரம்பம் முதலே தினகரன்விரும்பினார். அதிமுக ஆட்சி முடிந்த பிறகு, தலைமைப் பதவியின் நெருக்கடிகளைச் சுமக்க யாரும் தயாராக இருக்க மாட்டார்கள். எதிர்ப்பே இல்லாமல் கட்சியைக் கைப்பற்றலாம் என்ற எண்ணத்தில் அவர் இருந்திருக்கலாம். ஆனால், அதற்கு பழனிசாமி - பன்னீர்செல்வம் வாய்ப்பளிக்கவில்லை. தினகரனைக் கட்சியைவிட்டு வெற்றிகரமாக நகர்த்திவிட்டார்கள்.

அப்போதும்கூட கட்சித் தலைவராகும் வாய்ப்பு தனக்கு இன்னும் இருக்கிறது என்றே அவர் நம்பினார். அதனால்தான், அமமுகவைத் தேர்தல் ஆணையத்தில் பதிவுசெய்யாமல் தவிர்த்து வந்தார். கடைசியில், ஒரே சின்னத்தில் போட்டியிடுவதற்காகவே அவர் பதிவுசெய்துகொண்டார். ஒரே சின்னம் கிடைத்தது. ஆனால், வெற்றி வாய்ப்பை அவரால் உருவாக்க முடியவில்லை. அதிமுகவின் வெற்றி வாய்ப்பையும் பறிக்க முடியவில்லை. மக்களவைத் தேர்தலில் அதிமுக அடைந்திருக்கும் தோல்விக்குத் தமிழகத்தில் வீசிய மோடி எதிர்ப்பலையே முக்கிய காரணம். தினகரனுக்கெல்லாம்அதில் பங்கே இல்லை. வேண்டுமானால், மோடி எதிர்ப்பலையை அதிமுகவோடு அவரும் கொஞ்சம்எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று சொல்லலாம்.

விளைவாக, 'அடுத்து தினகரன் என்ன செய்வார்?' என்றிருந்த கேள்வியை இந்தத் தேர்தல் முடிவுகள், 'இனி வருங்காலத்தில் தினகரன் என்ன ஆவார்?' என்பதாக மாற்றிவிட்டிருக்கிறது. ஒருவேளை நடந்து முடிந்த தேர்தலில் அவர் தனது பலத்தைக் காட்டியிருந்தால், எதிர்காலத்தில் கட்சியைத்தன்னைநோக்கிநகரச்செய்திருக்கலாம். இப்போது எல்லாம் மாறிவிட்டது.



### தேர்தல் சொல்லியிருக்கும் செய்தி

இந்தத் தேர்தல் தினகரனுக்கும் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்லியிருக்கிறது. 'மக்கள்ஒருபோதும் சசிகலா குடும்பத்தைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள்' என்பதே அது. தினகரன் பேச்சுமீது ஒரு கவர்ச்சி இருப்பது உண்மைதான். ஆனால், சசிகலாவோ அவருடைய ஏனைய குடும்பஉறுப்பினர்களோ என்றைக்கும் அதை முதலீடாக மாற்றிக்கொள்ள முடியாது.

அதிமுக கடந்து வந்த பாதையில் கட்சியின் முக்கிய தலைவர்கள் பிரிந்துபோவதும் மீண்டும் வந்துஇணைந்துகொள்வதும் வழக்கமான நிகழ்வுகள்தான். எம்ஜிஆர் தலைவராக இருந்த காலத்திலேயே,எஸ்.டி.சோமசுந்தரம், நெடுஞ்செழியன் தொடங்கி செம்மலை, குழ.செல்லையா வரை கட்சியிலிருந்து விலகி, பிறகு மீண்டும் அதிமுகவில் இணைந்தவர்களைப்பற்றி ஒரு புத்தகமே எழுதலாம். உள்ளூர் அளவில் நல்ல செல்வாக்கு இருக்கும் தலைவர்கள் வேறுகட்சிகளை நோக்கி போயிருக்கலாம், இல்லை சுயேச்சையாகவே தொடர்ந்திருக்கலாம். ஆனால், அவர்கள் ஒருபோதும் அதைச் செய்யவில்லை. அதிமுக வழியாகக் கிடைத்த அறிமுகமும் ஆதரவுமே அவர்களது செல்வாக்கு உயர ஒரே காரணம் என்று நம்பி மீண்டும் சொந்தக் கட்சியில் இணையவே முடிவெடுத்தார்கள்.

அவர்களையெல்லாம் எந்தத் தயக்கமும் இல்லாமலும் கட்சித் தலைமை சேர்த்துக்கொண்டது. அதேசமயம்,அனைவருக்கும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்பது கட்சித் தலைவரின் நோக்கமாக இருக்கிறபோது உள்ளூர் அளவில் தங்களுக்கு செல்வாக்கு இருக்கிறது என்பதை நிரூபித்தாக வேண்டிய கட்டாயம் இரண்டாம் கட்டத் தலைவர்களுக்கு இருந்தது. அதை நிரூபித்தவர்கள் தமது பதவிகளைத தக்கவைத்துக்கொண்டார்கள்.

### கேள்விக்குறியாகியிருக்கும் எதிர்காலம்

ஆகையால், அதிமுகவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் கட்சியில் இணைந்துகொள்வது அக்கட்சிக்குப் புதிதல்ல. இதையே பழனிசாமியும் பன்னீர்செல்வமும் மந்தையிலிருந்து பிரிந்து சென்றவர்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பு நினைவூட்டுகிறது. ஆனால், இந்த வரலாறு தினகரனுக்குப் பொருந்தாது. ஏனென்றால், அவர் இரண்டாம் நிலைப் பதவிகளை அல்ல் தலைமைப் பதவியைக் குறிவைக்கிறார். ஒருவேளை இப்போது, 'பதவியே வேண்டாம்' என்று சொல்லி உள்ளே நுழைந்தாலும் கட்சிக்குள் வந்த பிறகு மொத்தக் கட்சியையும் கபளீகரித்துவிடுவார் என்பதில் யாருக்குமே சந்தேகம் இல்லை. மேலும், இந்த ஒரு விஷயத்தில் பழனிசாமி, பன்னீர்செல்வம் இருவருமே சசிகலா குடும்பத்தைப் பொது எதிரியாகக் கருதுவதால் எதிர்காலத் தலைமைப் பிரச்சினை அந்த இருவருக்குள்தான் சுற்றுமே தவிர, தினகரனை நோக்கித் திரும்புவதற்கான சாத்தியங்கள் இப்போதைக்குத் தெரியவில்லை. ஆக, இந்த மக்களவைத் தேர்தல் வெறும் தோல்விகளை மட்டும் தினகரனுக்குப் பரிசளிக்கவில்லை. அவருடைய எதிர்கால அரசியலின் மீதே கடும் இருட்டைப் போர்த்தியிருக்கிறது. ■

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்கின்றார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# பால்டயஸ் பாதிரியாரின் டயறி

வண்ணார் பண்ணை தேவாலயம் யாழ் நகருக்கு அருகில் உள்ளது. இங்கு சலவைத் தொழிலாளர்கள் கூடுதலாக வசிக்கின்றனர். சலவைத் தொழிலாளர்களை தமிழில் வண்ணார் என்று அழைப்பர். இதன் காரணமாக இந்த இடம் வண்ணார் பண்ணை என அழைக்கப்படுகிறது. இங்குள்ள தேவாலயம் சிறிதுமன்று பெரிதுமன்று. இந்தத் தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 200 மாணவர்களும் 600 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

நல்லூர் தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 590 மாணவர்கள் உள்ளனர். இவர்களுக்கு கிறிஸ்தவம் பற்றி போதிய அறிவு இல்லை. இவர்கள் இப்போதும் சைவசமய நம்பிக்கைகளில் ஊறிக்காணப்படுகின்றனர். இவர்கள் இப்போதும் நெற்றியில் விபூதி பூசிக்கொண்டு திரிகின்றனர். நல்லூரில் உள்ள எமது பாடசாலைக்கு ஒரு சில முஸ்லீம் மாணவர்களும் வரத்தொடங்கினர். யாழ்ப்பாணத்திலேயே நல்ல தண்ணீர் இங்கு தான் கிடைக்கிறது.

சுண்டிக்குளி தேவாலயம் நகருக்கு அருகில் உள்ளது. இங்கு சிவியர் வாழ்ந்து வருகின்றனர். சிவியர் தண்ணீர் காவுபவர்கள். இங்குள்ள தேவாலயம் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு 450 மாணவர்கள் உள்ளனர். இவர்கள் பெற்றோருடன் வேறு இடங்களுக்குச் சென்று மீன் பிடியில் ஈடுபடுபவர்கள். இவர்களுக்கு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இங்குள்ள தேவாலயத்துடன் 1500 பேர் இணைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பட்டினத்தின் இரண்டாவது மாகாணம் தென்மராட்சி. தென்மராட்சியின் முதலாவது தேவாலயம் நாவற்குளியில் உள்ளது. இந்தத் தேவாலயம் களிமண்ணால் கட்டப்பட்டு பனையோலையால் மூடி அடைக்கப்பட்டுள்ளது. இங்கு குரங்குகள், வௌவால், ஆந்தைகள் போன்றன காணப்படுகின்றன. இந்தத் தேவாலயத்தில் 400 மாணவர்களும் 700-800 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

நாவற்குழியிலிருந்து ஒருமணித்தியாலத்தில் சாவகச்சேரியை அடைந்து விடலாம். சாவகச்சேரியில் இந்தப் பிரதேசத்திலேயே பெரிய தேவாலயம் கடலை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 1000 மாணவர்களும் 2000-3000 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

சாவகச்சேரியில் இருந்து ஒரு மணித்தியாலத்தில் கைதடியை அடைந்து விடலாம். (நாவற்குழிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தானே கைதடி உள்ளது. என்று குழம்ப வேண்டாம். பால்டயஸ் எழுதி வைத்ததை அப்படியே தருகின்றேன்.) கைதடி சாவகச்சேரிப் பாதை முழுவதும் குளங்கள் காணப்படுகின்றன. குளங்களில் வாத்துக்களும் காணப்படுகின்றன. இங்குள்ள தேவாலயம் நாவற்குழி தேவாலயத்தை ஒத்ததாக அமைந்துள்ளது. இங்கு 550 மாணவர்களும் 1200 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

தென்மராட்சியின் கடைசித் தேவாலயம் நாகர் கோயிலுக்கு அருகில் 'Illandi Matual' என்ற கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது. (இது எந்தக் கிராமம் என்று புரியவில்லை.) இத் தேவாலயம் களிமண்ணால் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று விசாலமான மண்டபங்களைக் கொண்டதாக இத் தேவாலயம் கோபுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு யானைகளும் மயில்களும் காணப்படுகின்றன. எமது தேவாலயத்தின் பராமரிப்பிலும் சில யானைகள் உள்ளன. இங்கு 650 மாணவர்களும் 1100-1200 நற்செய்தியாளர்களும் உள்ளனர்.

(சமர் தொடரும்)

# ஊர் உறங்கும் வேளையில்...

மாற்றம் ஒன்றே மாறாதது என்பார்கள். அதற்காக இன்றைய உலகில் ஓவர் நைற்றிலேயே பல மாற்றங்கள் அரங்கேறிய வண்ணம் உள்ளன. இவற்றை மாற்றங்கள் என்று சொல்ல முடியாது ஓவர் நைற்றில் அரங்கேறும் கூத்துக்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஒரு புறம் கேலிக்கூத்தாக இருந்தாலும் மறுபுறம் ஓர் அச்ச உணர்வு. அவற்றை முன்நின்று அரங்கேற்றுவதில் எமது நாடும் சளைத்ததல்ல என்று நிரூபித்துக் கொண்டிருக்கின்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகளில் ஆட்சி மாற்றங்கள், நாடாளுமன்றம் கலைக்கப்படுதல், பதவிமாற்றங்கள், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல், உணவுப் பொருட்களின் விலைகளில் மாற்றம், எரிவாயு, எரிபொருட்களின் விலைகளில் மாற்றம், பஸ் போக்குவரத்துக் கட்டணங்களில் மாற்றம் இவ்வாறு ஊர் உறங்கும் வேளையில் பல மாற்றங்கள் நடந்தேறிவிடுகின்றன.

இவ்வாறான நிலைமை விடிந்தால் என்னவெல்லாம் நடக்குமோ?, என்னவெல்லாம் மாறப்போகுதோ? என்கின்ற பய உணர்வுடனேயே மக்களை வாழவைக்கின்றது. தினமும் பயந்து பயந்து வாழும் வாழ்க்கை மக்களின் இயல்பு நிலையைப் பாதிக்கின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நள்ளிரவில் அரங்கேறிய கூத்து மக்களை குழப்ப நிலைக்குத் தள்ளியது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து விலக்கி மகிந்தராஜபக்சவினை பிரதமராக நியமித்தார். இந்த நாட்டில் மட்டும்தான் இவ்வாறான கூத்துக்கள் அரங்கேறும். இது நாட்டில் பல்வேறு குழப்பநிலைமைகளுக்கு காரணமாக அமைந்தது. மக்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கம் ஜனநாயக செயற்பாடுகளை முன்னெடுத்து மக்களுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும். ஆனால் இங்கு அதற்கு மாறாக தம்முடைய சுயலாபத்துக்காக குழப்பங்களை உண்டுபண்ணுகிறார்கள். இது முறையானதொன்றல்ல.

எமது நாட்டின் பெரிய மூலதனமே கல்விதான். கல்வியில் மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தவும், அவர்களின் வாழ்க்கைக்கான அடையாளத்தை கொடுப்பதற்காகவும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. குறிப்பாக க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அத்தகைய பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்குக் கூட நம் அரசு நள்ளிரவினை தமது நாட்காட்டியில் குறித்து வைத்திருக்கின்றது. அதுதான் நல்ல நேரமோ என்னமோ? ஆனால் இதனால் பாதிக்கப்படுவது யார்? மாணவர்களே. எப்போ வரும் எப்போ வரும் என தம் பெறுபேறுகளுக்காகக் காத்திருந்து அது நள்ளிரவில் வந்து சேர்வதால் மாணவர்கள் பல்வேறு உடல், உளரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர்.

நகரப் பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு பெறுபேறுகளைப் பார்வையிட தொழில்நுட்ப ரீதியான வசதிவாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதால் அவர்கள் இந்த வரையறைக்குள் உள்ளடங்குவது மிகவும் குறைவு. எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற கிராமங்களில் வாழும் மாணவர்களில் சிலர் பரீட்சை முடிவை பார்வையிட கையடக்கத் தொலைபேசிகூட இல்லாத நிலையில் இரவு நேரத்தில் வெளியில் கடைகளுக்குச் சென்று விபத்துக்களில் சிக்கியும் தெருநாய்களிடம் கடிவேண்டியும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பரீட்சை முடிவுகள் பொருத்தமற்ற நேரத்தில் வெளியிடப்படுவதனால் சிலர் தமது எதிர்காலத்தை இழக்க வேண்டியும் ஏற்படுகின்றது. அண்மையில் அவ்வாறான சம்பவங்கள் நடந்தேறியுள்ளன.

அடுத்தது காலையில் பத்திரிகைகளைத் திறந்தால் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்பு, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெயின் விலை அதிகரிப்பு என்று இருக்கும். இரவோடிரவாக அவற்றின் விலைகளையும் அதிகரித்துவிடுவார்கள். குறிப்பாக பால்மா, அரிசி, பேக்கரி உற்பத்திகள் போன்றவற்றின் விலைகளில் தீடிர் அதிகரிப்புக்கள் இடம்பெறுவதால் நுகர்வோர் மாத்திரம் அன்றி கொள்வனவாளர்கள் மற்றும் விற்பனையாளர்களும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

இலங்கை ரூபாவின் பெறுமதி உலகசந்தையில் வீழ்ச்சி கண்டுள்ளதால் இத்தகைய விலை அதிகரிப்புக்கள் இடம்பெறுகின்றன. இருப்பினும் இந்தவிலை அதிகரிப்புக்கள் மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படுகின்றமைதான் நியாயமற்றது. அத்தோடு எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மீண்டுமொருமுறை பொதுப்போக்குவரத்துச் சேவைக்கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம்.

அதேநேரம் ஒவ்வொரு மாதமும் எரிபொருளின் விலையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ராஜிதசேனாரத்ன தெரிவித்தார். அதற்கமைய மாதம் தோறும் 10ஆம் திகதி எரிபொருள் விலைத்திருத்தம் மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

இந்த நிலைமையில் எரிபொள் விலை அதிகரிப்புக் குறித்த விலைச்சூத்திரம் தொடர்பில் தமக்கு தெளிவுபடுத்தப்படவில்லை இது தொடர்பில் தம்முடன் கலந்துரையாடுமாறு நிதியமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இதேவேளை டீசல் விலை அதிகரிப்பு தனியார் பஸ் உரிமையாளர்களுக்குப் பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளதாகவும் நிலைமைகளை சமாளிக்க அடுத்தகட்ட செயற்பாடுளை தமது சங்கத்துடன் கதைத்து கலந்துரையாடி பொதுப்போக்குவரத்து சேவைக்கட்டணத்திருத்தம் தொடர்பில் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான அரசின் திடீர் செயற்பாடுகளால் பொதுமக்கள் பல்வேறு குழப்பங்களுக்கு ஆளாக நேர்கின்றது. எதில் மாற்றத்தைக் கொண்டுவருவதாக இருப்பினும் அது தொடர்பில் மக்களுக்கான முற்கூட்டிய அறிவித்தல் விடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந் நிலைமைகளை எதிர்கொள்ள மக்கள் தங்களை தயார்படுத்திக்கொள்வர். மாறாக நினைத்த நேரத்தில் அரசு எடுக்கும் இவ்வாறான திடீர் முடிவுகள் அரசு மீதான ஸ்திரத் தன்மையினை இழக்கச்செய்கின்றது.

நல்லாட்சி அரசாங்கம் என்ற போர்வையில் குழப்பகரமான திட்டங்களை அரங்கேற்றும் பொறிமுறையே எமது நாட்டில் காணப்படுகின்றது. சில முடிவுகளை எடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு முற்கூட்டியே அறிவிக்காமல் இருப்பது, மக்கள் அதனை ஏற்க மறுத்துவிடுவார்கள் என்பதனை உணர்த்துவது போல் தென்படுகின்றது. இனிமேலாவது ஊர் உறங்கும் வேளையில் மக்களை திண்டாட்டத்துக்கு உள்ளாக்கும் நாடகங்கள் அரங்கேறாமல் இருக்கட்டும்.

**கி.கேதீஸ்வரன்**
*ஊடகக் கற்கைகள், யாழ்.பல்கலைக்கழகம்*




● ஆடுகளன்

# முதல் அடி

ஐரோப்பாக் கண்டத்தில் கிளம்பியுள்ள உலகக் கிண்ண சூறாவளி, அந்தக் கண்டத்தை விட ஆசியக் கண்டத்தைத்தான் அதிகம் சுழற்றி அடித்துக்கொண்டிருக்கிறது. அந்தளவுக்கு ஆசியக் கண்டத்தைத் தனக்குள் கட்டுப்போட்டுள்ளது கிரிக்கெட் என்ற சூறாவளி.

கடந்த 30ஆம் திகதி இங்கிலாந்தின் தலைநகரான லண்டன் ஓவல் மைதானத்தில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தொடங்கியது. மொத்தம் 10 அணிகள் பங்கேற்றும் இத்தொடரின் முதல் சுற்றுப் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளுடன் தலா ஒருமுறை மோதும், பின்னர் புள்ளிப் பட்டியலில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

அதில், முதலிடத்தைப் பிடித்த அணி, நான்காவது இடத்தைப் பிடித்த அணியுடனும், இரண்டாவது இடத்தைப் பிடித்த அணி, மூன்றாவது இடத்தைப் பிடித்த அணியுடனும் அரையிறுதிகளில் மோதும், இவற்றில் வெற்றிபெறும் இரு அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இறுதிப்போட்டி ஜூலை 14ஆம் திகதி நடைபெறும்.

ஆட்டத்தின் முறை இப்படியிருக்க, இந்தச் சூறாவளியில் சிக்கியுள்ள, அணிகளின் முதல் சிக்கல்கள் குறித்து இங்கே அவிழ்த்துவிடப்படுகின்றன.

நடப்புத் தொடரின் முதல் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்திலுள்ள இங்கிலாந்தும், தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள பலமான தென்னாபிரிக்காவும் களம் கண்டன.

முதலாடிய இங்கிலாந்து, 308 ஓட்டங்களைக் குவிக்க, பின்னராடிய தென்னாபிரிக்கா 207க்குள் சுருட்டிக்கொள்ள, தாய் மண்ணில் வைத்து தென்னாபிரிக்காவுக்கு முதல் வெடி வைத்து நெஞ்சை நிமிர்த்திக்கொண்டது இங்கிலாந்து.

இரண்டாவது நாளில், நால்வரின் இரட்டை ஓட்டக் கணக்குகளுடன் ஒரு மாதிரியாக சதம் கண்ட பாகிஸ்தான் அணி, மேலதிகமாக 5 ஓட்டங்களைச் (105) சேர்த்து அரைவாசி ஆட்டத்தைக் கூட (21.4 ஓவர்களில்) ஆட முடியாமல் பரிதாபத்துக்குள்ளானது. சும்மாவே 'காட்டு'த்தனமாகக் காட்டும் மேற்கிந்தியர்களுக்கு, இந்த ஆட்டத்தை 13.4 ஓவர்களில் முடித்துக்காட்டுமளவுக்கு சுலபமாகியது இலக்கு. இந்த அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 108 ஓட்டங்களைச் சேர்த்து முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

மூன்றாவது ஆட்டம், ஏற்கனவே வால்கள் வெட்டி அல்லது சுருட்டிக் கட்டப்பட்ட நிலையில் களமிறக்கப்பட்ட இலங்கையால், வெற்றி வேட்கையுடன் களமிறங்கிய நியூஸிலாந்துக் காரர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது.

முதலில் ஆடிய இலங்கை, அணித் தலைவர் கருணாரத்னவின் அரைச் சதத்துடன் (52*) ஒருமாதிரியாக இழுபட்டுக்கொண்டு வந்து 29.2 ஆவது ஓவரில் 136 ஓட்டங்களுடன் வீழ்ந்தது. பின்னர் களத்துக்குள் வந்து அங்குமிங்கும் நின்றுகொண்டிருந்த வால்கள் சுருட்டப்பட்ட சிங்கங்களைப் பார்த்துச் சிரித்து விட்டு, மட்டையைச் சுழற்றிய குப்தில் (73), முன்ரோ (58) ஜோடி, தமது சக வீரர்களுக்கு ஓய்வை வழங்கி, 16.1 ஓவர்களில் வெற்றியிலக்கைக் (137) கடந்தது.

அடுத்து கடந்த முதலாம் திகதி நடைபெற்ற மோதலில் மேற்கிந்தியர்களுக்கு பாகிஸ்தானும் நியூஸிலாந்துக் காரர்களுக்கு இலங்கையும் வந்துவாய்த்ததுபோல, அவுஸ்திரேலியர்களுக்கும் மற்றொரு ஆசியக் குலாம் சிக்கியது போல எண்ணப்பட்டதுதான் ஆப்கானிஸ்தான்.

ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததைவிட தமது ஆட்டத்தை 38.2 ஓவர்கள் வரை கொண்டு சென்றதுடன், இரட்டைச் சதத்தையும் (207) கடந்து தமது ஆற்றலை வெளிப்பிடுத்திவிட்டார்கள்.

ஆனாலும், அவுஸ்திரேலியர்களுக்கு இது பெரியதொரு இலக்கு அல்ல. இதனால் அவர்கள் 34.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களை அடைந்து வெற்றியை உறுதிப்படுத்தினர்.

கடந்த இரண்டாம் திகதி, தமது முதல் பாய்ச்சலில் வங்கத்துப் புலிகள், தென்னாபிரிக்கர்களை அவர்களது இரண்டாவது வீழ்தலில் எதிர்கொண்டனர்.

முதலில் பாய்ந்தடித்து 6 விக்கெட்டுகளை இழந்து 330 ஓட்டங்களைச் சேர்த்த வங்கத்துப் புலிகள், பின்னர் இலக்கை நோக்கி வந்துகொண்டிருந்த தென்னாபிரிக்காவுக்குப் பல தடைகளைப் போட்டு பாதிவழியுடன் திருப்பி அனுப்பிவிட்டனர். 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 309 ஓட்டங்களைச் சேர்த்த தென்னாபிரிக்க அணி, தனது இரண்டாவது ஆட்டத்திலும் தோல்வியைக் காண, தனது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி வெற்றியை ருசித்தது.

இவை அணிகளின் முதல் ஆட்டங்களின் கள நிலவரம்.

இதன்படி அணிகள் எதிர்கொண்ட முதல் ஆட்டங்களில் மேற்கிந்தியத் தீவுகள், நியூஸிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணிகள் வெற்றிபெற, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகள் தோல்வியைத் தழுவியுள்ளன.

இதில், இலங்கை, பாகிஸ்தான் அணிகளின் ஆட்டம் மோசமானதாக அமைந்துள்ளமை வீரர்களுக்கும், ரசிகர்களுக்கும் பேரதிர்ச்சியாகும்.

அந்த அணிகள் மீண்டெழுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா இல்லையா, என்பதை அவர்களின் ஆட்டங்களின் முடிவுகளே தீர்மானிக்கும்.

அதேவேளை, தென்னாபிரிக்காவுக்கு எதிரான இங்கிலாந்து - பங்களாதேஷ் அணிகளின் ஆட்டங்கள் பிரமிக்க வைத்தன. அவற்றின் சரவெடி ஆட்டங்கள் தொடர்ந்த அந்தந்த அணிகளின் தரப்புகளுக்கு கொண்டாட்டம்தான்.

இதேவேளை, இப்பத்தி எழுதப்படும்போது, இந்திய எந்தவொரு போட்டியிலும் பங்கேற்றிருக்கவில்லை. அந்த அணியின் முதல் ஆட்டம் ஜூன் 05ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது.



இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.06.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.